# நாயகன் நாயகி

கோவி. மணிசேகரன்

குறள் நிலையம்
19, 2வது மெயின் ரோடு சி.ஐ.டி. நகர்
சென்னை - 600035

வெளியீடு எண் : 2

முதற் பதிப்பு : ஜனவரி, 74

உரிமை ஆசிரியருக்கு

**விலை ரூ. 4 - 00.**

அச்சிட்டோர் :

மூவேந்தர் அச்சகம், சென்னை–14.

# எங்கள் புதிய வெளியீடுகள்

**கோவி. மணிசேகரன்**

| | | |
|---|---|---|
| குடவாயில் கோட்டம் — | 8 | 00 |
| நாயகன் நாயகி | 4 | 00 |
| ராஜசிம்மன் காதலி | 6 | 00 |

**வே. கபிலன்**

| | | |
|---|---|---|
| புலிநகம் | 6 | 50 |
| நாக நந்தினி | 5 | 00 |
| உவகைப்பூ | 10 | 00 |

**ராதா வீரண்ணன்**

| | | |
|---|---|---|
| ஊர்க் காவலன் | 10 | 00 |
| அன்பில் வாழும் இதயம் | 6 | 00 |

**எம். வி. வெங்கட்ராம்**

| | | |
|---|---|---|
| ஆண்டவன் வந்தான் | 10 | 00 |

**புலவர் புரவலன்**

| | | |
|---|---|---|
| பேராற்றல் பெற்ற பெண்கள் | 3 | 00 |

**பத்மா ராஜகோபாலன்**

| | | |
|---|---|---|
| நாம் வந்த வழி | 6 | 00 |

# நாயகன் நாயகி

## ஒன்று

**சி**றந்து விளங்கும் திறந்த காவியம்போல் காஞ்சிக் கன்னி கண் மலர்கிறுள்! இதழ்களிலே புலரிப் புன்னகை; இதயத்திலே பல்லவ ஆட்சியின் மெய்லிய துடிப்பு! சிம்ம வர்ம பல்லவரின் உதயகால கீதம்!

அலைக்கரம் கொட்டி ஆர்ப்பரிக்கும் வேகவதியாற் றங்கரையில் கம்பீரத்துடன் தோற்றமளித்தது சேனுதி பதி மாளிகை. வாசல்கள் தோறும் வாழை மரங்களையும் கமுகு மரங்களையும் நிறுத்தி மாவிலைத் தோரணங்களை இந்தக் கோடிக்கு அந்தக் கோடியாகக் கட்டி அலங்கரித் திருந்தனர். முகப்பு வாயிலில் பெரிய பந்தல். ஒப்பனை யுடன் விளங்கிய அந்தப் பந்தலின் கீழ் உறவினர்களும், நண்பர்களும், அரண்மனைப் பிரமுகர்களும் அமர்ந்து காணப்பட்டனர்.

தஞ்சையிலிருந்து வரவழைக்கப்பட்ட நாகசுரக் காரர்கள் நாட்டைப் பண்ணை அலசி, வந்திருப்பவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தனர்.

வேதவல்லியம்மையார் இருப்புக் கொள்ளாமல் மாளிகையும் வீதியுமாக அலைமோதிக் காணப்பட்டாள். யாருக்காகவோ அந்த அம்மாள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள் என்பது மற்றவர்க்குப் புரியாமலில்லை. கணவர் குன்றத்தூர்க் கிழார்கூட ஓரிரு முறை கண்டித்தும் விட்டார். "வேதம்! வருகிறவள் வரட்டுமே! நீ ஏன் இப்படி அலைமோதுகிருய்?"

மனைவியை அவர் செல்லமாக 'வேதம்' என்றுதான் அழைப்பார். வேதவல்லியம்மையும் கணவர் கூறியதைக் காதுகளில் போட்டுக் கொள்ளாமல் அருமை மகள் கமலக்கண்ணியின் வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

வீட்டுக்கே தலைப்பெண்ணுயிற்றே! கணவர்க்கு நூற்றுண்டு விழா—சதாபிஷேகம் நடக்கப் போகிற இந்த வேளையில் மூத்தமகள் வந்திருந்து மகிழ்ச்சியுடன் கலந்து கொள்ளாதது எந்தத் தாய்க்கும் வேதனையளிக்கக்கூடியதுதானே? ஆனல் அந்த மகளுடைய தலையெழுத்து ஓர் அக்கிரமக்காரனுக்கு வாழ்க்கைப்பட நேர்ந்து விட்டது. இதைப் புரிந்து கொண்டுதான் விழாத்தலைவரான குடும்பத்தலைவர் குன்றத்தூர்க் கிழார் மனைவியைக் கடிந்து கொண்டார். என்ன இருந்தாலும் தாய் மனம் கேட்குமா?

பொதுவாகவே தாயானவள் மகனுக்கும் மீறிய அன்பை மகளிடம்தான் செலுத்துகிருள். சொல்லுவார்கள்: மகன் மீது தாயும், மகள் மீது தந்தையும் அன்பு செலுத்துவதுதான் பாலுணர்ச்சியின் தத்துவம் என்று! பாலுணர்ச்சி வேறு; அன்பு வேறு. இதில் வேடிக்கை என்ன

வென்றால், மகளை மணந்த மருமகன் மீது இருக்கும் ஒருவித கவனிப்பு, மகனை மணந்த மருமகள் மீது பெரும்பாலான தாய்மார்களுக்கு இருப்பதில்லை. ஆனால் தந்தை மனத்தைப் பொறுத்த வரை, மருமகனை விட, மருமகளைத்தான் அதிகப்படியாக நேசிக்கிறது. இந்தத் தர்க்கரீதியான மனநிலை எந்த நூற்றாண்டிலும் இருக்கத்தான் செய்யும்!

வேதவல்லியம்மைக்கு மருமகன் நல்ல முறையில் அமையாமல் போய்விட்டானே என்ற குறை. குன்றத்தூர்க் கிழார்க்கோ, தம்முடைய அருமை மகன் பல்லவ சேனாதிபதி நாயகனுக்கு ஒரு மனைவியை இன்னும் கொண்டுவர முடியாத நிலை இருந்து வருகிறதே என்கிற குறை. இப்போது நடைபெறப் போகிற நூற்றாண்டு விழா முடிந்ததும், முதற் காரியமாகப் பெண் தேடும் படலத்தைத் தீவிரமாகத் தொடங்கியாக வேண்டும் என்று முடிவு செய்துகொண்டிருந்தார் குன்றத்தூர்க் கிழார்.

மிகவும் நல்லொழுக்கம் வாய்ந்த குன்றத்தூர்க் கிழார்க்கு அன்றோடு நூறு ஆண்டுகள் நிறைவு பெற்றாலும், உடல் வாகுவின் காரணமாக அவரை அறுபது வயதுக்குத்தான் ஒப்பிடலாம். அக்காலத்தில் இது ஒன்றும் வியக்கக் கூடியதல்ல. நூற்று ஐம்பது வயது வரை வாழ்ந்தவர்களும் உண்டு.

நூற்றாண்டு விழாவைக் குன்றத்தூரில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று உறவினர்கள் பலர் வற்புறுத்தினர். நியாயப்படி அவர் அவ்வாறுதான் வைத்துக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் பல்லவ அரசர் தன் மாளிகை நாடி வந்து விருந்துண்டு

மகிழ வேண்டும் என்கிற நீண்ட நாளாசையை இதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ள காஞ்சியில் வைத்துக் கொள்ள முடிவு செய்தான் சேனைநாயகன்—நாயகன். அவனுடைய திருமணத்தின் போதும்கூட இந்த ஆசையை அவனால் நிறைவேற்றிக்கொள்ள முடியாதா என்ன? ஆனால் அப்படி நிறைவேற்றிக் கொள்ள அவன் விரும்பவில்லை. தந்தைக்கு நடைபெறும் நூற்றாண்டு விழாவைவிடத் திருமணம் ஒன்றும் அவ்வளவு பெரிய தல்ல. இன்னொரு திருமணம் நிகழலாம்! இன்னொரு நூற்றாண்டுவிழா நிகழ்வதென்பது இயலாத ஒன்று. மேலும் போர்வீரன் வாழ்க்கை நிலையான ஒன்றல்ல. நாளையே போர் மூளலாம்; படையெடுத்துச் செல்ல நேரிடலாம். போர்க் களத்தில் உயிர் துறக்கும்படியாக வும் நிகழலாம் அல்லவா?

மாளிகையில் அனைவரும் வருகை தந்துவிட்டனர். குன்றத்தூரிலிருந்து மட்டும் ஏறத்தாழ ஆயிரம் பெயர்கள் வருகை தந்திருந்தனர். இவர்களுள் பெரும் பாலானோர் குடியான மக்கள். வயக் காடுகளில் வேலை செய்பவர்கள். உழுதுண்டு வாழ்பவர்கள்.

பல்லவ நாட்டையாளும் சிம்மவர்ம பல்லவ அரசர் வரவேண்டியதுதான். வந்ததும் மந்திரங்கள் ஒலிக்கத் தொடங்கிவிடும்.

சற்றைக்கெல்லாம் அரசர் வந்து விடுவார் என்கிற செய்தி வந்தது. சேனாதிபதி நாயகன் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை. காஞ்சி அரசரைப் பூரணகும்பமுடன் வரவேற்க ஏற்பாடு செய்திருந்தான். அரசர் வருகிறார் என்கிற மகிழ்ச்சியில் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். குறிப்

பாகக் குன்றத்தூர் மக்கள் சற்று அதிகப்படியாகவே எதிர்பார்த்தனர். அவர்கள் அதுவரையிலும் தங்கள் அரசரைக் கண்டதில்லை. சதாபிஷேகத்தைக் காண்பதே ஒரு புண்ணியம். அந்த விழாவில் 'ராஜதரிசனம்' என்பது மிகப் பெரும் புண்ணியமல்லவா?

எல்லாரும் மிக்க ஆர்வமுடன் அரசரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் தன்னுடைய தாயார் மட்டும் அலைமோதிய நெஞ்சுடன் அவதிப்படுவது நாயகனுக்கு என்னமோ போலிருந்தது. தகப்பனாரின் இந்த நூற்றாண்டு விழாவில் இப்படி அன்னையார் அலைமோதித் தவிப்பது அவனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. என்ன செய்யலாம். முறைப்படி தமக்கை கமலக் கண்ணியை மயிலைக்குச் சென்று அழைத்திருந்தான் நாயகன். அவள் வரவில்லை என்றால் இதற்காக யார்தான் என்ன செய்ய முடியும்? குடிகாரனும் கூத்திலோலனும் கொலைகாரனுமான கணவன் வாய்த்தபிறகு என்ன சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டதோ? திருமணமாகிறபோது அவன் — சித்திராதித்தன் நல்ல மனிதனாகத்தானிருந்தான். பொறுப்புள்ள தலைவனாகத்தானிருந்தான். கடல் வாணிபத் துறையில் பணியாற்றி வந்தான். இடைப்பட்ட காலத்தில் விதி தன் விரல்களில் கூரிய நகங்களை வளர்த்துக்கொண்டு பிராண்டும் என்று யார் நினைத்தார்கள். மனிதர்கள் வரைந்து செல்லும் கோலங்களைக் காலம் அழித்துக்கொண்டே போகும் விசித்திரங்களை யாரால் ஆராய முடியும்?

சித்திராதித்தனால் நாயகனுக்கு ஒரு பெருத்த களங்கம்தான். பல்லவ நாட்டின் சேனை நாயகனை அவனுடைய மாமன் இப்படி ஓர் அயோக்கியனாக வாழலாமா? ஆனாலும் நாயகன் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவ

தில்லை. அது அவரவர் தலையெழுத்துப்படியான வாழ்க்கை என்று தன் கடமைகளையாற்றுகிறவன். கடமை என்று வந்துவிட்டால் தாய் தந்தையர்களையும் பொருட்படுத்தாத தூய வீரன்.

ஒரு சமயம் அன்னை வேதவல்லியம்மைக்குக் கொடிய காய்ச்சல் கண்டுவிட்டது. நச்சுக்காய்ச்சல் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். பிழைப்பது அரிது என்கிற முடிவுக்கும் வந்துவிட்டனர். அப்போது காஞ்சியில் பயங்கரப் போர் மேகங்கள் படர்ந்து கொண்டிருந்தன. எந்த நேரத்திலும் பகைவன் காஞ்சியின்மீது படையெடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

பல்லவத் தொடக்க காலமானலும் படை வீரர்களை ஆயத்தப்படுத்துவதில் முனைந்திருந்தான் படைத் தலைவனுகப் பணியாற்றிய நாயகன். வீட்டை மறந்து நோய் வாய்ப்பட்டிருந்த அன்னையை மறந்து நாட்டைக் காப்பதிலும் அன்னை பூமி அழியாமலிருக்க முனைவதிலும் கவனம் செலுத்தினுன். சிம்ம வர்ம பல்லவரும் தனியாக அழைத்து, "அன்னையின் உடலைக் கவனி; அது முக்கியம். நாட்டுக்கு உன்னைப் போல வேறு படைத் தலைவர்கள் இருக்கிருர்கள். ஆனுல் உனக்கிருப்பது ஒரே அன்னை. அவள்தான் உனக்கு முக்கியம்" என்று கடிந்து கூறிப் பார்த்தார். அப்போது நாயகன் சொன்ன மறு மொழி இதுதான்:

"அரசர் என்னைப் பொறுத்தருளவேண்டும். நம் அனைவர்க்கும் ஒரே தாயாக விளங்குகிறவள் தமிழ்த்தாய். அவளைக் காக்கிற பொறுப்புதான் தலையான பொறுப்பு!"

வாயடைத்துப் போனுர் சிம்ம வர்ம பல்லவர். நாயகனுடைய கடமை பற்றி அவருக்குத் தெரியாததல்ல. அப்

போது அவருடைய நெஞ்சில் நாயகன் மிகப் பெரிய உருக்கொண்டு அமர்ந்து விட்டான்.

தந்தையார் குன்றத்தூர்க் கிழாரும்கூட, "கொள்ளிப் போடவேண்டியவன் நீ! நீ போருக்குப் புறப்பட்டுவிட்டால், பிறகு நிலை என்னுவது?" என்று கேட்டார் நனைந்த கண்ணும், விம்மிய நெஞ்சமுமாக! அவருக்கு மனைவிபால் மிகுந்த அன்பு. தம் வாழ்வில் கிடைத்த நவரத்தினப் புதையலுக்கு ஒப்பாக மனைவியை நேசிப்பவர். அவருடைய நெஞ்சம் விம்மி வெடிக்காமல் போய்விட்டது தான் வியப்பு.

நாயகனுக்கு இவை யாவும் புரியும். ஆனலும் அவனுடைய நெஞ்சம் நாட்டின் கடமைகளில் பெரிதும் ஈடுபட்டுவிட்ட ஒன்று. "அப்பா! பகைவன் தமிழ்த்தாய்க்கே கொள்ளி வைக்க வருகிருன். அதைவிட இது எனக்கு அவ்வளவாகத் தெரியவில்லை. என்னை வழிகூட்டியனுப்புங்கள்."

ஆகா! நாட்டுப்பற்றும் கடமையாற்றும் ஆர்வமும் நிறைந்த இவனைப் பெற்றதில் பெரும்பயன் கண்டேன் என்ற நிறைவுடன் வாழ்த்தி வழி கூட்டியனுப்பி வைத்தார் குன்றத்தூர்க் கிழார். போரில் பகைவனை ஓடஓட விரட்டியதுமல்லாமல் எல்லை வரை சென்று அதனைத் தீக்கிரையாக்கி, வெற்றி மாலை சூடித் திரும்பி வந்த மைந்தனை, அன்னை வேதவல்லியல்லவா வரவேற்றுக் கண்ணேறு கழித்தாள். நோய் தீர்ந்த அன்னையைக் கண்டதில் நாயகன் அடைந்த மகிழ்ச்சியை அளவிட்டுக் கூற முடியாதே! அன்னைத் தமிழுக்கு வரவிருந்த நோய் மட்டுந்தாஞ தீர்ந்தது? அன்னையின் நச்சு நோயும் தீர்ந்துவிட்டது என்று நினைக்கையில் நல்ல ரத்தமுடைய எந்த

மகனுக்கும் எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கை தானே?

இது ஒரு நான்காண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி.

மேளங்கள் முழங்கிய வண்ணமிருந்தன.

சிம்மவர்ம பல்லவர் தம் பட்டத்தரசியுடன் வருகிறார் என்ற செய்தி எட்டியதும், குழுமியிருந்த வட்டத்தில் ஒரு சலசலப்பு எழுந்தது. சேனாதிபதி நாயகன் எழுந்து சென்று முறைப்படித் தக்க மரியாதைகளுடன் பூரண கும்பம் எதிர்கொண்டு வரவேற்றான். குன்றத்தூர்க் கிழாரும் வேதவல்லியம்மையும் கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி வரவேற்றனர். பெரிதாகப் போடப் பெற்ற பந்தலே அசைந்து ஆட்டம் காணுகிற அளவுக்கு வந்திருந்தவர்கள் நெரிசலுடன் அரசரை எட்டியெட்டித் தலை தூக்கிக் கவனிப்பதில் ஈடுபட்டனர். பந்தலில் நுழைந்ததும் திடுமென்று வானே அதிருமளவுக்கு வாழ்த்துக்குரல்கள் எழுந்தன. மேளங்கள் உச்ச நிலையில் ஒலிக்கத் தொடங்கின.

மாளிகையினுள் பல்லவ அரசர் நுழைந்தார்; மந்திரங்கள் எழுந்தன.

பெரிய கூடத்தில் நடு நாயகமாகப் போடப்பெற்றிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். பக்கத்திலிருந்த ஆசனத்தில் பட்டத்தரசி அமர்ந்தாள்.

மங்கல மேளம் முழங்கச் சதாபிஷேகம் இனிது முடிந்தது. காஞ்சி அரசர் தாம் கொண்டு வந்திருந்த பொற்கிழியை அவிழ்த்தார். அதனுள் நூறு பொற்காசுகள்

இருந்தன. கிழார்மீது பொன் மாரி பொழிந்தது. அத்துடன் நூறு நல் முத்துக்களைக் கொண்ட மாலையை பரிசாக அளித்தாள் காஞ்சி அரசி.

நூற்றாண்டு விழா இனிது நிறைந்தது.

விருந்து ஆரம்பமானது. அரசரும் அரசியும் வேண்டுகோளை மறுக்காமல் பெயருக்கு உண்டு முடித்தனர். பின்னர் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டனர்.

உச்சிப்போதுக்கு இரண்டரை நாழிகைக்கு முன் தொடங்கப்பெற்ற விருந்து ஏழரை நாழிகைக்கு மேலாகியும் இன்னும் முடிவு பெறாமல் இருந்தது. வேதவல்லியம்மையின் மனக் குறை இன்னும் தீரவில்லை. அரண்மனைப் பணியாட்கள் விருந்தில் எந்தவிதக் குறையும் ஏற்படக் கூடாது என்பதில் மிக்கக் கவனம் செலுத்தி ஓடியாடிக் கவனித்தனர். அனைத்துக்கும் மேற்பார்வையாக நின்று கவனித்தான் நாயகன். அவன் இன்னும் உணவருந்த வில்லை; அப்படி உண்பதும் பண்பல்ல என்பது அவனுடைய கருத்து. அப்போது தம்பி அருண்மொழி தாங்கலுடன் நொண்டியவண்ணம் அருகே வந்தான். "அண்ணா! இன்னும் நீங்கள் உணவருந்தவில்லையாமே!"

தம்பியைக் கண்ட நாயகன், அன்புடன் தோளைத் தடவிகொடுத்து, "நீ உண்டு முடித்துவிட்டாயா தம்பீ?" என்றான்.

அருண்மொழியின் புன்னகையில் ஒரு நெளிவு. "அண்ணா! நீங்கள் வீட்டிலிருக்கும்போது என்றாவது உங்களை விட்டு உணவருந்தியிருக்கிறேனா?"

"இன்றைய நிலை அப்படியில்லையே தம்பி!"

"என்றைய நிலையிலும் நான் அப்படித்தானிருப்பேன்!"

தம்பியின் இந்தப் பாசச்சொற்கள் புதிதாக நெஞ்சைத் தொடுவனவல்ல; இப்படியான எத்தனையோ சொற்கள் பாசத்தை மேலும் மேலும் வளர்த்திருக்கின்றன. நாயகன் அறிவானே!

"நல்லது தம்பி! இந்தப் பந்தி முடிந்ததும் நாம் உண வருந்த உட்காரலாம்" என்றான் நாயகன்.

எல்லாரும் உண்டு முடித்தாய்விட்டது. கடைசியாக, சகோதரர்களும், அன்னை வேதவல்லியம்மையும் மற்றும் பரிமாறி ஓய்ந்த பணியாளர்களும் இலை போட்டு அமர்ந்தனர்.

குன்றத்தூர்க் கிழார் வயதானவர் மட்டுமல்லாது விழாத் தலைவர். முதல் பந்தியிலேயே தானும் அமர்ந்து விருந்தைத் தொடக்கி வைத்தவர். எனவே இப்போது அவர் மேன் மாடத்தில் நல்ல ஓய்விலிருந்தார். ஒரு தூக்கம் போடவும் படுத்துக் கொண்டிருந்தார்.

நாயகன் தன்னுடைய அன்னையின் மனக்கலக்கம் இன்னும் தீரவில்லை என்று புரிந்து கொண்டான். எதை யாவது பேசி அமைதி கொள்ளச் செய்யலாம் என்று வாய் திறந்தான். அதற்குள் ஒன்று சொல்ல, அது வேறொன்றாக முடிந்துவிடக் கூடாதே என்றெண்ணி, சொற்களை முதலில் விழுங்கிப் பின்னர் சோற்றை விழுங்கத் தொடங்குகையில்—

அக்காள் கமலக்கண்ணி வருகிருள் என்கிற செய்தியைக் கொண்டுவந்தான் வீட்டுவேலைக்காரன் முருகப்பன்.

செய்தி கேட்ட மாத்திரத்தில், இலைபோட்டு உட்கார்ந்தாய் விட்டது என்று கூடப் பாராமல் எழுந்தோடிச் சென்றுள் வேதவல்லியம்மை; மகளிடம் அவளுக்குள்ள பற்றை அனைவரும் அறிவர். நாயகனும் கூட எழுந்துவிட்டான். அருண்மொழிமட்டும் உட்கார்ந்த வண்ணமாகவே கவனித்தான். ஆனால் உண வருந்தவில்லை.

"வா, கண்ணி! அவர் எங்கே? ஏன் இவ்வளவு காலதாமதம்? அப்பாவுக்குச் சதாபிஷேகம் நடக்கிறதைக் கூடக் கண் கொண்டு பார்க்கக் கொடுத்து வைக்கலையா?" படபடவென்று கேட்டுக்கொண்டே மகளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றுள் வேதவல்லியம்மை. "ஆமாம்; திரிபுவனியைக்கூட அழைத்து வரவில்லையா?"

இதற்குள் கேள்விப்பட்ட குன்றத்தூர்க் கிழார் மாடியை விட்டிறங்கிக் கீழே வந்தார். "வாம்மா கமலக் கண்ணி! ஏன் தனியாக வந்திருக்கிருய்? ஏன் இவ்வளவு நேரம்?"

அன்னையும் தந்தையும் மாறி மாறிக் கேள்விகளைக் கேட்கிருர்களே யொழிய தம்பி நாயகன் ஒருசொல்கூடப் பேசாதது கமலக்கண்ணிக்கு வேதனையாக இருந்தது இப்போது அவள் வந்தது தந்தையின் நூற்றுண்டு விழாவைக் கண்டு ஆசீர்வாதம் வாங்கவா வந்திருக்

கிறுள்? தம்பி நாயகனுடைய தயவல்லவோ எதிர் பார்த்து வந்திருக்கிறுள்?

தன்னையே உற்றுக் கவனிக்கும் தமக்கையைக் கண்ட நாயகன், "நல்லது; உண்டு முடித்த பிறகு எல்லாவற்றையும் பேசலாம். வாருங்கள்" என்று பொதுப்படையாக அழைத்தது கமலக்கண்ணிக்கு மேலும் வேதனையைத் தந்தது. அவள் சொன்னுள்: "நான் இலைபோட்டு உண்டு மகிழக் கூடிய நிலையில் வரவில்லை."

தூக்கிவாரிப் போட்டுவிட்டது வேதவல்லியம்மைக்கு. "நீ என்னடி சொல்கிறுய்? பின் எதற்காக நீ வந்திருக்கிறுய்? தனியாக வந்திருப்பதிலிருந்தே ஏதோ நடந்திருக்கிறது என்று நினைத்தேன். மேலும் தகப்பனுரின் சதாபிஷேகத்துக்கு மகிழ்ச்சியுடன் வருகிற ஒரு மகளைப் போல நீ காட்சியளிக்காததிலிருந்து சந்தேகப் பட்டேன். என்ன நடந்தது? சொல்?"

மனைவி இப்படிப் படபடத்துக் கேட்டதைக் கண்ட குன்றத்தூர்க் கிழார்க்கு எரிச்சலாக இருந்தது. "வேதம்! முதலில் அவளை உண்டு முடிக்கச் சொல். பிறகு எதையும் பேசிக் கொள்ளலாம்."

தந்தையைத் திரும்பிப் பார்த்த கமலக்கண்ணி, "அப்பா! உங்கள் ஆயுள் நூறு வயதுவரை நீண்டது. நம் குடும்பம் செய்த புண்ணியம். ஆனுல் என் வாழ்வு இன்றேடு முடியப் போவது என் குடும்பம் செய்த பாவம்!"

"மகளே!" — பதறிப் போனார் அதுவரை எரிச்சலுடன் காணப்பட்ட குன்றத்தூர்க் கிழார்.

"கண்ணி! நடந்ததைச் சொல்லடி!" என்று கண் கலங்கிப் போனாள் அன்னை வேதவல்லி அதுவரை அமைதியுடன் உட்கார்ந்திருந்த அருண்மொழிகூட, தாங்கல் கட்டையை எடுத்துக் கொண்டு நொண்டிய வண்ணம் அருகே வந்து நின்றான்.

கமலக்கண்ணி விக்கலும் வேதனையுமாகக் கூறினாள்:

"அம்மா! நான் உங்கள் மகளாக—இந்த நாட்டின் சேனாதிபதியின் தமக்கையாக மானத்துடன் வாழ வேண்டும் என்றால், அது என் தம்பியின் கையில்தானிருக்கிறது."

நாயகனுக்கு ஓரளவு புரிந்துவிட்டது. அவன் எதைப்பற்றியும் வாய் திறவாமல் மேலும் வாளாயிருந்தான். இப்போது அருண்மொழி குறுக்கிட்டான்: "அக்கா! எதை யார் மூலம் காக்க வேண்டும் என்பது பிறகிருக்கட்டும். முதலில் நடந்ததைக் கூறுங்கள்."

"என்ன நடந்தது? உன் மாமன் தலைமறைவாகி விட்டார். மூன்று தினங்களாக அவர் வீட்டுக்கு வரவில்லை."

"ஏன்? எதற்காக?"

"சென்றவாரம் மயிலைக் கடற்கரையில் ஒரு கொலை நடந்து விட்டது. கொலையைத் திட்டமிட்டுச் செய்த

வர்கள் யாரோ! ஆனால் உன் மாமன் இதில் சம்பந்தப் பட்டதாக மண்டலேஸ்வரர் குற்றம் சாட்டிச் சிறைப் பிடிக்க ஆணைப் பிறப்பித்திருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில் அவர்க்கும் இந்தக் கொலைக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது என்பது நன்றாகத் தெரியும். ஆனால் அவரைச் சிறைப்பிடிக்க ஆணை பிறந்திருக்கிறது. அதன் காரணமாகத் தப்பியோடித் தலைமறைவாகி இருக்கிறார்.''

அருண்மொழியால் அதற்குமேல் தன்னுடைய தமக்கையைக் கேள்வி கேட்கமுடியவில்லை. பேயறைந்த நிலைபோல மலைத்து நின்றுவிட்ட தாய் தந்தையரை நோக்கினான். பின்னர் அண்ணனை நோக்கினான்.

நாயகன் இப்போது பேசத் தொடங்கினான். ''இதற்காக நீ இப்போது என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய் அக்கா?''

கமலக்கண்ணிக்கு ஆத்திரம் பொங்கி வழிந்தது. ''நீ கேட்கிற கேள்வியாடா தம்பி, இது! என் தம்பி பல்லவ ஆட்சியின் சேனாதிபதி; அவன் சுண்டுவிரல் அசைத்தால், அரசின் எட்டுத்திசையும் நடுங்கும் என்பதை யறியாத தமக்கையா நான்?''

''தம்பியின் பதவிகளை யறிந்து பேசுவதற்காக மகிழ்கிறேன் அக்கா! ஆனால் அவனுடைய குண நலன்களைப் புரிந்து பேசுகிறாயா என்பதுதான் புரியவில்லை.''

அன்னை குறுக்கிட்டாள்: ''குணநலன் என்னடா வாழ்கிறது, குணநலன்? உடன் பிறந்த தமக்கை மாங்

கல்ய போராட்டம் நடத்துகிருள்; நீ ஏதோ ஒரு புதிய குணநலனைக் கண்டுபிடித்துப் பேசுகிருயே?''

''தமக்கைப் புருஷன் என்பதால், நீங்கள் என் கடமையை—பொறுப்பை உதறித் தள்ளச் சொல்லு கிறீர்களா?''

''சந்தர்ப்பம் ஏற்பட்டால்—அதுவும் தன் குடும்பத் துக்கு ஆபத்து என்று வருகிறபோது பயன்படாத பதவி பிறகு எதற்குப் பயன்படப் போகிறது?''

''அம்மா! பெற்ற அன்னை பேசுவது போலத் தெரிய வில்லை. பதவி என்பது சுயநலத்துக்குப் பலியாக்குகிற கேவலப் பொருளல்ல. அது நாட்டின் வளர்ச்சிக்கு—நிர்வாகத்துக்குப் பயன்படுகிற பொன்னேடு. அதில் நான் எந்த வரிகளையும் பிழையாகப் படிக்க விரும்ப வில்லை. எழுத விரும்பவில்லை; திருத்தவும் விரும்ப வில்லை?''

''தம்பீ!''—கதறினுள் தமக்கை கமலக்கண்ணி. ''தம்பீ! நீ இருக்கிருய் என்கிற தைரியத்தில்தானடா ஓடோடி வந்தேன். நீ மனம் வைத்தால் அவரை நிரபராதியாக்கலாம்.''

''அப்போது உன் கணவன் குற்றவாளி என்று நீயே ஒப்புக் கொள்கிருய் அல்லவா?''

''எனக்குத்தான் கணவரா? உனக்கு மாமனில்லையோ?''

''குற்றவாளிகளை நான் உறவென்ருே, நண்பரென்ருே ஏற்றுக் கொள்வதில்லை. என் தந்தையே

தண்டனைக்குரிய குற்றம் செய்தவராஞலும் நான் தலை யிட்டுக் காக்கமாட்டேன்; அவரைத் தந்தை என்று...''

நாயகன் முடிக்கவில்லை: கமலக்கண்ணி குறுக் கிட்டாள்: ''ஏற்க மாட்டாய் அல்லவா?''

ஒரு கணம் திகைத்துப் போஞன் நாயகன்.

''ஏனடா, தம்பி விழிக்கிருய்? இதற்கு மறுமொழி கூறேன்?'' என்ருள் கமலக்கண்ணி.

நாயகன் வெறுமையாகச் சிரித்தான். ''அக்கா! இதற்கு மறுமொழி கூறுவது என்பது எளிது. ஆனுல் நீ இப்படிக் கேட்டிருக்கக் கூடாது. ஏற்பது என்பது அல்ல பிரச்சினை. ஒருகால் என் தந்தை குற்றவாளி யாஞல், நான் அவரை தந்தை என்று நினைத்துப் பார்க்க மாட்டேன்.''

''இப்போது உன் மாமன் குற்றவாளி என்று இன் னும் உறுதியாகவில்லையே!''

''எப்போது அவர் தலைமறைவாஞரோ, அப்போதே அவர் குற்றவாளியான மாதிரிதான். அக்கா! தயவு செய்து உன் தம்பியின் பதவியைக் கண்டு பெருமைப் படு. அதைக் கொண்டு தீமைகளை அணுகாதே! அதற் காக உன் தம்பி ஒருபோதும் ஒப்ப மாட்டான்.''

''இதுதான் முடிவாடா தம்பி?''

''இது என் முடிவல்ல; இலட்சியம்.''

''அப்படியாஞல் இந்த வீட்டில் எனக்கு வேலை யில்லை.''

கமலக்கண்ணி விருட்டென்று வெளியேறி விடுவிடு வென்று நடந்து கொண்டே இருந்தாள். அவளைத் தொடர்ந்தோடிய வேதவல்லி "கண்ணீ, கண்ணீ" என்று எத்தனை முறை கூவியழைத்தும் பயனில்லாமல் போய் விட்டது.

வேகமாக உள்ளே வந்த அன்னை வேதவல்லி, "இது உனக்கே நன்றாக இருக்கிறதாடா, கண்ணு?" என்று அழுகையும் ஆத்திரமுமாகக் கேட்டாள். மகனை அவள் எப்போதும் செல்லமாகக் 'கண்ணு' என்றுதான் அழைப்பாள்.

நாயகன், "நீங்கள் சித்திராதித்தன் என்கிற அதர் மனுக்கு மாமியாராக நின்று பேசுகிறீர்களே யொழிய, பல்லவ அரசின் சேனாதிபதியான நாயகனுக்கு ஒரு தாயாக நின்று பேசவில்லை" என்று கூறிவிட்டுத் தந்தையை நோக்கி, "இதுபற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள், அப்பா?" என்று கேட்டான்.

குன்றத்தூர்க் கிழாரும், "நீ என் மகன். என்னி லிருந்து எதிரொலிக்கும் ஒன்றை நான் எப்படி மறுக்க முடியும்?" என்று புலமை ரசனையுடனும் பூரிப்புடனும் கூறிவிட்டு உள்ளே சென்றார்.

விம்மியழுத வேதவல்லியம்மையை இளைய குமாரன் அருண்மொழி தேற்றிக் கொண்டிருந்தான்.

# இரண்டு

அரண்மனைக் கூடத்தில் உலவியவாறு சேனாதிபதி நாயகனுடைய வருகைக்காகக் காத்திருந்தார் சிம்மவர்ம பல்லவ அரசர். அவருடைய அலைமோதிய மனத்துள் பலவிதமான கேள்விகள் எழுந்து அலைமோதிக்கொண் டிருந்தன.

சற்றைக்கெல்லாம் அங்கு வருகை தந்தான் நாயகன்.

"அரசர் பெருமானை வணங்குகிறேன்," என்று நாயகன் குரல் கொடுத்த பிறகுதான் அவன் வந்து நின்றது அரசரின் கண்களுக்குத் தெரிந்தது.

உலவுவதை நிறுத்தி நின்று ஒருகணம் நாயகனை உற்றுக் கவனித்தார் சிம்மவர்மப் பல்லவர். பிறகு சொன்னார்: "நாயகா! உன்னைத்தான் எதிர்பார்த்த வண்ண மிருந்தேன். இப்போது நீ உடனடியாகத் தஞ்சை நோக்கிச் செல்லவேண்டும்."

"உத்தரவுக்குக் காத்திருக்கிறேன்."

"நாயகா! இந்தக் காரியத்துக்கு அனுப்பப்பட வேண்டியவன் நீ! உன்னைத்தவிர நம்பிக்கையாக இந்தக் காரியத்தை அணுகித் தீர்த்து வைக்க வல்லவர்கள் வேறு யாருமிருக்க முடியாது! அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலவரத்தை உன்னால்தான் அடக்க முடியும் என்பது என்னுடைய நம்பிக்கை."

"அரச பெருமானின் நம்பிக்கையை நான் என்றும் காப்பேன்."

“நானறிந்ததுதானே நாயகா! தஞ்சையில் விவசாயப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. அங்குள்ள நிலக்கிழார்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சிக்கலை வைத்து உழவர்களைப் பயன்படுத்தி அநியாயக் கலவரத்தைத் தூண்டியிருக்கிறார்கள். இதன் காரணமாக இதுவரை பதினேழு பெயர்கள் உயிர் துறந்திருப்பதாகத் தஞ்சை மண்டலத் தலைவர் தகவல் அனுப்பியுள்ளார். இது மேலும் நீடித்தால், பகைவர்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டு காஞ்சிக்குக் களங்கம் கற்பித்தாலும் வியப்பதற்கில்லை. எனவே இன்றிரவே நீ உடனடியாகப் புறப்படவேண்டும். அங்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்து ஒரு முடிவு தேடிவிட்டுத் திரும்ப வேண்டும். இதற்காக நீ யார் எவர் என்கிற தாரதம்மியம் பார்க்கக் கூடாது; பார்க்காதவன் நீ என்கிற ஒரே காரணத்துக்காகத்தான் உன்னை அனுப்பி வைக்கிறேன்.”

“அப்படியே செய்வேன்!”

மறுபடியும் சற்றுநேரம் வரை உலவினார் சிம்மவர்ம பல்லவர். அவர் இன்னும் ஏதோ பேச விரும்புகிறார் என்பது அதன் மூலம் புரிய வந்தது.

“நாயகா!”

“பிரபோ...”

“உன்னுடைய தமக்கைப் புருஷனைப்பற்றி ஏதேனும் தெரியுமா?”

“தெரியும்!”

"என்ன தெரியுமா?"

"முதலில் பரமசாதுவாக இருந்தவர்; இப்போது படு மோசமான அயோக்கியராக மாறி இருக்கிறார் என்று!"

"ஏன் இதுபற்றி நீ கவனியாமல் இருக்கிறாய்?"

"கவனிப்பு என்றால்? பல்லவ பெருமானார் விளக்க மாகக் கூறலாம்."

"திருத்த முனையக் கூடாதா?"

"திருந்த வேண்டியவர்தாம் திருந்த முடியும்? அவர் ஒரு நாய்வால்!"

"இதனால் உன் சிறப்புக்குக் களங்கம் ஏற்படுகிறது அல்லவா?"

"நான் அவ்வாறு நினைக்கவில்லை பிரபோ!"

சிம்மவர்மர் திரும்பிப் பார்த்தார்.

"நீ சொல்வதன் நோக்கம்?"

"குடும்பம் என்றால் அதில் நிறையும் உண்டு; குறையும் உண்டு. நான் என்னுடைய கடமைத் தூய்மையைத்தான் உபாசிக்கிறேன். தந்தையே தவறு செய்தாலும் அது என்னைக் களங்கப்படுத்தாது. அது அவருடைய நிலை; மனப்பாங்கு!"

"மிகவும் அபூர்வமானவனாக இருக்கிறாயே!"

"இதில் அபூர்வத்துக்கு ஒன்றுமே இல்லை பிரபு! மகன் செய்த குற்றத்தை வைத்து தந்தையைத் தவறா

கக் கணிப்பவர்கள் உண்டு. இதை நான் ஒப்புக்கொள்வதில்லை. அவரவர் சூழ்நிலைக்கேற்ப அவரவருடைய வாழ்க்கை அமைகிறது. இதில் யாரை எப்படிக் குற்றம் கூறமுடியும்?"

வெகுநேரம்வரை நாயகன் கூறிய கருத்தைக் கேட்டுச் சிந்தனையிலாழ்ந்தார் பல்லவர். எடுத்துக் காட்டுக்கு, சிம்மவர்ம பல்லவருடைய தம்பி போதுமே!

"நாயகா! உன்னுடைய தமக்கைப் புருஷன் பெயர் என்ன?"

"சித்திராதித்தர்."

"ஆம்; சித்திராதித்தர்; இப்போது அவர் திருக்கழுக் குன்றத்துச் சிறைக் கூடத்தில் இருக்கிறார்."

"கேள்விப்பட்டேன்."

"அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"நினைக்க ஒன்றுமே இல்லை."

என்ன மனநிலை இவனுக்கு? பாசம் எப்படியாவது வெளிப்படுமா என்பதற்காகத்தான் மீண்டும் இப்படி ஒரு கேள்வி கேட்டார் பல்லவ அரசர். ஆனால் நாயகன் மறுமொழி அவரைப் பிரமிக்கச் செய்தது.

"ஏறத்தாழ ஓராண்டு சிறைவாசம்" என்றார் பல்லவ அரசர்.

"செய்த குற்றத்துக்கு மிகவும் குறைவான தண்டனை."

மேலும் வியந்தார் பல்லவ அரசர்.

"நாயகா! மண்டலேசுவரர், உன்னுடைய தமக்கைப் புருஷன் என்பதற்காக இப்படி தண்டனையைக் குறைத்துக் கொடுத்து இருக்கிறார்."

நாயகன் இதைக் கேட்டுத் துடிப்பு கண்டு விட்டான். "அரசே! என்னைப் பொறுத்தருள வேண்டும். எனக்காக என்ற சொல்லை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. தாங்கள் மண்டலேசுவரரைத் தண்டித்தால் நல்லது என்று நினைக்கிறேன்."

சிம்மவர்மபல்லவர் கடகட வென்று சிரித்தார். "நாயகா! தண்டனையைக் குறைக்கும்படிக் கூறியவனே நான்தான்!"

"பிரபோ...!"

"எனக்கென்ன தண்டனையைக் கொடுக்கலாம் என்று இருக்கிறாய்?"

"பிரபோ!"

"நாயகா! உன்னைவிட நான் பாசத்துக்குக் கட்டுப் படாதவன். குற்றம் செய்தவர்கள் வேறு; துணை நின்றவன் சித்திராதித்தன். அவர்களுக்கு மூன்றாண்டு; இவனுக்கு ஓராண்டு. புரிகிறதா?"

நாயகன் தலை குனிந்து கொண்டான்.

"நல்லது, நாயகா! நீ இன்றிரவு தஞ்சை நோக்கிப் புறப்படுகிறாய். பயணத்துக்கானவற்றைக் கவனிக்க

வேண்டும். புறப்படு. உன்னுடன் ஐநூறு போர் மற வர்கள் வருகிறார்கள்."

நாயகன் தலைபணிந்து வணங்கி விடை பெற்றுப் புறப்பட்டான்.

**சே**னாதிபதி மாளிகை பரபரப்புடன் விளங்கியது. வாசலில் ஐநூறு போர் மறவர்கள் குதிரைகள் சகிமாகக் காத்திருந்தனர்.

நாயகன் புறப்படட ஆயத்தமாகி விட்டான். முத லில் தந்தை குன்றத்தூர்க் கிழாரை வணங்கி வாழ்த் தினைப் பெற்றான். எப்போதுமே இம்மாதிரியான காரி யங்களுக்குப் புறப்படும்போது அன்னையின் ஆசீர்வா தத்தைப் பெற்ற பின்னர்தான் தந்தையை நாடுவது வழக்கம்.

பகைப் புலத்துப் போர் மூண்டபோது அன்னை மரணப் படுக்கையில் கிடந்தாள். அப்போதும் கூட அந்த அன்னையிடம்தான் ஆசீர்வாதம் பெற்றான். இப் போது ஏன் அம்மாதிரியாகப் பெறவில்லை என்பது பெரிய கேள்விக்குறியாக இருந்தது குன்றத்தூர்க் கிழார்க்கு.

காரணம் இருந்தது. சில நாட்களாகவே அன்னை வேதவல்லியம்மை யாருடனும் சரிவரப் பேசுவது கிடையாது. நினைவு முழுவதும் மூத்தமகள் கமலக் கண்ணியின் பேரிலேயே இருந்தது. நூற்றாண்டு விழா நடைபெற்று முடிந்த மறுநாள் மகனுக்கும் தாய்க் கும் பெரியதொரு விவாதமே நிகழ்ந்துவிட்டது. எப்படி

யாவது மருமகனைக் காக்கவேண்டும் என்பது தாயின் வாதம். ஆனால் நாயகனோ, தாயே தவறு செய்து விட்டாலும் காப்பது கண்ணியமாகாது என்று ஆணித்தரமாகக் கூறிவிட்டான்.

"நாளை ஒன்று நடந்துவிட்டால் அக்காள் இந்த வீட்டுக்குத்தானே வரவேண்டும்; பிறகு குற்றவாளியின் மனைவி சேனாதிபதியின் வீட்டில் வாழ்கிறாள் என்கிற தரக்குறைவான பேச்சுக்கள் அடிபடும் அல்லவா? அதனை இப்போதே தீர்த்து விடுவது புத்திசாலித்தனம்" என்று ஒரு பெரிய பாரத்தைத் தலைமேல் தூக்கிப் போடுவதுபோலப் போட்டாள் வேதவல்லியம்மை.

"இதில் யாரும் எதுவும் பேச இடமில்லை. குற்றம் செய்தவர் என் தமக்கைப் புருஷன். இதற்காக தமக்கை என்ன செய்துவிட முடியும்?"

வாயடைத்துப் போனாள் வேதவல்லியம்மை. எந்த வழியிலும் மகன் உதவ மாட்டான் என்பது திட்டவட்டமாகத் தெரிந்தது.

அன்று முதற்கொண்டே மகனிடம் வழக்கம் போலப் பேசுவதுகூடக் கிடையாது.

இப்போது நாயகனுக்குச் செய்தி தெரியும். அரசரின் மூலமாகவே கேள்விப்பட்ட செய்தி. தாயிடம் சென்று ஏதாவது பேசினால் அக்காளைப்பற்றியே பேச்சு வரும். பிறகு உண்மையைக் கூற நேரிடும். புறப்படுகிற இந்த நேரத்தில் அன்னையின் கண்ணீரைச் சந்திக்க அவன் ஆசைப்படவில்லை. ஆனால் பெயருக்கு முக்கிய

விஷயமாகத் தஞ்சைக்குச் செல்வதாகச் சொல்லிக் கொண்டு நேரே தம்பி அருண்மொழியைக் காணச் சென்ருன்.

அண்ணன் தன்னைக் காண வருவார்; தனியாகச் சந்திக்க வேண்டும் என்ற நினைவுடன்தான் அருண் மொழி தனியறையில் காத்திருந்தான். அப்படி அவன் காத்திருந்ததற்குக் காரணமிருந்தது.

“தம்பி! அனைவரும் என்னை வழிகூட்டி யனுப்பக் காத்திருக்கிறபோது, நீ மட்டும் தனியறையில் அமர்ந்து இருப்பதைப் பார்த்தால், எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனுலும் தம்பி காரணமில்லாமல் இப் படிச் செய்ய மாட்டான் என்ற நினைவோடு வந்தேன்” என்ருன் நாயகன்.

“நீங்கள் நினைத்ததில் தவறில்லையண்ணு! தவருன ஒன்றையும் நீங்கள் நினைப்பவரல்ல!” என்று கூறிக் கொண்டே தாங்கிக் கட்டைகளை எடுத்துக்கொண்டு எழுந்துகொள்ள முயன்ருன் அருண்மொழி. அதற்குள் நாயகனும், “நீ உட்கார்ந்தே பேசலாம் தம்பி; நானும் உன்னுடன் உட்கார்ந்து கொள்கிறேன்” என்று கூறி விட்டு வாசற்படியண்டை நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான். யாராவது வந்தால் கவனிக்கச் சுலபமாக இருக்கும் அல்லவா?

“அண்ணு! அம்மாவின் கவலை நிறைந்த நிலை நமக்குக் கவலையை யுண்டுபண்ணி விடுமோ என்று அஞ்சுகிறேன். இதுபற்றித் தங்களைக் கலக்கத்தான் தனியறையில் அமர்ந்திருந்தேன்.”

"நீ இதைத்தான் குறிப்பிட்டுப் பேசுவாய் என்பது எனக்கு முன்கூட்டியே புரிந்துவிட்டது. தம்பி, என்ன செய்யச் சொல்லுகிறாய்? அம்மாளுக்கு இருக்கும் இரண்டு பிள்ளைகளான நம்மிருவரைக் காட்டிலும் அக்காள்மீது தான் பாசம் அதிகமாக இருக்கிறது. அதற்காக நாம் என்ன செய்துவிட முடியும்? அக்காளுடைய தலை விதியை அவள்தான் அனுபவித்துத் தீரவேண்டும்."

"அண்ணா! மாமா விஷயத்தில் நீங்கள் தலையிட மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். முடிவு என்ன வாயிற்று என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!"

தம்பியைக் கூர்ந்து கவனித்த நாயகன், "தம்பி, முடிவு எனக்குத் தெரியும்; புறப்படுகிறபோது இதுபற்றி ஏன் பேசவேண்டும் என்றுதான் வாய்மூடி இருந்துவிட்டேன்" என்றான்.

"என்னிடம் சொல்லலாம், அல்லவா?"

"உன்னிடம் சொல்லவேண்டும் என்றுதான் இருந்தேன். நீயாகவே இப்படித் தனிமையில் அழைத்துச் சொல்லத் தூண்டியதற்காக மகிழ்கிறேன். அருண் மொழி! மாமாவுக்கு ஓராண்டு சிறைவாசம்!"

"ஓராண்டு சிறைவாசம்! எத்தனை பெரிய அவமானம்!"

"இதற்காக நாம் என்ன செய்துவிட முடியும்? குற்றம் செய்பவர்கள் தண்டனையை அனுபவிக்க வேண்டியதுதானே?"

"நிச்சயமாக அனுபவிக்க வேண்டியதுதான்."

"தம்பி, நீ ஒரு காரியம் செய்வாயா?"

"என்ன அண்ணு?"

"நான் தஞ்சைக்குப் புறப்பட்டுச் சென்றதும், அம்மாளிடம் இச்செய்தியைப் பக்குவமாகக் கூறித் தேற்றிவிடவேண்டும். ஒன்று செய். முதலில் அப்பா விடம் சொல். பிறகு இருவருமாகச் சேர்ந்து அம்மா வைத் தேற்றிவிட முயலுங்கள்."

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்' அண்ணு!"

தம்பியைச் சேர்த்துக் கட்டி உச்சிமோந்த நாயகன் "தம்பி, அருண்மொழி! நாம் இரட்டையர்களாகப் பிறந்த திருக்க வேண்டியவர்களடா! எப்படியோ தவறித் தனித் தனியாகப் பிறந்துவிட்டோம். நல்லது, நான் புறப்பட லாம் அல்லவா?" என்ருன் நெக்குருக.

"சென்று வெற்றியோடு திரும்புங்கள் அண்ணு!"

நாயகன் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந் தான். தனக்கென்று காத்திருந்த புரவியில் ஏறி யமர்ந்து கொண்டான். துணைக்கு இருந்த பல்லவ வீரர்கள் பின்தொடர புறப்பட்டான் நாயகன். அப் போது, பக்கத்து வீதியிலிருந்த மாரியம்மன் கோயிலி லிருந்து பம்பை, உடுக்கைச் சத்தம் வேகமாக ஒலிக்கத் தொங்கியது.

-

**கா**ஞ்சித் தலைநகரையடுத்த குன்றத்தூர்தான் அவர்களுடைய பூர்வீகம். ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் காஞ்சிமா நகர்க்குக் குடியேறி விட்டவர்கள். அப்போது நாயகன் கைக்குழந்தை.

நாயகனுடைய முழுப் பெயர் வள்ளிநாயகன். ஆனால் நாயகனுக்கு அறிவு தெளிந்தபோது 'வள்ளி' என்ற சொல்லை நீக்கிவிட்டான். வள்ளிக்கு நாயகனாக முருகன்தான் இருக்க முடியும். மானுடனுக்கு அப்படிப் பெயர் வைக்கக் கூடாது என்று தந்தையிடம் பெரிதாக விவாதித்தான். குன்றத்தூர்க் கிழாரும், "வள்ளி நாயகன் என்றால் 'வள்ளிக்கு நாயகன்' என்று ஏன் பொருள் கொள்ள வேண்டும்? முருகன் என்று கொள்ள வேண்டியதுதானே?" என்று கூறிப் பார்த்தும் நாயகன் கேட்டானில்லை. தனக்கு எவளாவது 'உமா' என்ற பெயரில் வாய்க்க, அவளுக்கு நாயகனாக இருப்பதை விட்டு, வள்ளிக்கு நாயகனாக விரும்பவில்லை என்று விளையாட்டாகக் கூறி மறுத்துவிட்டான். பொதுவில் நாயகன் என்றால் தலைவன் என்ற பொருளில் இருந்துவிட்டுப் போகட்டுமே என்றும் அமைதி கொண்டான். சுருக்கமாகவும், அழகாகவும் 'நாயகன்' என்றிருப்பதை வரவேற்றான். காஞ்சி அரசருக்கும் இப்படிச் சுருக்கமாக இருந்ததில் நிறைவு இருந்தது. விளையாட்டாக சிம்மவர்ம பல்லவ அரசரும் கேட்டார்: "நீ காஞ்சி நாயகனா? பல்லவ நாயகனா?"

நாயகனும் சிரித்துக் கொண்டே, "சேனைநாயகன்" என்பான். அரசர் மகிழ்ச்சிப் பெருக்கால் கடகடவென்று சிரிப்பார்.

குன்றத்தூர்க்குடும்பம் காஞ்சியைஅடைகிறபோது, கைக்குழந்தையாக இருந்த 'வள்ளி'நாயகன், இப்போது காஞ்சிமாநகரின் சேனைநாயகனாவான் என்று யார்தாம் எதிர்பார்த்தார்கள்?

மூத்தவள் கமலக்கண்ணி, காஞ்சிநகரை யடைந்து மூன்றாண்டுகள் கழித்துத்தான் பூப்படைந்தாள்.

அருண்மொழி ஐந்தாண்டு கழிந்து பிறந்தவன். அவன் ஒருவன்தான் காஞ்சி மண்ணில் பிறக்கும் பேறு பெற்ற வன். அதனால்தான் காலை உடைத்துக் கொண்டானோ என்னவோ?

குன்றத்தூர் வேளாண் மரபைச் சார்ந்த குன்றத் தூர்க் கிழாருடைய இயற்பெயர் மாணிக்கவேளார். மண் வளப்படி மாதவத் தமிழை மாசறக் கற்றவர். நற்புல மையும் நல்லொழுக்கமும் நிறைந்தவர்.

குன்றத்தூரில் வாழ்கிறபோது பல நாட்கள் நிம்மதி யின்றிக் கழித்திருக்கிறார். நல்ல செல்வ வளமிக்கவர். ஏறத்தாழ நானூறு வேலிக்கு நன்செய் நிலம் மட்டும் அப்போது இருந்தது. என்ன இருந்தும் என்ன பயன்? பின்னாளில் அனுபவிக்க வாரிசு இல்லையே!

முதல் மனைவி இருபத்தைந்து ஆண்டுவரை வாழ்க்கை நடத்தியும் ஒரு குழந்தைக்குத் தாயாக முடிய வில்லை. அப்போதே பலர் குன்றத்தூர்க் கிழாரை மறு மணம் புரிந்து கொள்ளுமாறு வற்புறுத்தினர். ஒழுக்க சீலரான குன்றத்தூர்க் கிழார், முதல் மனைவி இருக்க, இன்னொருத்தியை வீட்டில் கொண்டு வருவது மனித உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளாத காட்டுமிராண்டித் தனமாகும் என்று மறுத்துவிட்டார். ஒரு கால் மனைவி இறந்துவிட்டால், வாரிசுக்காக இன்னொருத் தியை மணக்கலாம். அவளுக்குக் குழந்தை பிறக்கும் என்பது என்ன நிச்சயம்! ஆனால் ஒரு முயற்சி!

முதல் மனைவி நோய்வாய்ப்பட்டு இறக்க நேரிட்டது. ஓராண்டு கழித்து இரண்டாந்தாரமாக ஒருத்திக்குத் தாலி கட்டினார். அந்தப் பெண், குலத்துக்கு மாசு

தேடித் தரவே குன்றத்தூர்க் கிழாரை மணந்தாள் போலும்! இரண்டாண்டுகள்கூடச் சரிவர வாழவில்லை. ஏற்கெனவே அந்தப் பெண்ணுக்குக் காதல் இருந்தது. அது தலைதூக்க ஆரம்பித்து விட்டது. ஒருநாள், ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல், பக்கத்துக் கிராமத்துத் தேவர் மரபைச் சார்ந்த பண்ணையாரிடம் ஓடி விட்டாள். பண்ணையார் அப்படி ஒன்றும் இளைஞரல்ல. குன்றத்தூர்க் கிழாரைவிட வயதில் இளையவர். அவ்வளவே!

குன்றத்தூரே திரண்டுவிடும் போலிருந்தது. நானூறுவேலி நிலக்கிழார் எங்கே? நாற்பதுவேலி கூடத் தாளாத தேவர் எங்கே?

குடியான மக்கள் திரள்வதைக் கண்ட குன்றத்தூர்க் கிழார் அடக்கிவிட்டார். அது நாகரிகமும் அல்ல. ஏதோ, அவளாக விரும்பிப் போனபிறகு தேவரைக் குறை கூறுவது முட்டாள்தனம் என்பது குன்றத்தூர்க் கிழாரின் முடிவு. அந்த அளவில் அந்தப் பிரச்னை நின்றது. அதன் பிறகு திருமணமே வேண்டாம் என்ற முடிவுடன் காலம் கடத்தலானார்.

உறவினர்களும் மற்றவர்களும் விட்டால்தானே?

எப்படியோ ஓர் ஆவிவந்த குடும்பத்தைச் சரிகட்டி, மிகவும் உயர்தரமான எண்ணங்களுடைய பெண்ணைப் பேசி முடித்துத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தனர். கொஞ்சத்தில் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார் குன்றத்தூர்க் கிழார். பிறகு ஒப்புக் கொண்டார்.

வேதவல்லி அமைதியான புன்னகையுடன் மனைவியானாள்.

அறுபதைக் கடந்த ஒருவரை மணப்பது என்பது ஒரு தியாகம்தானே? போகப் போக வேதவல்லிக்கு அது ஒரு தியாகமாகவே தெரியவில்லை. யாகமாகவே தெரிந்தது. அதுமட்டுமல்ல; குடும்பத்திலும், செல்வ நிர்வாகத்திலும் அவளுக்கு ஒரு தனியான சிறப்பு ஏற்பட்டு விட்டது. அவள் ஒரு முடிதரியா மகாராணிதானே?

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு கமலக்கண்ணி பிறந்தாள். வீட்டுக்குத் திருமகளே பிறந்து விட்டாள் என்ற மகிழ்ச்சி கொண்டாட்டமாக மாறியது. குன்றத்தூரே விழாக் கோலம் பூண்டுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். அந்த மகிழ்ச்சிப் பெருக்கின் காரணமாக, அந்த ஊர்க்குன்றின் மீது முருகக் கடவுளை எழுந்தருளச் செய்தார் குன்றத்தூர்க் கிழார் நாயகனும் பிறந்தான்.

பத்தாண்டுகள் உருண்டோடின.

நல்ல தமிழ்ப்புலமை நிரம்பிய குன்றத்தூர்க் கிழார் பற்றிக் கேள்விப்பட்ட சிம்மவர்ம பல்லவ மகா அரசர் அரண்மனைக்கு அழைத்து அவைப் புலவராக இருக்குமாறு வேண்டினார். ஏனோ, இருக்க மனமில்லாத குன்றத்தூர்க் கிழார் மறுத்துவிட்டார்.

'உன்னை நம்பியோ தமிழை ஓதினேன்?'—என்று செருக்கார்ந்த தோரணையுடன் புலவர்கள் அல்லது எழுத்தாளர்கள் வாழ்கிற மண்ணல்லவா தமிழ் மண்!

# மூன்று

தஞ்சை அக்காலத்தில் ஒரு தலைநகர்க்குரிய சிறப்பினைப் பெற்றில்லாவிட்டாலும் உறையூர்க்கு அது எந்த விதத்திலும் குறைந்து காணப்படவில்லை. உறையூர் சோழர்களுடைய தலைநகராக விளங்கிய காரணத்தால் சிலபல வளர்ச்சிகள் அங்கு இருக்கத்தான் செய்தன. ஆனால் தஞ்சை வெறும் நகரளவில் எழிலைக் கூட்டிக் கொண்டிருந்தது.

பல்லவர் தலையெடுப்புக்குப் பிறகு ஆண்ட சிம்மவர்ம பல்லவர் காலத்தில்தான் சோழகுலமே ஒருவாறு அழிந்து பட்டுவிட்டதே! எஞ்சிய சிதறல்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக வாழ்ந்து வந்தன. சிறப்பான குடும்பங்கள் உறையூரை விட்டுத் தஞ்சைக்கே வந்து விட்டன. சொல்லப் போனால் பல்லவர் படையெடுப்புக்கு முன்னம், உறையூர் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினாலும், தஞ்சையில்தான் நிலக்கிழார் பலர் குடியிருந்தனர். எனவே அங்கும் ஒரு செல்வச் செழிப்புடன் கூடிய அரசத் தோரணை நின்று நிலவத்தான் செய்தது. இப்போது அரசக் குடும்பங்கள் வேறு அங்குக் குடியேறி விட்டன. பல்லவராட்சிக்குட்பட்ட அடிமை நிலை என்கிற ஒரு குறையைத் தவிர மற்றபடி தஞ்சை நகரம் எந்தவித அழகுக் குறையும் இல்லாமல் கலகலப்பாக விளங்கியது.

துணைவர்களுடன் தஞ்சையை அடைந்த பல்லவ சேனாதிபதி நாயகன், அங்கிருந்த அரசமாளிகையில் தங்கி ஓய்வெடுத்தான். அவன் வந்திருக்கும் செய்தி மிகவும் ரகசியமாகவே பாதுகாக்கப்பட்டது. தஞ்சைக்

கடுத்த செம்பியனூர் கிராமத்தில்தான் நில்ப் பூசல் நிகழ்ந்து கொண்டிருந்தது. பூசலுக்கு முக்கியமான தலைவர்கள் தஞ்சையில் தானிருந்தனர்.

வெயில் தாழப் புறப்படலாம் என்றிருந்தான் நாயகன்.

பயணக் களைப்பின் காரணமாக மூன்று நாழிகைப் போது நல்ல உறக்கத்தில் ஆழ்ந்தான்.

மாலை வந்தது. முகம் கழுவி அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினான். பின்னர் தஞ்சையிலிருந்த அரசாங்க அலுவலர்களை அழைத்து நடந்தவற்றைத் தெள்ளத் தெளிவாக விசாரித்தான். ஓரளவு அவனுக்கு உண்மை புரியவந்தது. பின்னர் தன்னுடன் வந்த துணைவர்களை அழைத்துக்கொண்டு பக்கத்திலிருந்த செம்பியனூர்க்குப் புறப்பட்டான். அப்படிப் புறப்படுவது அரசாங்க அலுவலாளர்களுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. இந்தப் பூசலையடக்க அரசர் வந்தாலொழிய முடியாது என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பு. நிறைய பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள்; நிறைய நிபந்தனைகளை ஆராய வேண்டிய பிரச்சினைகள். இப்படியிருக்க இளைஞனை சேனாதிபதி நாயகனால் எவ்வாறு முடியும் என்பது அவர்களுடைய கேள்விக்குறி. ஏதேனும் நடக்கக் கூடாதது நாயகனுக்கு நடந்துவிடுமோ என்றும் அஞ்சினர்.

செம்பியனூரையடைகிறபோது நன்றாகவே இருட்டிவிட்டது. முன்னறிவிப்பு எதுவுமில்லாமல் சென்ற காரணத்தால், தங்குவதற்கான இடவசதியோ, உண்பு

தற்கான உணவு வசதியோ ஏற்பாடு செய்வதற்கில்லாமல் போய்விட்டது. அவ்வாறு செல்லக்கூடாது என்ற முடிவுடன்தானே நாயகனும் புறப்பட்டான்?

செம்பியனூரே கலகலத்து விட்டது. சேனாதிபதி நாயகன் தஞ்சையடைந்திருக்கும் செய்தி மெல்ல எட்டத்தான் செய்தது. ஏதோ காரணம் பற்றி வந்திருக்கலாம் என்றும் நினைத்தனர். ஆனால் அன்றிரவு நடக்கவிருக்கும் கலவரத்தை யடக்க வந்திருக்கிற செய்தி அப்போதுதான் அவர்களுக்குத் தெரிய வரவே கலகலத்துப் போயினர். எப்படியும் அன்றிரவு கலவரம் நடந்தே தீரும். இனிமேல் பலரைச் சந்தித்துக் கலவரத்தைச் சிலநாட்கள் வரை அல்லது சேனாதிபதி திரும்புகிறவரை நிறுத்தி வைக்கலாம் என்று முயல்வது முயற்கொம்பு தேடிய கதைதான். இதனால் ஏற்படப் போகிற பாதக நிலைகளை எண்ணிப் பார்க்கையில் அவரவர்க்கு எலும்பில் காய்ச்சல் கண்டுவிட்டது. எப்படிப் பார்த்தாலும் இன்னும் பன்னிரண்டு நாழிகைப் போதுக்குள் இந்தக் கலவரம் நிகழ்ந்தே தீரும்!

எவ்வளவு இரகசியமாகச் செய்த இந்த ஏற்பாடு பல்லவ அரசருக்கு எட்டி விட்டது! இதனையடக்க சேனாதிபதியை அல்லவா அனுப்பிவைத்து விட்டார்?

சொல்லப்போனால் உண்மை யதுவல்லவே! அன்றிரவு நடக்கவிருக்கும் கலவரத்தைப்பற்றி சேனாதிபதி நாயகனுக்கே தெரியாது. பின் அரசர் சிம்மவர்ம பல்லவருக்கு எவ்வாறு தெரிந்து அனுப்பிவைத்திருக்க முடியும்?

தஞ்சையில் விவசாயக் கலவரம் நடந்துகொண்டிருக்கிற செய்தி மட்டும்தான் பல்லவ அரசருக்குத் தெரி

யும். அதனை ஒரு நம்பிக்கையான அரசியல் அலுவலாளனை யனுப்பி அடக்க நினைத்தார். சேனுதிபதி நாயகனை அனுப்பியும் வைத்தார். தஞ்சையடைந்த நாயகனே, களைப்பின் காரணமாக பகல் ஓய்வெடுத்துக் கொண்டு, ஒருவீர்க்கும் முன்னறிவிப்பு தராமல் மாலை வந்ததும் செம்பியனூரை அடைந்து விசாரிக்கத் தலைப் பட்டான். குருவி உட்கார இளநீர் விழுந்த கதைபோல, அன்றிரவு கலவரத்துக்கு ஏற்பாடு செய்திருப்பதும் அப்போது பார்த்து சேனுதிபதி வரவும் பொருத்தமாய் விடவே பலருக்கு இது பீதியை யுண்டுபண்ணி விட்டது.

செம்பியனூரில் பல நிலக்கிழார்களுடைய வீடுகள் இருந்தன. வெற்றுநேரங்களில் வந்திருந்தால் நாயகன் யாருடைய வீட்டிலாவது தங்க நேரிட்டிருக்கும். அப் போதைய சூழ்நிலையில் எந்த நிலக்கிழார் இந்தக் கலவரங் களுக்குக் காரணமானவர் என்பது புரியாதிருந்ததால், எவர் விட்டிலும் தங்கக் கூடாது என்றே முடிவு செய் திருந்தான். அப்படியும் ஒருசிலர் வந்து அன்புடனும் மரியாதையுடனும் அழைக்கத்தான் செய்தனர். நாயகன் மறுத்துவிட்டான். செம்பியனூரிலிருந்த அரசாங்க அலுவலரான ‘கரணம்’ விட்டில் தங்கி இருக்கலாம், அதையும் நாயகன் விரும்பவில்லை. கிழக்குப்புறமாக இருந்த சிவன் கோயில் சற்றுப் பெரியது. சோழன் கிள்ளிவன் என்பவனுல் கட்டப் பெற்றது. மண்டபத் தில் ஏறத்தாழ நூறு பெயர்கள் தங்கி இளைப்பாறலாம். நாயகன் அங்குத் தங்கவே முடிவு செய்தான். கிராம மக்கள் வீரர்களுக்கான உணவு வசதிகளை யாரையும் கேளாமல் அவரவர் பங்கில் ஏற்பாடு செய்தனர். நாயகன் இந்தக் கூட்டத்தை மறுக்கவில்லை, மறுக்க

முடியாது, மறுக்கவும் கூடாது. அவனுக்கான உண வையும் ஒரு குடியான மகனுடைய வீட்டிலே வைத்துக் கொண்டான். இந்த ஏற்பாடு பல நிலக்கிழார்களுக்குச் சினத்தையும் எரிச்சலையும் உண்டு பண்ணியது. கர ணம் போன்ற அதிகாரிகளுக்கு ஆத்திரத்தை யுண்டு பண்ணியது. அதே நேரத்தில் நிலக்கிழார்களுக்கும் அதிகாரிகளுக்கும் அதிர்ச்சியும் தரத்தான் செய்தது. நடக்கப்போகிற நிகழ்ச்சியால் பாதிக்க இருக்கும் காட்சிகள் அவர்கள் கண் முன்னால் விரியத்தான் செய் தன. அப்படி ஏதேனும் நிகழுமானால்...

சேனாதிபதியைத் தீர்த்துக் கட்டிவிடுவது என்கிற ஏற்பாடும் அதற்குள் மறைமுகமாக நடந்து கொண்டிருந் தது. இந்த ஏற்பாட்டைத் துணிந்து கவனித்தவர்களே அக்கிராமத்தின் பெரும் நிலக்கிழாரான அம்பல வேளா ரும், கரணம் பதவி வகித்த எம்பெருமான் பிள்ளையவர் களும் ஆவர்.

ஏறத்தாழ ஆறுநாழிகைப் போதுக்குள் பல்லவ வீரர்களுக்கான உணவு ஆயத்தமாகி விட்டது. ஐம் பது வீடுகளில் வீட்டுக்கு இருவர் வீதம் உணவு நடந் தேறியது.

செம்பியனூர்க் கிராமத்துக் குடியான மக்களுள் சிறந்து விளங்கிய சிவபாத வேளார் வீட்டில் சேனாதிபதி நாயகனுக்கு விருந்து ஏற்பாடாகியது. சிவபாத வேளாரும் மிக்க பெருமையுடன் விருந்துபசாரம் நடத்தி மகிழ ஏற்பாடுகளைக் கவனித்த வண்ணமிருந்தார். அவருடைய மனையாள் மலையம்மாள் உடல் நலமில்லா மல் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். என்றாலும் பக்கத்து வீட்டு நல்லாயினுடைய உதவி கொண்டு,

சிவபாத வேளாருடைய அருமை மகள் நாயகி சமையல் வேலைகளில் தீவிரமாக முனைந்தாள்.

வீரர்கள் உண்டு முடித்துத் திரும்பிக் கொண்டிருந் தனர். சிவபாத வேளார் வெளியில் புறப்பட்டார். சேனாதிபதியை அழைக்கச் செல்லத்தான் அவர் புறப் பட்டார். அதற்குள் நாயகனுக்குப் பல செய்திகள் எட் டின. அன்று கிராமமே சிதறத்தக்க அளவுக்கு நடை பெறப் போகிற கலவரத்தைப்பற்றிக் கேள்விப்பட்டான். அத்துடன் திரித்துக் கூறப்பட்ட ஒரு செய்தியும் காது களில் அடிபடத்தான் செய்தன. அது:

நடக்கப் போகிற கலவரத்துக்குச் சிவபாதவேளா ரும் ஒரு காரணப் புருஷர் என்பதுதான் நாயகனுக்கு வேதனையாக இருந்தது. அப்பேர்ப்பட்டவர் வீட்டிலா உணவு அருந்துவது?

சற்றே வெளியில் சென்று வரப் புறப்பட்டான் நாயகன். நடக்கப்போகிற கலவரம் என்ன; சம்பந்தப் பட்டவர்கள் யார்யார் என்பனவற்றையும், சிவபாத வேளார் எவ்வளவிற்குச் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ப தையும் அறிந்து வரவே புறப்பட்டான். ஒரு சிலரை அணுகி மெல்ல விசாரித்தான். அவர்களில் ஓரிருவர் மறைத்தனர். ஆனால் பெரும்பாலானோர் சேனாதிபதியே வந்துவிட்ட பிறகு மறைப்பது துரோகம் என்ற சிந்தை யுடன் பிட்டுப்பிட்டு வைத்தனர். வெகுநேரம் கழித்து மண்டபத்துக்குத் திரும்பினான் நாயகன். அதுவரை காத்திருந்தார் சிவபாதவேளார்.

"சேனாதிபதியார்க்காகக் காத்துக் கொண்டிருக்கி றேன்" என்று தலை தாழ்த்திப் பணிவன்புடன் கூறி

ஞர் சிவபாதவேளார். அவருக்கு ஏறத்தாழ ஐம்பது வயது இருக்கும். இளைஞன்தான் நாயகன். ஆனால் அவன் வகிக்கும் பதவி மிக உயர்ந்ததாயிற்றே!

நாயகன் சற்றே கூர்ந்து கவனித்தான். பிறகு கேட்டான்: "உங்கள் பெயர் என்னவென்று முன்பு சொன்னீர்கள்?"

"சிவபாதவேளான்!"

"ஓ...நல்லது; உணவை இங்கேயே கொண்டு வந்து விடுங்கள்."

"கொண்டுவருவதுபற்றி எந்தவிதத் தடையுமில்லை. வீட்டில் மனையாள் உடம்புக்கு முடியாமல் இருக்கிறாள். இருப்பது வயதுவந்த பெண், அவளை அழைத்துக் கொண்டு வந்து இங்குப் பரிமாறச் செய்வது நாரிக மாகத் தெரியவில்லை."

"உங்கள் பெண் ஏன் வரவேண்டும் வேளாரே! கொண்டு வாருங்கள். இங்கே என் வீரர்கள் இருக்கி றார்கள். அவர்கள் பரிமாறுவார்கள்."

"ஆனாலும் என் விருந்து நிறைவு பெற்றதாகாது. அவரவர் வீட்டில் பல்லவ வீரர் உண்ட பெருமிதம் இருக் கும்; எனக்குச் சோற்றைத் தூக்கிவந்த சிறுமிதம் மிஞ்சும்!"

"ஓ...நீங்கள் அந்த முறையில் பேசுகிறீர்களா? விருந்தோம்பி வேளாண்மை செய்வது ஒரு தூய மரபு! நான் ஏற்கிறேன். இதோ புறப்பட்டு விட்டேன் வேளாரே!"

நாயகன் புறப்பட்டான். துணைக்கு நான்கு வீரர்கள் உடன் புறப்பட்டனர். ஆயத்தமாகி யிருந்த குதிரைகளைக் கொண்டு வந்தனர். "தேவையில்லை. பக்கத்து வீதிதானே? நடந்தே செல்வோம்?" என்றான் நாயகன்.

பன்னிரண்டு கால்கள் பாதைகளை அளந்து கொண்டிருந்தன.

முன்னிலவு காலமாதலால் வான வீதியில் பால் வெள்ளம் புரண்டு கொண்டிருந்தது.

வழிநெடுக குடிசை வீடுகள்தாம். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓடுவேய்ந்த வீடுகள். மேலண்டை வாடையில் சில மச்சு வீடுகள் இருந்தன. அவற்றில் இரண்டு மாடவீடுகளாகவும் காணப்பட்டன. அவ்வாறே அதற்குப் பக்கத்திலும் காணப்பட்டன. இவை யாவும் நிலக்கிழார்கள் வீடு. ஓடு வைத்த வீடுகள் அரசாங்க அலுவலாளர் வீடுகள். மற்றபடி ஏர்க்கலப்பைப் பிடித்து வாழும் உழவப் பெருமக்கள் குடிசைகளில் தாம் அன்றுமிருந்தனர்.

சேதுபதி நாயகன் நடந்து செல்வதைப் பலர் வெளியில் நின்ற வண்ணம் பார்வையிட்டனர். ஆண்கள் கரம் கூப்பி வணங்கினர். அத்துடன் சிவபாத வேளாரையும் வணங்கினர். அதிலிருந்து யாரும் சிவபாத வேளாரைப் பொறுமைக் கண்களுடன் நோக்கவில்லை என்பது புரிய வந்தது. அவர்மீது கிராம மக்கள் வைத்திருந்த அன்பும் மரியாதையும் புலப்பட்டன.

பாதை திருப்பத்தில் இருந்தது பஞ்சவாரிய அதிகாரியின் வீடு. அவருடைய வீடு பூட்டப்பட்டிருந்தது.

நாயகனுக்கு விஷயம் தெரியாததால் அந்த வீட்டைப் பற்றி யொன்றையும் கேட்டுக் கொள்ள முடியவில்லை.

“வேளாரே! உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?” என்று கேட்டான் நாயகன்.

“ஒரே பெண்!” என்றார் சிவபாத வேளார்.

“ஒரே பெண்ணே?”

“ஆமாம், சேனாதிபதியாரே!”

“திருமணமாய்விட்டதா?”

“மாப்பிள்ளை குதுரவில்லை.”

“ஓகோ!”

இதற்குள் வீடு வந்து விடவே பேச்சு அத்துடன் நின்றது.

சிவபாதவேளாரின் வீட்டுவாசலில் சிலர் நின்று கரங்கூப்பி வரவேற்றனர். அவர்கள் அண்டை அயலில் வசிப்பவர்கள்.

வீட்டிற்குள் நுழைந்ததும் “நாயகி!” என்று குரல் கொடுத்தார் சிவபாதவேளார். ‘நாயகி’ என்ற பெயரைக் கேட்டதும் நாயகனுக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. தன்னுடைய பெயரைத் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே இப்படிப் பெயரிட்டு அழைக்கிறாரா, இந்தச் சிவபாதவேளார்?

சற்றைக்கெல்லாம் நாயகி அங்கு வந்து நின்று, சேனுதிபதி நாயகனைக் கண்டு வணங்கி நின்ருள். நாயக னும் பண்பிற்கிணங்கி மறு வணக்கம் போக்கிக் கூர்ந்து கவனித்தான். சிவபாதவேளார் வாய் திறந்தார். "என்னுடைய மகள் சேனுதிபதியாரே!"

"ஓ...எதிர்பாராத பெயருடன் கூடிய நல்ல மகளைப் பெற்றிருக்கிறீர் வேளாரே!"

அதுவரை நின்று உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த நாயகி, மெல்லத் தனக்குள் சிரித்துக் கொண்டே இலை போடத் தொடங்கிஞள்.

சைவ உணவுதான். சிவபாதவேளாரும் சைவக் குடியினர்தானே?

ஏறத்தாழ ஒன்பது வகை பதார்த்தங்கள் செய்யப் பெற்றிருந்தன. பருப்புக் குழம்பின் மணம் கமகமத்தது. சுடச்சுட நெய்யைக் கொண்டுவந்து வைத்தான் ஏற் பாடு செய்திருந்த சமையற்காரன்.

நாயகனும் சிவபாதவேளாரும் உணவருந்தத் தொடங்கினர். நாயகிதான் பரிமாறிஞள். உடல் நலக் குறைவுடன் படுக்கையிலிருந்த மலையம்மாள் மெல்ல எழுந்து வந்து வணங்கிஞள். நாயகனும் வாய் மூலம் வணக்கம் சொன்ஞன். பின்னர் உடல் நலம் பற்றிப் பேச்சு எழுந்து அடங்கியது.

உண்டு முடித்ததும் தாம்பூலம் தரித்துக் கொண்டு புறப்பட ஆயத்தமாஞன் நாயகன். அப்போது அது வரை எதைப்பற்றிப் பேசவேண்டும் என்று நினைத் தானே அதைப்பற்றிய பேச்சைத் தொடங்கிஞன்;

“வேளாரே! உங்களை ஒன்று கேட்கலாமா?”

“கேளுங்கள் சேனாதிபதியாரே?”

“நான் இங்கே எதற்காக வந்திருக்கிறேன் தெரியுமா?”

“கேள்விப்பட்டேன். விவசாயத் தகராற்றைத் தீர்க்க.”

“அப்படி யிருந்தும் நான் உங்கள் வீட்டில் விருந் துண்ண ஒப்புக் கொண்டேன்.”

“அதனாலென்ன? என் வீட்டு விருந்துக்கும் விவசாயக் கலவரத்துக்கும் என்ன தொடர்பு?”

“நீங்கள் விவசாயிகள் தலைவராமே!”

“யார் சொன்னது? தலைவனாவது? தலைவனாவதற் கான தகுதி என்னிடம் என்ன இருக்கிறது? வேண்டு மானால் இப்படிக் கூறுங்கள்: விவசாயிகள்பால் அன் புடையவன். இதனால் விவசாயிகள் அன்பைத் திருப் பிச் செலுத்துகிறார்கள்.”

“இந்தக் கலவரத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்.”

சிவ்பாதவேளார் தயங்கினார்.

“ஏன் தயங்குகிறீர்கள்?”

“சேனாதிபதியாரே! இது தனிப்பட்டு நான் சொல் லக் கூடிய கருத்தல்ல. எப்படிப் பார்த்தாலும் நான் விவ

சாயிகள் மீது குற்றம் சொல்ல மாட்டேன். மேலும் அதிகாரிகள் பலரை வைத்துக்கொண்டு என்னை அழைத்து, விசாரியுங்கள். அப்போது எதைப் பேச வேண்டும்; எப்படிப் பேசவேண்டும் என்பது எனக்குத் தெரியும்.''

''நல்லது வேளாரே! இரவு ஏதோ கலவரம் நிகழப் போவதாகக் காற்று வாக்கில் கேள்விப்பட்டேன்.''

''....................''

''ஏன் தயங்குகிறீர்கள்?''

''தயக்கமில்லை, சேனாதிபதியாரே! ஒன்றை நான் மனம் விட்டுத் துணிந்து கூறுவேன்: நீங்கள் உங்கள் உயிரை மிகக் கவனமாகப் பாதுகாக்கவேண்டும். செம்பியனூர் மறவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள்.''

நாயகன் கடகடவென்று நகைத்தான்.

''துணிவு அதிகம்தான் சேனாதியாரே!''

''செம்பியனூர் மறவர்க்கா?''

''இல்லை; உங்களுக்கு.''

''எனக்கா?''

''ஆம்!''

''என் உயிரைப்பற்றி எச்சரிக்கப் பிறந்த உங்கள் துணிவைப் பாராட்டுகிறேன்!''

"மனத்தில் தோன்றியதைச் சொன்னேன்."

"அந்தக் களங்கமில்லாத் தன்மையை எண்ணித் தான் பொறுத்துக் கொண்டேன். செம்பியனூர் மறவர் உயிரைக் கவனமாக வைத்திருக்கும்படி யாரைவிட்டாவது எச்சரிக்கை செய்து வையுங்கள். நல்லது, நான் புறப்படுகிறேன்" என்று கூறிய நாயகன், கதவோரமாக நின்ற நாயகியை ஓரக் கண்களால் கவனித்த வண்ணம் உடன் வந்தவர்களுடன் புறப்பட்டான்.

அவன் சந்துமுனை திரும்புகிற வரை நின்று கவனித்திருந்த சிவபாத வேளார், உள்ளே சென்றார்; அவருடைய வாய் "ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!" என்று முனகிக் கொண்டது.

தன்னிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொண்டு சேனாதிபதியார் புறப்பட்டிருக்கக் கூடாதா என்று கசந்து கொண்டவளாய் நின்றிருந்த நாயகி, தந்தையார் முனகியதைக் கேட்டு அதிர்ந்தே போனாள். 'ஐயயோ! இன்றிரவு அவருக்கு ஏதோ ஒரு பேராபத்து முளைத்து விடும் போலிருக்கிறதே!'

மண்டபத்தையடைந்த நாயகன் வெகுநேரம் வரை உட்கார்ந்து கொண்டே சிந்தனையில் மூழ்கினான். அவனுடைய நினைவலைகள் பலவாறு மோதின. இரவு என்னதான் நடக்கப் போகிறது? சிவபாதவேளார் எச்சரிப்பிலும் ஏதோ ஒரு காரணம் புதைந்துதான் இருக்க வேண்டும்.

குதிரையிலிருந்து யாரோ இறங்கிவருவது தெரிந்தது. வந்தவன் சேனாதிபதியை நெருங்கி, "சேனாதிபதியார்க்கு வணக்கம். எங்கள் செம்பியனூர் மறவர்ப் பிரபு

அவர்கள் தங்களை அழைத்துவரச் சொன்னார்!" என்றான்.

எத்துணைத் துணிச்சல் இந்தச் செம்பியனூர் பிரபுவுக்கு! தன்னை யழைக்க ஓர் ஆளையனுப்புவதா?

"ஏன்?" என்று கேட்டான் நாயகன்.

"தெரியாது."

"உங்கள் பிரபு கறுப்பா சிவப்பா?"

"கறுப்பு!"

"அதுகூட எனக்குத் தெரியாது! இதை அவரிடம் சொல்ல மறந்து விடாதே!"

வந்தவன் புறப்பட்டான்.

இரவு நடக்கப் போகிற கலவரத்துக்குத் தலைமை தாங்கப் போகிற குண்டர்களுள் அவனும் ஒருவன் என்பது நாயகனுக்குத் தெரிய நியாயமில்லை யல்லவா?

கலவரம் எந்தத் திசையில் எந்தக் கோணத்தில் உருவாகும் என்றே இனங் கண்டு கொள்ள முடியாமல் தவித்த நிலையில் அமர்ந்து காணப்பட்டான் நாயகன். வீரர்கள் அனைவரையும் விழிப்புடன் கவனத்தை நெஞ்சில் செருகிய வண்ணம் ஆயத்திப் படுத்தியிருந்தான்.

நடந்தது இதுதான்—

செம்பியனூர்க் கிராமத்து முக்கால் நிலப்பகுதிகள் சின்னப்ப மறவர்க்குச் சொந்தமானவை. இருக்கிற கால்பகுதி நிலம் ஏனைய குடியானவர்களுள் வசதி நிறைந்த பலருடையதாக இருந்தது. அதில் பெரும் பகுதி சிவபாத வேளார்க்கு உடையது.

செம்பியனூர் சின்னப்ப மறவர்க்கு அந்தக் கிராமத்தை வளைத்துவிடவேண்டும் என்கிற பேராசை நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. அப்படி வளைக்கப் பட்ட கிராமத்து மக்கள் அனைவருக்கும் அவரே முடிசூடா மன்னர்போல விளங்கவேண்டும் என்பது அவருடைய எதிர்பார்ப்பு. இப்போதும் அவர் முடிசூடா மன்னர் போலவே இருந்து வந்தார். கிராம மக்கள் அவருக்கு உரிய மரியாதையை வழங்கி வரத் தவறவில்லை. ஆனாலும் ஒரு சிலர் நிலத்துக்குச் சொந்தக்காரர்களாகத் தன் முன் நிற்பதை மறவர் விரும்பவில்லை. குறிப்பாக சிவபாத வேளாருக்கு அடுத்தபடியான சிறப்பு இருப்பதை மறவரால் பொறுக்க முடியவில்லை.

எனவே, நிலப்பகுதிகளை விலைக்குத் தந்துவிடுமாறு பலரை வேண்டினார். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். ஒரு சிலர் ஒப்புக்கொண்டனர். ஆனால் சிவபாத வேளாரும், ஏனையவர்களும் முற்றிலும் மறுத்துவிட்டனர். அவர்கள் மறுப்பதைக் கண்டு, முன்னர் ஒப்புக் கொண்டவர்களும் மறுத்துவிட்டனர். இது மறவர்க்குப் பெருத்த கோபத்தைத் தூண்டிவிட்டது. இதன் காரணமாகக் கிராமத்தில் சச்சரவுக்கு மேல் சச்சரவு நிகழ்ந்தது. பயிரிடுவதில் மனப்பேதங்கள் முகிழ்த்தன. மறவர் வெளியூரிலிருந்து உழவர்களைக் கொண்டு வந்து அதிகப்படியான கூலியைக் கொடுத்தார். சிவபாத வேளாரோ

இருக்கிற கால்பகுதி நிலங்களை கிராமத்து உழவர்களை வைத்து விளையச் செய்தார். ஒருநாள் வெளியூரிலிருந்து வந்த ஆட்களை உள்ளூர் உழவர்கள் அடித்து விரட்டி விட்டார்கள். மறவர் கொண்ட கோபத்துக்கு எல்லையில் லாமல் போய்விட்டது. அதன் காரணமாகத்தான் அன் றிரவு—

நடக்க இருந்தது—

கால்பகுதி நிலங்களில் அமோகமாக விளைச்சல் கண் டிருப்பதை பொறுக்கமாட்டாத சின்னப்ப மறவர், குண் டர்களை ஏவி எரியூட்டும்படி ஏற்பாடு செய்திருந்தார். அப்படி எரியூட்டி அழிவு கண்டால் பல வயிறுகளுக்கு நெருப்பைச் சுமக்கும் நிலையேற்பட்டுவிடும். இதனுல் பல குடும்பங்கள் அழிய நேரிட்டுவிடும். இதன்மூலம் கொலைகள் விழுந்தாலும் வியப்பதற்கில்லை.

சின்னப்ப மறவர் எதற்கும் துணிந்தே இருந்தார். வரப்போவதை பின்னுல் பார்த்துக் கொள்ளலாம் என்ற துணிவில் கிராமத்துஅரசியல் அலுவலர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு கையூட்டு (லஞ்சம்) அளித்திருந்தார்.

எதிர்பாராத விதமாகச் சேனுதிபதி நாயகனும் வீரர்க ளும் வந்திருப்பதைக் காணத்தான் சின்னப்ப மறவருக்கு வேதனை கண்டுவிட்டது. இப்போதும் கையூட்டு அளித் துச் சேனுதிபதியை கைக்குள் போடவே ஆளையனுப்பி வைத்தார். அது நாயகனிடம் செல்லுபடியாகாதே!

பஞ்சவாரியத்தலைவர், சேனுதிபதி வருகையைக் கேள் விப்பட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டே வெளியேறிவிட் டார். மற்றவர் என்ன செய்வதென்று புரியாமல் புழுவா

கத் துடித்தனர். இரவு நடக்கப்போவதைத் திடீர் ஏற்பாட்டின் மூலம் தடுத்து நிறுத்த முடியவே முடியாது. பலர் மூலமாகப் பல முனைகளிலிருந்து குண்டர்களை ஏற்பாடு செய்திருந்தனர். அவர்களை யார் யார் என்று கண்டு தடுத்து நிறுத்த முடியும்?

அப்படியும் ஏதேனும் மாறுதலைக் காண முடியுமா என்று பலப்பல ஏற்பாடுகளின் மூலம் முயன்று பார்த்துக் கொண்டிருந்தார் சின்னப்ப மறவர்.

நேரம் சென்றுகொண்டே இருந்தது.

# நான்கு

**எ**ங்கிருந்தோ பேரிரைச்சல் பலமாகக் கேட்டது அடுத்த கணமே—

குதிரைகளில் ஆயத்தமாக இருந்த வீரர்கள் ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு புயலென பறந்தார்கள். நிலா வெளிச்சம் மங்கிக்கொண்டு வருகிற நேரமாக இருந்தாலும் பாதைகள் நன்ருகத் தெரிந்தன. ஆயினும் குதிரைகள் கிளப்பிய புழுதி மேலெழுந்து கப்பியதால், பின்னுல் வருகிற குதிரைகள் தடுமாறத்தான் செய்தன. அவற்றின் சேணங்களைப் பற்றி மிகவும் லாகவமாகச் செலுத்திய பல்லவ வீரர்களை சேனுதிபதி நாயகன் உள்ளுக்குள் பாராட்டிக்கொண்ட வண்ணம் நடுவே புகுந்து விரைந்து கொண்டிருந்தான்.

இரைச்சலிட்டவர்கள் குடிசைவாழ் மக்கள். வயக்காடுகளில் குண்டர்கள் தீப்பந்தங்களுடன் புகுந்ததைக் கண்டுதான் அவ்வாறு இரைச்சலிட்டனர்.

வயல்களில் புகுந்த குண்டர்கள் கொஞ்சமும் தாமதி யாமல் கைகளிலிருந்த தீப்பந்தங்கள் மூலம், நெற்கதிர் களுக்கும், நெற்போர்களுக்கும், தீமூட்டினர். ஒரு சாரார் இந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறபோது, மறுசாரார் அண்டைப்புறங்களிலிருந்த குடிசைகளுக்குத் தீ வைக்க முனைந்தனர். ஏழையெளியவர்கள் தங்கள் குழந்தை குட்டியுடன் அபயக் குரலெழுப்பி அலறினர். அதற்குள் வீரர்கள் அங்குச் சென்றுவிட்டனர். கையிலி ருந்த ஆயுதங்களால் குண்டர்களைத் தாக்க முனைந்தனர். குண்டர்களும் எதிர்பாராமல் வந்த இந்தத் தாக்குதலைச் சமாளிக்கவேண்டிய நிலைக்கு ஆளாகினர். பயந்தோடவும் முடியாது. பாய்ந்தோடி வந்து பிடித்துக்கொண்டால் தண்டனை பயங்கரமாக இருக்கும். கூடியவரை எதிர்த் துப் போராடுகிற நிலைக்கு ஆயத்தமாய்விட்டனர்.

இருதரப்புக்கும் பயங்கரக் கைகலப்பு ஏற்பட்டு விட்டது. குண்டர்களும் முன் எச்சரிக்கையுடன்—மக்கள் தாக்கினால் என்ன செய்வது என்கிற எச்சரிக்கையுடன் ஆயுதங்களைக் கொண்டு வந்திருந்தனர். ஏறத்தாழ எட்டு நாழிகைப் போதுவரை அந்தப் பகுதியே அல்லோலகல் லோலப்பட்டுவிட்டது. குண்டர்கள் அகப்பட்டுக் கொண் டால் என் செய்வது என்ற துடிப்பு நிலை கண்ட சின்னப்ப மறவர், தம்மிடம் எப்போதும் ஆயத்தமாக வைத்திருந்த அறுபது ஆட்களை ஆயுதங்களுடன் ஏவினர்.

பல்லவ வீரர்கள் குதிரைகளைச் செலுத்திய வண்ணம் குண்டர்களையடக்கப் பெரும்பாடுபட்டனர். பலரைக் கொஞ்சமும் இரக்கமில்லாமல் வெட்டி வீழ்த்தினர்; அடித் துச் சாய்த்தனர். கிராமமே மருட்சி கண்டது. வீரக்காளை கள் அதுவரை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஆனால் திடும்மென்று மறவருடைய ஆட்கள் ஆயுதங்களுடன் களத்தில் இறங்கிவிடவே, அதுவரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இளைஞர்களும், உழவர்களும் கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பாய்ந்தனர்.

ஒரு மருங்கே வயல்களில் நெற்போர்களும், மறு மருங்கே சில குடிசைகளும் எரிந்து கொண்டிருந்தன. தீச் சுடர்கள் அச்சம் தரத்தக்க அளவுக்கு வானோங்கி எழுந்தது. அது மேலும் பரவவிடாத அளவுக்குப் பாதுகாக்கப் பெண்களும் முனையத் தொடங்கிவிட்டனர். கிணற்றில் இருந்து நீரைச்சேந்தி வாரிவாரியிரைத்தனர். எல்லாவற்றையுமே மேன்மாடத்தில் நின்ற வண்ணம் இதயத்தைப் பற்றிக்கொண்டு பார்வையிடலானார் சின்னப்ப மறவர்.

சண்டை நடந்த இடங்களில் ரத்தம் பெருக்கெடுத்துப் பரவியது. பல உயிர்கள் குற்றுயிரும் குலையுயிருமாகத் துடித்துக்கொண்டிருந்தன. எங்கும் அவல ஓலங்கள் பரவி நெஞ்சை உலுக்கின.

இந்த மனிதர்கள் அமைதியாக வாழ்வார்கள் என்றுதான் ஆண்டவன் படைத்தான். ஆனால் ஒருவரை வீழ்த்தி இன்னொருவர் வாழ அல்லவோ கற்றுக்கொண்டு உலகை நாற்றமடிக்கச் செய்து கொண்டிருக்கிறார்கள்!

ரசனைக்காகப் படைக்கப்பட்ட செடிகொடிமரங்கள் தீயால் பாதிக்கப்பட்டுக் கருகின. இந்த மண்ணில் தோன்றிய மூலப் பொருள்களான அவை, இந்த மனிதர்கள் கடைசியாக ஏன்தான் உருவானார்களோ என்று வெந்து கருகின போலும்!

சேனுதிபதி நாயகன் வாளை உருவிக் கொண்டு பம்பரமாகச் சுழன்று கலவரத்தையடக்குவதில் மூழ்கியிருந்தான். அவனுக்கு ஏதும் நேர்ந்துவிடக்கூடாது என்பதில் மிக்கக் கவனமுடன் பத்து வீரர்கள் சூழ்ந்து கொண்டே இருந்தனர்.

பல்லவ வீரர்கள் ஏறத்தாழ இருபது பெயர்கள் உயிர் துறந்துவிட்டனர். பலருக்குப் பலத்த காயங்கள். எதிர்தரப்பின் இழப்புக்குக் கணக்கில்லை. இனியும் போராடினுல் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம் என்கிற நினைவுடன் குண்டர்கள் ஓட்டம் பிடிக்கத் தொடங்கினர். அப்படியும் அவர்களை விடாது துரத்திப் பிடிப்பதில் ஈடுபட ஆணையிட்டான் நாயகன்.

தப்பியவர்கள் போக முப்பது குண்டர்களும், சின்னப்ப மறவருடைய கையாட்கள் இருபது பெயர்களும் அகப்பட்டனர். ஒருவாறு கலவரம் ஒடுக்கப்பட்டது என்ற நினைவுடன் குதிரையை விட்டுக் கீழே இறங்கி பார்வையிட்டான். வீழ்ந்துவிட்ட பல்லவ வீரர்களைத் தேடுவதில் அவன் பெரிதும் கவனம் செலுத்திஞன். அவர்களுள் ஒருவர்கூட தேர்வது என்பது இயலாத காரியம் என்று புலப்பட்டது.

சுற்றிலும் கண் கலங்கிய உழவப் பெருமக்களும், அவர்களுடைய மனைவிமார்களும் பார்க்க வேதனையுடன் நின்று கொண்டிருந்தனர்.

அரசர் சிம்ம வர்மருடைய ஆட்சியில் இப்படி ஒரு களங்கம் நிகழ்ந்து இருக்கக்கூடாது. ஆனுல் நிகழ்வதும் இயல்பான ஒன்றுதானே?

தமிழகத்தின் முக்கூறுகளாக இருந்தவை மூன்று நாடுகள். ஒன்று பாண்டிய நாடு; இன்னொன்று சோழ நாடு; மூன்றாவது சேர (சேரள + கேரள) நாடு. இப்போது நான்காவதாக ஒரு புதிய மரபு—பல்லவ மரபு முளைத்து, பழையவர்களைத் தலையெடுக்கச் செய்யாத அளவுக்கு வளர்ந்து வந்தது. மக்களுக்கு எரிச்சலைத் தூண்டத் தான் செய்தது. மேலும் அப்போதைக்குச் சோழ நாடும் பாண்டிய நாடும் களப்பிரர் என்ற கொடிய காட்டு மிராண்டி மரபினர் புகுந்து கொடுமை செய்துவிட்ட காரணமாகப் பலவீனப்பட்டிருந்தன. அந்த நேரத்தில் பல்லவர்களும் புகுந்து காஞ்சியைக் கைப்பற்றி மதுரை வரை இடம் பிடிக்க முனைந்தனர். ஏதோ கடுங்கோன் பாண்டியன் தோன்றினானே, பாண்டிய நாடு பிழைத்ததோ!

ஆனால் சோழநாடு முற்றிலுந் தலை எடுக்க முடியாமலேயே போய்விட்டது. இதனால் சோழநாட்டு மக்கள் பலருக்குப் பல்லவ ஆட்சியில் வெறுப்பும் வேதனையும் வளர்ந்து வந்தன. சிம்மவர்ம பல்லவ அரசர் காலத்தில் சற்று அதிகமாகவே இருந்தன. செல்வம் படைத்த அனைவருமே தங்களைச் சோழ அரசர்களாகப் பாவித்துக்கொள்ளத் தலைப்பட்டனர். தலைவன் உருப்படியாக இல்லையானால் தொண்டர்களெல்லாம் குண்டர்கள்தாமே! சோழ நாட்டு நிலைமையும் இதற்கு ஒப்பாக இருந்தது. சின்னப்ப மறவரும் செம்பியனூர்க்கு அரசராக நினைத்ததில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்?

எல்லாவற்றையும் பார்வையிட்டுக்கொண்டே வந்த சேனாதிபதி நாயகன், ஓரிடத்தில் வந்து நின்றபோது—

திடும்மென்று ஒருவன் பாய்ந்து வந்தான். அவனுடைய கையில் கனத்த தடி இருந்தது. அதனைக்கொண்டு நாயகனைத் தாக்கவே அவன் பாய்ந்து வந்தான்.

மின்னல் தெரிக்கும் நேரத்தில் இதனைக் கவனித்து விட்ட சிவபாத வேளார், "சேனாதிபதி" என்று உரக்கக் கூவிக்கொண்டே குறுக்கே சரேலெனப் பாய்ந்தார். அடுத்து—

அவர்—சிவபாத வேளார், "நாயகி" என்ற கூச்சலுடன் தரையில் சாய்ந்தார்; தாக்கிவிட்டு ஓட முனைந்த குண்டனை வீரர்கள் தாவிப் பிடித்துக்கொண்டனர். சிவபாதவேளார் மயக்கம் கண்டு தரையில் வீழ்ந்துகிடந்தார். அவருடைய தலையில் ரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது.

கிராம மக்கள் ஓடோடி வந்து சிவபாத வேளாளரைத் தூக்கிக்கொண்டு மருத்துவர் இல்லம் நாடி விரைந்தனர். அவர்களுடன் காயம் பட்டிருந்த வீரர்களையும் அழைத்துக்கொண்டு பின் தொடர்ந்தான் சேனாதிபதி நாயகன். அப்போது, தன்னுடைய வீரர்களை நோக்கி, "இந்தக் குண்டர்களைக் கொண்டுசென்று கோயில் மண்டபத் தூண்களில், கொத்துக்கொத்தாகக் கட்டி வையுங்கள். தூண்கள் பற்றவில்லையானால் மரங்களில் கட்டுங்கள். நான் இதோ வந்துவிடுகிறேன். கவனம்" என்று கூறினான்.

மருத்துவர்கள் நால்வர் அந்தக் கிராமத்தில் இருந்தனர். அவர்கள் அரச ஆணைக்கு உட்பட்டுக் காயங்களுக்கு மருந்து போட்டனர். சிவபாத வேளாரைப் பத்திரமாக ஒரு வண்டியில் படுக்கவைத்து வீடு நோக்கி அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டு, மண்டபம் நோக்கித் திரும்பினான் நாயகன்.

மண்டபத்தை யடைகிறபோது விடிசேவல் கூவி விட்டது. இன்னும் ஐந்து நாழிகைப்போதில் வைகறைத்

தலைவன் கிழக்கு வானை ஆட்சி செய்யத் தொடங்கி விடுவான்.

வீரர்கள் யாவரும் களைப்பாறிக் கொண்டிருந்தனர். வேறு சிலர் எதிரிலிருந்த குளத்தில் குளித்து முடித்துத் திரும்பிக்கொண்டிருந்தனர். குளமே ரத்தக் கறை படிந்த பாவத்துக்கு உள்ளாயிற்று. கோயில் குளந்தானே? ஒரு நாள் கழிந்து மறுநாளானால் பாவந் தீர்ந்து புண்ணியம் ஊற்றெடுத்து விடுமே!

மண்டபத்தையடைந்த நாயகன், தூண்களிலும் மரங்களிலும் கட்டப்பட்டிருந்த ஆட்களைப் பார்வையிட்டான். அப்போதைக்கு அவன் ஒன்றையும் பேசிக் கொள்ளவில்லை; விடிந்ததும் பார்த்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் உடைகளைக் கழற்றி வைத்து விட்டு அவனுக்காகக் கொண்டுவரப்பட்டிருந்த பஞ்சணையில் சாய்ந்தான். இடையிலிருந்த ஐந்து நாழிகைப் போதை அவன் வீணாக்கவில்லை. ஓய்வுடன் சற்றே உறங்கவும் செய்தான். ஆனால் வீரர்கள் மட்டும் மிக்கக் கவனமுடன் காவல் இருந்தனர். எந்த நேரத்தில் எது ஏற்படுமோ ?

அப்படியொன்றும் ஏற்பட்டுவிடவில்லை. பொழுது இனிதாக விடிந்தது.

சேனாதிபதி நாயகன் விழித்துக் கொண்டான். பின்னர் சிறைப்பட்டிருந்த ஒவ்வொருவராக நன்கு பார்வையிட்டான். குறிப்பாகச் சிலரை ஏதோ விசாரித்தான். சிலர் மறுமொழி கூறினர்; பலர் மௌனம் சாதித்தனர். மௌனம் சாதித்தவர்களைப் பிரம்பால் அடித்து விசாரித்தான். பொதுவாக அனைவரிடமிருந்தும் ஒட்டு மொத்த

மாகக் கிடைத்த விடை, இத்தனைக்கும் காரணம் சின்னப்ப மறவர் என்பதுதான்.

எல்லாவற்றையும் மனத்தில் வைத்துக் கொண்டு காலைக் கடனை முடிக்கப் பக்கத்திலிருந்த வயக்காட்டை நோக்கி நடந்தான். இரவு கலவரம் நடந்த பகுதி அல்ல அது. அது வேறுபக்கம் மாந்தோப்புக்களும் தென்னந் தோப்புக்களும் நிறைந்த பகுதியது. அங்கே ஒரு மடுவும் இருந்தது. துணைக்கு ஒரு குத்து வாளை மட்டும் எடுத் துச் செருகிக்கொண்டு நடந்தான் நாயகன். வாயில் ஒரு கருவேலங்குலச்சி இருந்தது. அதனை மென்று பல் துலக்கிக் கொண்டே மடுவை நாடினன். அப்போது—

எதிரே நாயகி இடுப்பில் குடத்துடன் வந்துகொண் டிருந்தாள். மடுவில் குளித்து முடித்துத் தண்ணீர் கொண்டு சென்ருள். எதிரே வரும் சேனை நாயகனைக் கண்டதும் நாணிக் கோணித் தலை குனிந்துகொண்டாள் நாயகி.

அவளைக் கண்டதும் அவள் யார் என்பது நாயக னுக்குப் புரிந்துவிட்டது. உடனே அருகே சென்ருன். அவன் அருகே வருவதைக் கண்ட நாயகிக்கு ஏழு நாடி களும் நடுங்கத் தொடங்கிவிட்டன. கற்பு நெறி பரவிய எந்தப் பெண்ணும் பிற ஆடவன் தன்னை நெருங்கி வருகிறபோது அஞ்சத்தான் செய்வாள். ஆடவரைப் பார்த்து இயல்பாகச் சிரிப்பதே அரை கற்பை அடகு வைப்பது போல என்கிற பண்புடன் பெண்கள் வாழ்ந்த காலம் அது.

"பெண்ணே! உன் தந்தையார் எப்படியிருக்கிருர்?" என்ருன் நாயகன்.

நாயகியும் தன் தந்தையைப் பற்றி விசாரிக்கவே, நன்றியறிதலுடன் நின்று, "எவ்வளவோ தாழ்விலே!" என்ருள்.

"பெண்ணே..." நாயகன் எதையோ சொல்ல வாயெடுத்தான். உடனே நாயகி குறுக்கிட்டு, "இது என்ன நாடகத்தில் கூப்பிடுவது போல...என் பெயர் நாயகி!" என்ருள்.

நாயகன் கடகடவென்று நகைத்தான். "இந்த விசித்திரமும் ஒரு நாடகம் மாதிரித்தான் இருக்கிறது. பெண்ணே!"

"மீண்டும்..."

இம்முறையும் நாயகன் சிரித்தான். "எனக்கு உன் பெயரை இட்டு அழைக்க என்னமோ மாதிரியிருக்கிறது."

"அப்படியா! உங்கள் அம்மா உங்களே எப்படி அழைக்கிருர்கள்?"

"கண்ணு..."

"உங்கள் சகோதரியார்...?"

"நாயகா..."

"அவர்களுக்கு அப்படி அழைக்க என்னமோ மாதிரி யில்லே?"

அசந்து போனுன் நாயகன். அவன் என்னமோ வென்று நினைத்து மறுமொழி கூறிக்கொண்டு வந்தான். கடைசியில் இப்படியா மடக்கிவிடுவாள்?

மனத்துள் புத்திசாலிப் பெண் என்று பாராட்டிக் கொண்டே சொன்ஞன்: "நாயகி, இன்னும் கொஞ்சம் நாழிகையில் வீட்டுக்கு வருகிறேன் என்று அப்பாவிடம் சொல்."

நாயகியும் நாணத்தால் கன்னம் சிவக்க ஒசிந்த நடையுடன் வீடு நோக்கி நடந்தாள். அவள் நடந்து செல்வதைச் சற்றே ஓரக் கண்ணுல் ரசித்தான் நாயகன். பின்னர் மடுவை நோக்கி நடந்தான்.

காலைக்கடன்களை முடித்துக்கொண்டு மண்டபத்தை யடைந்தான். எப்படியும் அன்றையப் போதுக்குள் அவன் பயணப்பட முனைந்தான். இதற்குள் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருந்தன.

முதற்காரியமாக சிவபாத வேளார் வீட்டை நாடிச் சென்ருன். அவன் வருவான் என்பதை முன்கூட்டியே நாயகி அறிந்திருந்தபடியால் காலைச் சிற்றுணவைச் செய்துவைத்திருந்தாள். ஏனே அவன் உண்பான் என் பதில் அவனுக்கு நம்பிக்கை இருந்தது.

சேனுதிபதி நாயகன் வரப்போகிருன் என்பதை யறிந்த சிவபாதவேளார் கூடியவரை அமர்ந்து பேச உடலைப் பக்குவப் படுத்தி வைத்துக்கொள்ள முயன்ருர். காலை மருத்துவர் வந்து அடிபட்ட இடத் தில் வேற்றுக் கட்டுப் போட்டு, ஏதும் உடலைப் பாதிக்கூடாது என்பதற்காகச் சூரணத்தைத் தேனில் குழைத்துக் கொடுத்துவிட்டுச் சென்ருர்.

நாயகி அடிக்கடி அப்பாவைக் கவனிப்பது போல வந்து, கண்களைத் தெரு வாசற்படிப் பக்கம் செலுத்து

வது போலச் செலுத்திவிட்டுப் போகத் தவறவில்லை. ஏன் இத்தனை நேரம்?

வெளியில் காலடிச் சத்தம் கேட்டது.

நாயகன்தான் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

"வணக்கம் வேளாரே!" என்று கூறிக்கொண்டே வேளார் படுத்திருந்த கட்டிலருகே வந்து அமர்ந்தான். வேளாரும் வணக்கம் போக்கிய வண்ணம் எழுந்திருக்க முயன்றார். ஆனால் நாயகனே, "தேவையில்லை. படுத்துக் கொண்டே பேசலாம். உடல் நிலை எப்படி இருக்கிறது? மருத்துவர் வந்துவிட்டுப் போனாரா?" என்றான்.

வேளாரும், "மருத்துவர் வந்து மாற்றுக் கட்டுப் போட்டு, மருந்து கொடுத்துவிட்டுச் சென்றார். நீங்கள் வரப் போவதாக நாயகி சொன்னாள். நான் பாக்கிய சாலி!" என்றார்.

"வேளாரே! நியாயப்படி நான் படுக்கையில் படுத்திருக்க வேண்டியவன். எனக்கு ஏற்பட இருந்த நிலையை நீங்கள் ஏற்றுவிட்டீர்கள். உங்களை நான் மறக்கமாட்டேன்."

"சேனாதிபதியாரே! நீங்கள் வரப்போவது தெரிந்து நாயகி ஏதோ பலகாரம் செய்திருக்கிறாள். உண்பதன் மூலம் அவளுக்கும் ஒரு நிறைவு கிடைக்கும்."

"நானும் எதிர்பார்த்துத்தானே வந்தேன்!"

நாயகன் இவ்வாறு கூறியதும் நாயகிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. உடனே மணை போட்டு இலை போட்டாள்.

நாயகனும் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டே மணையில் அமர்ந்தான். சுடச்சுட நான்கு அப்பங்கள், பணியாரங்கள் பரிமாறப்பட்டன. தொட்டுக் கொள்வதற்குப் புளிக் குழம்பு. நாக்கைத் தட்டிக்கொண்டு உண்டு முடித்தான். உடனே நாயகி இன்னோர் அப்பம் கொண்டு வந்தாள்.

"ஆ...ஆ...! இது போதும், இன்னும் தின்றால் உடம்புக்கு ஆகாது" என்று கூறி மறுத்தான்.

நாயகி விடுவதாக இல்லை. "ஒரே ஒரு அப்பம். நான்காக இருக்கக் கூடாது. ஐந்தாக இருக்கட்டும்" என்றாள்.

"அது ஏன்!" என்று வியப்புடன் கேட்டான் நாயகன்.

"ஒற்றைப் படையிலிருந்தால் உறவு நீடிக்கும்?"

"ஓகோ!"

கடகடவென்று சிரித்தான் நாயகன். இவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த வேளார்க்கு மகிழ்ச்சியாக இருந்தது.

உண்டு முடித்ததும் கையலம்பிக் கொண்டு, வேளார் படுத்திருந்த படுக்கையருகே வந்தான். "நான் விசாரணைகளை முடித்துக்கொண்டு இன்றே புறப்பட வேண்டும் வேளாரே!" என்றான் நாயகன்.

வேளார், "அப்படியா! பகலுணவு" என்றார்.

"அவசியமில்லை. தஞ்சையில் ஏற்பாடாகி இருக்கிறது."

"நல்லது; விசாரணையின்போது நான் வரவேண்டுமல்லவா!"

"வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். எனக்கு எல்லாமே ஓரளவு புரிந்துவிட்டது. நான் புறப்படலாம்?"

"சென்று வாருங்கள்!" என்று கரம் கூப்பினார் சிவபாதவேளார்.

பிறகு உள்ளறையின் கதவு மறைவில் நின்று கொண்டிருந்த நாயகியை நோக்கி, "நாயகி! நான் புறப்படுகிறேன்" என்றான்.

வேளார் பூரித்துப் போனார். நாயகியிடமிருந்து மறுமொழி வரவில்லை. நாயகன் புறப்பட்டான்.

மண்டபத்தை யடைந்ததும் விசாரணைக்கான ஏற்பாடுகளை வீரர்களுள் முக்கியமான பதவிகளை வகிப்போர் கவனித்திருந்தனர்.

நடுநாயகமாக இருந்த பீடத்தில் அமர்ந்தான் சேனாதிபதி நாயகன். ஊர் மக்கள் சுற்றிலும் நின்று கொண்டிருந்தனர். என்ன நடக்கப் போகிறது என்பதை அறியவும் வேடிக்கைப் பார்ப்பதிலும் அவர்களுக்கு ஆர்வம் அதிகம் இருந்தது.

விசாரணைக்காகச் சொல்லியனுப்பப்பட்ட அரசாங்க அதிகாரிகள் அனைவரும் வந்திருக்கிறார்களா என்பதை

யறியப் பார்வை யிட்டான் நாயகன். இந்த அலுவலாளர்களை ஊர்ப் பெருமக்கள் என்பர். அவர்களுள் வாராதவர் ஆளுங்கணத்தார். அவர் தஞ்சையில் இருந்தார். முக்கியமாக இப்படியான விசாரணைகளுக்கு அவரே முக்கியப் பொறுப்பேற்று விசாரிப்பார். இப்போது உடனடியாக அவரை அழைக்க இயலாது. அவருக்குச் சமமாகத்தான் சேனாதிபதி நாயகனே இருக்கிறானே!

முதலில் நீர்ப் பிரச்சினை பற்றிய விசாரணையைத் தொடங்கினான் நாயகன். அதற்குரிய ஏரிவாரியப் பெருமக்களை அழைத்து விசாரித்தான். பிறகு நிலவகைக்குரிய வரிவகைகளை விசாரித்தான் 'அடைநிலம்', 'புயல் நிலம்' பற்றிய விசாரணைகளில் அரசாங்கத்துக்குரிய பாதி வரிகளைச் செலுத்தாமல் செம்பியனூர் மறவர் தின்று ஏப்பம் விட்டுவந்தது தெரிய வந்தது. எனவே உரிமைகளைப் பிடுங்கி இன்னொருவர் கையில் ஒப்படைக்க அப்போதே முயற்சி எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நாயகனோ, பல்லவ அரசரைக் கலந்துகொண்டு ஆளையனுப்பலாம் என்றிருந்துவிட்டான்.

ஏற்கெனவே ஏற்பட்ட பஞ்சத்தால் சில நடைமுறைகள் மாறுபட்டு, செம்பியனூர் மறவர், சில நிலப் பகுதிகளைத் தம் கைக்குள் அடக்கிக் கொண்டார். உடனே பஞ்சவாரியத் தலைவரை விசாரிக்கத் திரும்புகையில் அவர் நேற்று மாலையே வீட்டைப் பூட்டிக் கொண்டு திருவையாறு சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்தது. பயத்தின் காரணமாக அவ்வாறு அப்படி ஓடியிருக்கிறார் என்பதும் புரிய வந்தது.

முடிவாக செம்பியனூர் மறவர் செய்த தகாத காரியத்தை விசாரித்துத் தண்டனை வழங்கவேண்டியது

தான் மிகுதி. என்ன காரணம் பற்றியோ நாயகன் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடாமல், செம்பியனூர் மறவரைச் சிறைப் பிடித்துக் காஞ்சிக்கே அழைத்துச் சென்று அரசர் முன்னிலையில் நிறுத்தித் தண்டனை வரங்கித்தர விரும்பினான். நியாயப்படி சின்னப்ப மறவர்க்குக் கடுந்தண்டனை விதிக்க வேண்டும். என்ன தண்டனை விதிப்பது என்கிற குழப்பம்தான் மேலோங்கியது. இருண்டு போன சோழ நாட்டின் செல்வாக்கு மிக்கவர்களுள் செம்பியனூர் சின்னப்ப மறவரும் ஒருவர். எனவே அரசரின் நினைவுக்கே இந்தத் தண்டனை விவகாரத்தை விட்டுவிட அவன் தீர்மானித்தான்.

விசாரணையை ஒருவாறு தெளிவாக்கிக் கொண்டு, அரசாங்க அதிகாரிகளுள் குறிப்பிடத்தக்க துரோகச் செயல்களுக்கு உட்பட்டவர்களை நாளையே தலைநகர் நோக்கிப் புறப்பட்டு வரும்படி ஆணையிட்டான். பிறகு சிறைப்பிடிக்கப்பட்ட குண்டர்களுடன் செம்பியனூர் சின்னப்ப மறவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். அப்போது—

மனத்தில் என்ன தோன்றியதோ; உடனே பத்து வீரர்களை அழைத்து, ஒரு வாரம் வரை சிவபாதவேளார் வீட்டுக்குக் காவல் இருக்கும்படிப் பணித்தான். அவன் நினைத்தது நியாயமானதே! வேளார் உயிருக்கு ஏதேனும் ஆபத்து முகிழ்க்கலாம் அல்லவா?

செம்பியனூர் சின்னப்ப மறவரை நோக்கிய நாயகன், "மறவரே! நீங்கள் என்னுடன் காஞ்சி நோக்கி வருகிறீர்கள். வீட்டில் ஏதேனும் ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டுமா?" என்றான். அப்படிக் கேட்பது நாகரிகமாகவும் நாயகனுக்குப் புலப்பட்டது.

சின்னப்ப மறவர் கேட்டார்: ''நான் ஏன், தலை நகர்க்கு வரவேண்டும்?''

''தலையை இங்கேயே கொய்து விடலாம் என்கிறீர்களா?'' என்றான் நாயகன் சிரித்துக்கொண்டே! இதைக் கேட்ட ஊர் மக்களும் கொல்லென்று சிரித்துவிட்டனர். சின்னப்ப மறவர்க்கு மிகுந்த அவமானமாகப் போய் விட்டது. அவர் கடுகடுப்புடன் கேட்டார். ''என் தலை போகிற அளவுக்கு நான் என்ன தவறு செய்து விட்டேன்?''

நாயகன், நயமாக விடை பகர்ந்தான்:

''பலருடைய தலை போகிற அளவுக்கு எமபாதக வேலை செய்திருக்கிறீர்களே!''

''நான் செய்தேன் என்பதற்கு நீங்கள் விசாரித்த ஆதாரங்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.''

''ஏற்றுக்கொள்வதற்கும், ஏற்றுக் கொள்ளாததற்கும் நீங்கள் யார்? காஞ்சிக்கு வந்து அரசரின் முன்னிலையில் சொல்லுங்கள்.''

—மேலும் சின்னப்ப மறவரிடம் பேச்சை வளர்த்த விரும்பாத சேனாதிபதி நாயகன், வீரர்களை நோக்கிப் ''புறப்படலாம்'' என்று ஆணையிட்டான்.

செம்பியனூர் சின்னப்ப மறவர்க் குடும்பம் மட்டும் கண்ணீர் சிந்திக் கதறியது. மற்றபடி ஊர் மக்கள் அனைவரும், ஊருக்குப் பிடித்திருந்த பேய் ஒன்று தொலைகிறது என்ற மகிழ்ச்சியான நினைவுடன் வழி கூட்டினார்.

விலங்கிட்ட குண்டர்களை நடத்தியே வீரர்கள் கொண்டு சென்றனர். ஏன்? சின்னப்ப மறவரும் நடந்தே சென்றார். தஞ்சை சென்றதும் ஏதேனும் வண்டிகளை ஏற்பாடு செய்து கொண்டு தலைநகர் நோக்கி அழைத்துச் செல்லலாம் என்பது நாயகனுடைய முடிவு. அதுவரை ஊர் மக்களும் சாலை வழிப் போக்கர்களும் இந்தக் காட்சியைக் கண்டு காரி உமிழலாம் அல்லவா?

# ஐந்து

இளையவன் அருண்மொழி பழங்காப்பிய ஓலைச் சுவடி யொன்றை வைத்துப் படித்துக்கொண்டிருந்தான். குன்றத்தூர்க் கிழார் சிறந்த தமிழ்ப் புலமை பெற்றவரா யிற்றே! அவருடைய வீட்டில் நூற்களுக்கா பஞ்சம்? ஒரு காலத்தில் பெரும் பொருட் செலவில் சங்க இலக்கி யங்கள் அனைத்தையும் எழுத்தாளர்களைக்கொண்டு ஓலைப் படிகளைச் சோதித்து எடுத்தெழுதச் செய்திருந்தார். தந்தைக்கு இருக்கிற தமிழப்பற்று அவர் காலத்துக்குப் பின் அவருடைய வழியில் வேறு யாருக்கும் இல்லாமல் போகுமோ என்று வேதனைப்பட்ட நிலைமாறி, இளைய வன் அருண்மொழி இதோ நானிருக்கிறேன் என்பது போல உருவானான். காலொடிந்து வீடடங்கிய காரணம் தானோ என்னவோ அவனைத் தமிழ்ப் படிக்கச் செய்தது என்பது குன்றத்தூர்க் கிழாரின் வாதம். பார்க்கப் போனால் பெரியவனுக்கு இந்தப் புலமைப்பற்று ஏற்பட வில்லையே!

காலை மலர்ந்து பத்து நாழிகைப் போது கரைந் திருந்தது. எப்படியும் அன்றைக்கு நாயகன் வந்து விடுவான் என்று அனைவருமே எதிர்பார்த்தனர்.

குன்றத்தூர்க் கிழார் தெருவாசற் பக்கமிருந்த திண்ணையில் அமர்ந்து மகனை எதிர் நோக்கிய வண்ண மிருந்தார். அடிக்கடி தாயார் வேதவல்லியம்மை வருவதும் எட்டிப் பார்ப்பதுமாக இருந்தாள். மகன் சென்ற காரியம் எதற்கு என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அங்கு மகனுக்கு எதுவும் நடக்கக்கூடாதது நடந்து விட்டால்? பெறற்கரிய வீரமகனாயிற்றே!

அருண்மொழிக்கு மட்டும் இந்த எதிர்பார்ப்பும் துடிப்பும் இல்லையா என்ன? அவனுக்குக் கால்கள் இடந்தரவில்லை. இந்த மனத் தவிப்பை வேற்றுத் திக்கில் செலுத்தத்தானே தமிழ்க் காப்பியமொன்றை எடுத்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

மேலும் ஒரு நாழிகைப் போது கழிந்தது. அப்போது அவர்கள் எதிர்பாராத—எதிர்பார்க்க முடியாத செய்தியொன்று வாசற்படியண்டை வந்து நின்றது.

"ஐயா!"—வந்த ஆள் குரல் கொடுத்தான்.

அதுவரையிலும் வேற்றுச் சிந்தையில் மூழ்கியிருந்த குன்றத்தூர்க் கிழார்க்கு அப்போதுதான் நினைவு திரும்பியது.

"யாரப்பா, நீ?"

"மயிலையிலிருந்து வருகிறேனய்யா!"

"மயிலையிலிருந்தா?"

குன்றத்தூர்க் கிழார் சற்றே நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"கமலக்கண்ணி அனுப்பி வைத்தளா?"

வந்தவன் தயங்கினுன். பிறகு செய்தி யறிவித்தான். "ஐயா! கணவர் தண்டிக்கப்பட்டு விட்டதால் மானம் தாளாமல் உங்கள் குமாரி தற்கொலை செய்து கொண்டார்கள்."

வந்தவன் இவ்வாறு கூறி முடித்த மறுகணம், தம்மை மறந்த நிலையில் "வேதம்!" என்று பெருத்த கூச்சலெழுப்பினுர். அந்தக் கூச்சலைக் கேட்டு வேத வல்லியம்மாள் அடுக்களையிலிருந்து ஓடோடி வந்தாள். ஏன்? மாடத்திலிருந்த அருண்மொழியும் கூட தாங்கல் கட்டைகளை எடுத்துக் கொண்டு தத்தித்தத்திக் கீழே இறங்கி வந்தான்.

செய்திகொண்டு வந்த அந்த ஆள் மீண்டும் அதே செய்தியைக் கூறவேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளானுன். எப்படியோ தட்டுத்தடுமாறி ஏற்பட்ட பலத்தை அடக்கிக் கொண்டு செய்தியைக் கூறி முடித்தான். மறுகணம்—

"கமலா!" என்ற இரைச்சலுடன் மயங்கித் தரையில்-சாய்ந்தாள் வேதவல்லியம்மை. அருண்மொழியின் கண்களில் நீர் தாரைத் தாரையாக வழிந்தது.

வேதவல்லியம்மைக்கு மயக்கம் தெளிய வெகுநேரமாயிற்று. கண்களை விழித்து மலங்க மலங்க அனைவரையும் நோக்கினுள். வாய், "கமலா! கமலா!" என்று முனகியவாறிருந்தது.

செய்தியறிவிக்க வந்த ஆள் விடைபெற எழுந்தான். அதற்குள் குன்றத்தூர்க் கிழார் அவனை

நோக்கி, ''தம்பி! இரு, ஒருவேளை நாங்களும் உன்னுடன் புறப்பட நேரிடும். சவ அடக்கம் செய்தாய் விட்டதா?'' என்று கேட்டார். அவருடைய குரலில் இருந்த கம்பீரம் எங்கோ ஓடி ஒளிந்துகொண்டிருந்தது.

வந்தவன் சொன்னான்: ''நேற்று இரவுதான் இந்த நிகழ்ச்சி நடந்ததய்யா! நீங்கள் வந்த பிறகுதான் எல்லா ஏற்பாடுகளையும் கவனிக்க வேண்டும்.''

செய்வதென்னவென்று புரியாது தவித்தார் குன்றத்தூர்க் கிழார். மூத்தமகன் இன்னும் ஊர் திரும்பவில்லை. இளையவனே நொண்டி. மனைவியை அழைத்துக் கொண்டு அவர்தான் புறப்படவேண்டும். வேறு என்ன செய்வது?

''அருண்மொழி! நான் உன் அம்மாளை அழைத்துக் கொண்டு புறப்படுகிறேன். நீயும் வருகிறாயா?''

குன்றத்தூர்க் கிழார் சோங்கிய முகத்துடன் மகனை நோக்கிக் கேட்டார். ஆனால் அருண்மொழி கொஞ்சமும் தயங்காமல், ''அப்பா! அண்ணன் எப்போது வருவாரோ? இந்த நிலையில் கூடப் பிறந்தவர்கள் என்ற முறையில் நானும் வராது போனால் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? எனவே நானும் வருவதுதான் நல்லது வேலையாட்கள் அண்ணன் வந்ததும் செய்தியறிவிப் பார்கள்'' என்று கூறிக்கொண்டே புறப்பாட்டுக்கான ஆயத்தங்களைக் கவனிக்குமாறு வேலையாட்களை ஏவினான்.

காஞ்சியிலிருந்து மயிலை நான்கு காவதத் தொலைவு தான். இப்போது புறப்பட்டால்கூட பத்து நாழிகைப்

போதில் சேர்ந்துவிடலாம். ஆனால் குதிரை பூட்டிய வண்டி கிடைக்கவேண்டும்.

பளிச்சென்று மனத்தில் ஏதோ தோன்றவே, கொஞ் சமும் தயங்காமல் நிலைமைகளை விளக்கி ஓலையொன்றை எழுதி ஆள் மூலம் பல்லவ அமைச்சருக்கு அனுப்பி வைத்தான். இக்காரியத்தை அண்ணன் இருந்து செய்யவேண்டியவர். அவரில்லாதபோது நேர்ந்த ஆபத்தான இந்தச் சூழ்நிலையை உத்தேசித்து அவனு கவே செய்துவிட்டான்.

பல்லவ அமைச்சர் ஓலையைக் கண்டதும் சற்றும் தயங்காமல் அரண்மனையிலிருந்த பயண ரதங்களுள் ஒன்றை உடனடியாக அனுப்பி வைத்தார். இப்போது பத்து நாழிகைப் போதுகூட அவசியமில்லை. ஏழு நாழி கைப் போதுக்குள் மயிலையை அடைந்துவிடலாம்.

பெற்றோரை அழைத்துக்கொண்டு ரதத்தில் புறப் பட்டான் அருண்மொழி. புறப்படும் போது பணியா ளர்களிடம் மாளிகையைப் பார்த்துக் கொள்ள எச்சரித் தான். அண்ணன் வந்ததும் உடன் செய்தியறிவிக்கச் சொன்னான். மாலைக்குள் வந்துவிட்டால் சவ அடக்கம் செய்ய சௌகரியமாக இருக்கும் என்பதையும் சொல்லச் சொன்னான்.

பகற்போதுக்குள் ரதம் மயிலையை அடைந்து விட் டது. மயிலை அப்போது ஒரு சிற்றூர். கபாலீச்சுரர் கோயிலும், அதனைச் சுற்றி நான்கு வீதிகளும், தொலை வில் சில தெருக்களும் அமைந்து காணப்பட்டது. திரு வள்ளுவர் அங்குத்தான் பிறந்தார் என்பதைச் சுட்டிக் காட்டுவது போலச் சின்னஞ்சிறு கோயில். மற்றபடி

நிறைய ஐயர்மார்கள் குடியேறி இருந்தார்கள். இது போலவே திருவல்லிக்கேணியும். அங்குப் பார்த்த சாரதி பெருமான் கோயில். ஐயங்கார்களின் குடியேற்ற மாக அது விளங்கியது. கடற்கரைப் பகுதியில் செம்படவர்கள் குடிசை போட்டுக்கொண்டு தொழில் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கபாலீச்சுவரர் கோயிலைத் தாண்டி மேலண்டை வீதிக்கு இடப்புறமாகச் செல்லும் சாத்தப்பன் வீதியில் தான் கமலக்கண்ணியின் ஓடுவேய்ந்த வீடு. காஞ்சியி லிருந்து பெற்றவர்கள் வந்துவிட்டார்கள் என்று கேள் விப்பட்டு வீதி மக்கள் கூடிவிட்டனர். சிலர் அழவும் செய்தனர்.

தாத்தாவும், பாட்டியும் வந்துவிட்டார்கள் என்ப தனைக் கேள்விப்பட்டு வீட்டுக்குள்ளிருந்து ஓடோடிவந்து தலைதலை யென்று அடித்துக் கொண்டு கோவென்று கதறியழுதாள் திருபுவனி. பேத்தியைக் கண்டதும் வேதவல்லியம்மைக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. குன்றத்தூர்க் கிழாரும் விசும்பி விசும்பி அந்தத் தள்ளாத வயதில் அழத் தொடங்கினர். தொலைவில் தாங்கல் கட்டைகளுடன் நின்று கவனித்த அருண் மொழியின் கண்கள் கலங்கின.

பேத்தியைத் தேற்றிய வண்ணம் உள்ளே நுழைந் தனர். அகால மரணம் அடைந்த மகள் கமலக்கண்ணி யைக் கண்டதும் அழுகை மேலும் பீறிட்டது. அவர் களைத் தொடர்ந்து உற்ருர் உறவினர்கள் அழத் தொடங் கினர். என்ன அழுது என்ன பயன்? அவமானத்தோடு வீழ்ச்சியடைந்த குடும்பம் அது! மீளப் போவதில்லை.

சவ அடக்கத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க முனைந்தார் குன்றத்தூர்க் கிழார். எப்படியும் மாலைப் போதுக்குள் மூத்தமகன் நாயகன் வந்திடுவான் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். பகல் கரைந்து மாலையும் வந்து விட்டது. இன்னும் நாயகனைக் காணோம். மேலும் பிணத்தைக் காக்க வைக்க யாரும் விரும்பவில்லை. எனவே எடுக்க வேண்டிய ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன.

விளக்கு வைப்பதற்குள் பிணம் எடுக்கப்பட்டது. பெண்கள் புரண்டழுதனர். வீடுவரை நின்று அழுபவர்கள் போக, காடுவரை சென்று காரியங்களை முடிப்பவர் பின் தொடர்ந்தனர்.

சவ அடக்கம் செய்து திரும்புகிறபோது இரவு ஒன்பது நாழிகைக்கு மேலாகி விட்டது. அதுவரையும் மகன் நாயகனைக் காணோம். இன்னும் தஞ்சையிலிருந்து திரும்பி இருக்கமாட்டான் என்று நினைத்து அடுத்து நடைபெற வேண்டிய காரியங்களில் மூழ்கினர்.

பொழுதும் விடிந்துவிட்டது.

பாலூற்று நடந்து முடிந்தது.

குன்றத்தூர்க் கிழார் அன்றே காஞ்சிச் நுப் புறப்பட முனைந்தார். அங்கு வேறு என்ன வேலை இருக்கிறது? பேத்தி திருபுவனியைக் கையோடு அழைத்துச் சென்று விட வேண்டியதுதான்.

வீடு சொந்த வீடுதான். அதன் பேரில் நிறையக் கடனிருந்தது. அதைத் தீர்த்துவிட்டுப் புறப்படுவது

தான் நலம். எனவே கடன் கொடுத்தவர்க்கே ஒரு கிர யம் பேசி முடித்தார். பிறகு தரவேண்டிய கடனுக்கும் வட்டிக்குமாகச் சேர்த்துக் கணக்குப் போட்டுப் பார்த் தால், இவர்களே மேற்கொண்டு தரவேண்டிய நிலை ஏற் பட்டது.

ஒரு தயக்கம். சிறைக்குச் சென்றிருக்கும் சித்திரா தித்தன் விடுதலையாகி வந்ததும் "என் வீட்டைக் கிரயம் பேச நீங்கள் யார்?" என்று கேட்டுவிட்டால்? சிந்திக்க வேண்டிய செய்தியாக அது இருந்தது. எனவே கடன் கொடுத்தவரை அழைத்து வீட்டை ஒப்படைத்து, சித்தி ராதித்தன் சிறையிலிருந்து திரும்புகிற வரை வைத் திருந்து பேசி முடித்துக்கொள்ளுமாறு செய்துவிட்டார்.

அன்று பகற்போதே பேத்தி திருபுவனியை அழைத் துக்கொண்டு காஞ்சிக்குத் திரும்பிவிட்டனர்.

மாலை மறைவதற்குள் காஞ்சிக்கு வந்துவிட்டனர். வருகிறபோது அவர்கள் பயணத்தை வேகமாக மேற் கொள்ளவில்லை.

மாளிகையை யடைந்ததும் ரதத்தை அரண்மனைக்கு அனுப்பிவைத்துவிட்டு உள்ளே நுழைந்தனர். மாளிகைக் கூடத்தில் நாயகன் அமர்ந்திருந்தான். அவனைக் கண்டதும் வேதவல்லியம்மை கோவென்று கதறியழத் தொடங்கிவிட்டாள். உடன் திருபுவனியும் அழுதாள்.

நாயகனுடைய கண்கள் கலங்கின. தமக்கையின் வாழ்வு இப்படியாக முடிந்ததைக் கேள்விப்பட நேரம் முதற்கொண்டே நெஞ்சு வேதனையுடன் அழுது தீர்த்து

விட்டான். என்ன செய்யமுடியும்? பாம்புக்கு வாழ்க்கைப் பட்ட பிறகு விஷத்தையுண்டுதானே தீரவேண்டும்?

நெஞ்சில் பொங்கி வந்த கவலை அழுகையாக மாறி ஓய்ந்தபின்னே குன்றத்தூர்க் கிழார் கேட்டார்:

"எப்போதடா தலைநகர் திரும்பினாய்?"

தந்தையை அண்ணாந்து கவனித்த நாயகன் சொன்னான்: "நேற்றுப் பகல்."

வேதவல்லியம்மைக்கு ஆத்திரம் பொங்கியது. அட, கல் நெஞ்சா! நேற்றுப் பகல் வந்தா நீ வராமல் போனாய்? குதிரையை எடுத்துக் கொண்டு புறப்பட்டால் கூட, உன்னுடைய ஓட்டத்துக்கு ஐந்து நாழிகைக்குள் வந்திருக்கலாமே!"

"விருப்பமில்லாமல் தான் நின்றுவிட்டேனம்மா!"

"சொந்த தமக்கையின் முகத்தைப் பார்க்க விருப்ப மில்லையா? என்னடா, பாசம்?"

தாயுள்ளம் படபடத்தது.

நாயகன் பொறுமையாகச்சொன்னான்: "நான் படைக் களத்துக்குரியவன். எனக்குப் பாசம், நேசம் எல்லாம் மரத்துப் போன ஒன்று."

திருபுவனி குறுக்கிட்டாள். "அதைவிட வேறு மாதிரியாக நீங்கள் சொல்லலாம் மாமா! இந்த இறப்புக்கே காரணம் நீங்கள்தான். வர முகமில்லை என்று சொல் லுங்கள்."

தாயை இழந்து, தந்தையைச் சிறைக்கனுப்பி வந்திருப்பவளாயிற்றே என்று கோபப்படாமல் நோக்கினுன் நாயகன். பிறகு சொன்னுன்: "வாயாடிப்பெண்ணே!. உன் மாமன் குணமறியாமல் பேசுகிருய். நீசனுன உன் தந்தையின் பெண்ணுக நீ பேசுகிருயேயொழிய, பண்பாடு நிறைந்த தமிழ்ப்பாட்டனுரின் பேத்தியாகப் பேசவில்லை. கடமை வேறு. உறவு வேறு. உனக்குப் புரியாது."

"ஏன் புரியாது? நீங்கள்—"

திரிபுவனியை இடைமறித்த குன்றத்தூர்க் கிழார், "திரிபுவனி! நீ உள்ளே போம்மா!" என்ருர். ஆனுல் வேதவல்லியம்மை, "இப்போது அவள் பேசியதில் என்ன நியாயம் குறைந்து விட்டது?" என்று குறுக்கே புகுந்தாள்.

குன்றத்தூர்க் கிழார்க்குக் கோபம் கோபமாக வந்தது. திருபுவனிதான் படபடப்புக்காரி; கொஞ்சம் அகம்பாவம் பிடித்தவள். ஏதோ அறியாத் தனமாகப் பேசுகிருள். இதனுல் நாயகனுக்கு மனமாற்றம் கண்டுவிடுமோ என்றஞ்சி தடுத்தால் இந்த வேதவல்லி அறிவுக் கெட்டத்தனமாகக் குறுக்கே பாய்கிருளே!

"வேதம்! உனக்குப் பெயர் வைத்தானே அவனுக்காக நான் வருந்துகிறேன். நீயும் உள்ளே போ!"

"யாரும் உள்ளே போகவேண்டாம். நான் வெளியே சென்று இரவு திரும்புகிறேன்" என்று கூறிவிட்டு வெளியேறினுன் நாயகன்.

அதுவரை ஒருமருங்கே அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்த அருண்மொழி, "அண்ணு! நில்லுங்கள். அம்மாவுக்கு மகளை இழந்த துயரம்; திருபுவனிக்குத் தாயையும் ஏன்? தந்தையையும் இழந்த ஏக்கம். அவர்கள் அப்படிப் பேசியதைப் பெரிது படுத்திக் கொள்ளலமா?" என்முன் பொறுமை நிறைந்த குரலில்.

தம்பியைத் திரும்பிப்பார்த்த நாயகன், "அதற்கில்லை தம்பி! அரண்மனையில் ஒரு முக்கிய வழக்கு. தஞ்சைப் பிரச்சினைதான். நான் இருக்கவேண்டிய அவசியம் இருக் கிறது. அதனுல்தான் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு வெளியேறினுன். சற்றைக்கெல்லாம் குதிரைகளின் குளம்புச் சத்தம் கேட்டது.

இரவு வெகு நேரம் கழித்து மாளிகைக்குத் திரும் பினுன் சேனுதிபதி நாயகன். அரண்மனை விசாரணை முடிய அத்தனை நேரம் பிடித்தது. தஞ்சையில் நடந்த விவசாயப் பிரச்சினையை செவ்வனவே முடித்துத் திரும்பிய சேனுதிபதி நாயகனை வெகுவாகப் பாராட்டினுர் பல்லவ அரசர் சிம்மவர்மர். மேலும் மயிலையில் தமக்கை இறந்துபட்ட செய்தியைக் கேள்விப்பட்டும், விசாரணையின் நிமித்தமாகத் தலைநகரில் தங்கியிருந்த அவனுடைய கடமையுணர்ச்சியைப் போற்றினுர். செம் பியனூர் சின்னப்ப மறவர்க்கு ஏழாண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை கிடைத்தது. அவருடைய நிலங்களை பறிமுதல் செய்ய ஆணையிட்டார். உரிய தொகையை மற வருடைய குடும்பத்துக்கு வழங்கிவிட உத்தரவிட்டார்.

மாளிகையை அடைந்ததும் நேரே மேன் மாடம் நோக்கிச் சென்முன். வழிமறித்த அன்னை வேதவல்லி

யம்மை, "ஏண்டா, கண்ணு! சோறுண்ண வரவில்லையா?" என்று கேட்டாள்.

"வேண்டாம். அரண்மனையில் உண்டு முடித்தாய் விட்டது" என்று புதுப் பொய்யை திரும்பிப் பாராமலேயே சொன்ன வண்ணம் படிகளைக் கடந்து கொண்டிருந்தான்.

மாடத்தில் தன்னறையில் போய் அமர்ந்து வெகு நேரம் வரை சிந்தித்துக் கொண்டிருந்தான். அரண்மனையைப் பற்றியல்ல; தன் குடும்பத்தைப் பற்றித்தான். குறிப்பாகத் திருபுவனியைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்தான். செம்பியனூர் நாயகி கண் முன் நடமாடினாள்.

அன்னை சுடச் சுடப் பாலைக் கொண்டு வந்து வைத்தாள்:

"கண்ணு! உண்மையிலேயே அரண்மனையில் உண்டு முடித்தாய்விட்டதாடா?" தாயுள்ளம் கெஞ்சியது.

நாயகன் வாய் திறக்கவில்லை. தலையை மட்டும் அசைத்துவைத்தான். அன்னை வேறெதைப் பற்றியும் கேட்டுக் கொள்ளாமல் சென்றுவிட்டாள்.

வாழைப்பழங்கள் நான்கை உரித்துப் புசித்துவிட்டு பாலையருந்தினான் நாயகன். பிறகு, படுக்கை, அவனை நித்திரையுலகத்துக்கு அழைப்பு கொடுத்தது.

பதினாறும் நாள் நடைபெறவேண்டிய நீத்தார் கடனை காஞ்சி மாளிகையிலேயே முடித்தனர். அதற்காக யாரை

யும் அழைக்கவில்லை. அழைக்கக்கூடாது என்பது குன்றத்தூர்க்கிழாரின் உத்தரவு. அவருக்கு மகனுடைய நிலை புரியும். அவனுக்குள்ள பெருமை என்னவென்பது தெரியும். சிறை சென்ற கணவனுக்காகத் தற்கொலை செய்து கொண்ட ஒருத்தியின் இறுதிச் சடங்கு அது. அதற்குப் பலபேரை அழைத்தால் பலமாதிரிப் பேசுவார்கள். அந்தப் பேச்சு வார்த்தைகள் மயிலை வீட்டிலென்றால் கவலையில்லை. அரசாங்கத்தில் மிகப்பொறுப்பான சேனாதிபதியின் வீட்டில் எழுவதானால் நன்றாக இருக்குமா?

நாட்கள் உருண்டன. திருபுவனிக்கு இன்னும் மனக் கலக்கம் தீரவில்லை. தாயற்ற நிலை. அவளுடைய தந்தையோ சிறை சென்றவன். அவளுடைய எதிர்காலத்தை அவளாலேயே நினைத்துப் பார்க்க முடியவில்லை. இருண்டு மிகவும் பயங்கரமாகக் காட்சி தந்தது.

அவளுடைய எதிர்பார்ப்பெல்லாம் பெரிய மாமன் நாயகனை நாயகனாகக் கொள்ளவேண்டும் என்பதுதான். அப்படி மட்டும் நிகழ்ந்துவிடுமேயானால் பிறகு எதைப் பற்றியும் பயப்படத் தேவையில்லை. யாரைப்பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் பெரியமாமன் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ? வந்ததும் வராததுமாக எதிர்த்து வேறு பேசிவிட்டோம். என்ன இருந்தாலும் அவர் அரண்மனையில் செல்வாக்கு நிறைந்த பதவி வகிப்பவர். சிறை சென்றவனுடைய மகளையா மணப்பார்? வாழ முடியாமல் தற்கொலை செய்துகொண்டவளுடைய மகளையா மணப்பார்? இது அவருடைய பதவிக்கு இழுக்கைத் தேடித்தரும் என்று அவர் எண்ணிவிட்டால்?

எண்ணிவிட்டால் வாழ்வு இருள் மயமானதுதான். அம்மா காட்டிய வழியை நாமும் பின்பற்றவேண்டியது தான். பின் தன்னைக் கௌரவமுள்ள எவன் மணக்க முன் வருவான்? தற்கொலைதான் கடைசி பாணம்! தாயார்க்கு ஏற்பட்ட அதே முடிவு மகளுக்கும் ஏற்பட்டுத் தான் தீரவேண்டும் என்று விதியிருந்தால் விடப்போவ தில்லை.

—திருபுவனி இவ்வாறெல்லாம் நினைத்தாளே யொழிய, இன்னொரு மாமனை சின்னமாமன் அருண் மொழியைப் பற்றி ஒரு கணம் கூடச் சிந்தித்துப் பார்த் தாளில்லை. அப்படி ஓர் உறவுக்காரன் இருப்பதாகவே அவளுக்கு எண்ணம் எழவில்லை. அவன் நொண்டி யாக இருக்கிறான் என்கிற காரணமும் இருக்கலாம் அல்லவா?

டக்டக்டக்டக்...

அருண்மொழிதான் மாடப்படிகளை விட்டு இறங்கி வந்து கொண்டிருந்தான். கூடத்தில் அமர்ந்து சிந்த னையில் மூழ்கி இருந்தாள் திருபுவனி.

தாங்கல் கட்டையின் ஒலி கேட்டு சிந்தனை விழிப்பு கண்டாள். வருபவன் அருண்மொழி என்பது அவளுக் குத் தெரியும். அவள் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் அமர்ந்திருந்தாள். மரியாதைக்கு எழுந்தாவது நிற்க வேண்டுமே!

திருபுவனி வந்த நாள்முதல் அவள் காட்டி வருகிற மரியாதையைப் பரிபூரணமாக உணர்வான் அருண் மொழி. இயல்பாகவே சற்று முன்கோபி அவன்.

அண்ணன் நாயகனைத் தவிர மற்ற எவர்க்குமே பயப் படாதவன். ஏன்? தந்தையாரைக்கூடப் பல சமயங்களில் தூக்கி எறிந்து பேசி விடுவான். அப்பேர்ப்பட்டவன் திருபுவனி விஷயத்தில் அமைதியாக நடந்து கொண் டான். எல்லாம் துன்பியலை அனுபவித்துக்கொண்டு இங்கே தங்கி இருக்கிருள் என்கிற பரிதாப உணர்ச்சி தான் காரணம்.

திருபுவனி அமர்ந்திருந்த இடத்தை நாடி வந்து நின்ருன் அருண்மொழி. அவள் வந்த இத்தனை நாட்க ளுக்குப் பிறகு இப்போதுதான் அவளருகே வந்து நின்று கவனித்தான். மனத்தில் வேறெந்த சலனமும் இல்லை. வாழ்வில்தான் துன்பியலை அனுபவிக்கிற தலைவிதி. நடத்தையிலாவது அதை மாற்றிப் புதுப்பிக்கிற தன்மையுண்டாகக் கூடாதா என்கிற எதிர்ப்பார்ப்பு அருண்மொழியிடம் தலை தூக்கியது.

"திருபுவனி! உண்டு முடித்தாய் விட்டதா?"-என்று கேட்டான் அருண்மொழி. அப்போதும் திருபுவனி எழுந்து நின்ருளில்லை. இதனைத் தொலைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த குன்றத்தூர் வேளார்க்கு வேதனையாக இருந்தது. அவர் உடனே புறக்கடைப் பக்கமாகச் சென்று, மனைவி வேதவல்லியை அழைத்து இக் காட்சியைக் காட்டி, விளக்கிக் கவனிக்குமாறு கூறிஞர். வேதவல்லியம்மைக்கு இது புரிய வேண்டுமே?

"சின்னபெண், அதுக்கு என்ன தெரியும்?" என்று கூறிக்கொண்டே மீண்டும் புறக்கடை நாடிச் சென்ருள். குன்றத்தூர்க் கிழார் தம்முடைய மனையாளின் புரிந்து கொள்ளாத் தன்மை நினைந்து வேதனைப்பட்டார்.

திருபுவனி மாமனுடைய கேள்விக்கு மறுமொழி பகர்ந்தாளில்லை.

"உன்னைத்தான் திருபுவனி! நான் கேட்டது காதுகளில் விழவில்லையா?" என்றான் மீண்டும் அருண்மொழி.

அலட்சியமாகக் குரல் விட்டுச் சிரித்த வண்ணம் அண்ணாந்து கவனித்த திருபுவனி, "சின்ன மாமாவுக்கு திடீர் கரிசனை எதற்காக ஏற்பட்டதோ?" என்றாள் நகுதல் செய்தவாறு.

"ம்...உன்னுடைய அழகைக் கண்டு" என்றான் அருண்மொழி வெறுப்பாக.

"என் அழகுக்கு நீங்கள் போட்டிப் போடுவதா?"— விதி என்கிறார்களே, அது நாவில் மெல்ல மெல்லக் குந்த ஆரம்பித்தது.

அருண்மொழியும் சினத்துடன், "நான் போட்டி போடாமல் என் அண்ணாவா போடுவார்?" என்றான்.

"ஏன்? உங்கள் அண்ணார் போடக் கூடாதா?"

"நீ தோற்றுவிடுவாய்?"

"அப்படியானால் நீங்கள் போட்டிப் போட்டால் நான் வென்று விடுவேன் என்கிறீர்களா?"

"அப்படியும் சொல்வதற்கில்லை; என் காலே அழகை எட்டி உதைத்து விரட்டித்தானே நொண்டியானது.

எனக்கு இந்த அழகு உடைந்து போன கால் தூசுக்குச் சமானம்.''

"நீங்கள் அப்படித்தான் நினைத்தாக வேண்டும். உங்கள் நிலை அப்படியானது. உங்கள் அண்ணர் நிலை அப்படியல்லவே?''

"இதைவிட மேலானது. அவர் பதவிக்கு இன்னும் நம் உறவில் பெண்ணில்லை. பிறகுதானே அவருடைய அழகைப் பற்றிப் பேசவேண்டும்.''

"அது ஏன் நம் உறவில் பெண்களில்லை என்கிறீர்கள்?''

"செல்வமிக்கவர்கள் வீட்டுப் பெண்கள் ஏராளம். ஆனால் செல்வாக்கு மிக்கவர்கள் வீட்டுப் பெண்களில்லை.''

"உங்கள் அண்ணர் அப்படியெல்லாம் எதிர் பார்க்கிறாரா?''

"அவர் எதிர்பார்க்கிறாரோ இல்லையோ, நான் எதிர் பார்க்கிறேன்.''

"பூ...இவ்வளவுதானா?''

"அது என்ன பூ?''

"திருபுவனத்திலும் கிடைக்காத பாரிஜாதம்!''

அவளுடைய மனநிலை அவனுக்கு புரிந்துவிட்டது. அவன் தன்னை மறந்து "முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதை!'' என்று கூறிவிட்டான்.

உடனே, திருபுவனி கோபமுடன், "உங்கள் ஆசையைப் போல!" என்று கூறிய பிறகுதான் அருண்மொழிக்கு நிலை புரிந்தது. அவன் அப்படியே மலைத்து நின்றுவிட்டான். பிறகு மெல்லத் தாங்கல் கட்டைகளில் ஊன்றிய வண்ணம் புறக்கடை நோக்கி நடந்தான். மனம் படாதபாடு பட்டுவிட்டது.

தொலைவில் நின்றுகொண்டிருந்த குன்றத்தூர்க் கிழாருடைய மனமே பெரிதும் வேதனைப்பட்டுவிட்டது என்றால், அருண்மொழியின் மன நிலையைப் பற்றி அதிகம் வருணிக்கத் தேவையில்லை.

மெல்ல பேத்தியின் அருகே வந்தார் குன்றதூர்க் கிழார். "திருபுவனி! இது உனக்கே நன்றாக இருக்கிறதா?"

பாட்டனைத் திரும்பிக் கவனித்த திருபுவனி, "எதைப்பற்றிக் கேட்கிறீர்கள் தாத்தா?" என்றாள் புரியாதவள் போல.

"அருண்மொழியிடம் பேசினாயே அதைப்பற்றிக் கேட்கிறேன்."

"என்ன பேசினேன். அவர் பேசியதற்கு நான் விடை தந்தேன்."

"அதைத்தான் கேட்கிறேன்; இது முறையா?"

"அவர் மட்டும் முறையாகவா பேசினார்?"

"அவன் அப்படியொன்றும் முறை தவறிப் பேசியதாகத் தெரியவில்லை. மேலும் அவன் உன் மாமன்; வயதில் பெரியவன்."

"வயதில் பெரியவர்களாக இருப்பவர்களுக்குப் பல சமயங்களில் புத்திசாலித் தனமாக நடந்து கொள்ளத் தெரிவதில்லை. இதுவும் நான் சொல்லித்தான் புரிய வேண்டும் என்றால் அதற்காக என்ன செய்ய முடியும்?"

இப்போது குன்றத்தூர்க் கிழார்க்கே சவுக்கால் அடித்தது போலிருந்தது. அவர் அதற்கு மேலும் நின்று பேசிக்கொள்ள விரும்பவில்லை. எல்லாம் தகப்பன் வழி! ம்...போகப் போக நலப்பட்டு விடும். எவனாவது ஒருவன் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டால், பிறகு மூக்கணாங்கயிறு போட்ட மாட்டின் கதைதானே!

மூக்கணாங் கயிற்றைப் பற்றிய சிந்தனை எழுந்ததும் மனம் மீண்டும் அலைமோதத் தொடங்கியது. யாருக்கு அவளை மணமுடித்து வைப்பது? பெரியவனுக்கா? சின்னவனுக்கா? சின்னவனுக்கு என்பது நினைத்துப் பார்க்க முடியவில்லை. சற்று நேரத்துக்கு முன்பு தான் இருவருடைய மன நிலைகளைக் கண்கூடாகப் பார்க்க நேர்ந்தது. ஒருகால் சின்னவன் அருண் மொழியைச் சம்மதிக்கச் செய்தாலும் திருபுவனியைச் சம்மதிக்கச் செய்யமுடியும் என்பது கனவு. ஆனால் பெரியவன்?

இது விஷயத்தில் திருபுவனி சம்மதித்து விடுவாள். அவளுக்குத்தான் பெரிய மாமன் மீது கொள்ளையாசை யாயிற்றே! இவள் கொள்ளையாசை கொண்டு என்ன பயன்? நாயகன் செல்லாக் காசுக்கும் இவளை விரும்புவ தாகக் காணோமே! இவள் அவனிடம் பேசச் சென்றாலே எரிபறி என்று விழுகிறானே! இந்த நிலையில் யாருக்கு இவளை மணமுடித்து வைப்பது? வேற்றுறவில் மாப் பிள்ளை பார்க்கலாம் என்றாலோ குருவிப்பால் தேடிச்

சென்ற கதைக்கு ஒப்பானது. யார் பிள்ளை தர முன் வருவார்கள். குலம் கோத்திரம் பற்றிக் கவலையில்லை. குடும்ப நிலை?

நல்ல இடத்தில் நிச்சயமாக மாப்பிள்ளை கிடைப்ப தரிது. தாழ்ந்த குடியில்தான் எவனையாவது பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் இந்த அகம்பாவி ஏற்க மாட்டாளே!'

இறைவா!...

பெருமூச்சு பறிந்தது குன்றத்தூர்க் கிழார்க்கு!

ஒவ்வொரு இரவாக இதைப்பற்றிச் சிந்திப்பார். முடிவு அவருக்குத் தோன்றுவதே இல்லை.

ஒருநாள் இதைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்தார். இன்று மாலை இரண்டில் ஒன்று பேசி முடித்துவிடுவது என்று தீர்மானித்தார். அப்படிப் பேசும் போது திருபுவனி இல்லாமலிருந்தால் நலமாக இருக்கும்.

அன்று வெள்ளிக்கிழமை. சற்றேற தள்ளியிருந்த வீதியிலிருந்த பருவதகுமாரியும் தமிழ்ச் செல்வியும் மாளிகைக்கு வந்திருந்தனர். அவர்கள் திருபுவனியைக் கோயிலுக்கு அழைத்தனர். திருபுவனி தன்னுடைய பாட்டனுரை உத்தரவு கேட்டாள். அவரும் அன்புடன் விடை தந்து அனுப்பி வைத்தார். இந்த ஏற்பாடே அவருடையதுதானே?

சற்றைக்கெல்லாம் திருபுவனி அலங்காரம் செய்து கொண்டு புறப்பட்டாள். அப்போது வாசற் கூடத்தில்

நாயகன் அமர்ந்திருந்தான். அவனை நெருங்கிய திரு புவனி, "மாமா! தோழிகளுடன் காமாட்சியம்மன் கோயிலுக்குச் சென்று வருகிறேன். தாத்தாவிடம் உத்தரவு வாங்கிவிட்டேன்!" என்றாள்.

அண்ணாந்து கவனித்த நாயகன், "தாத்தா உத்திரவு கொடுத்த பிறகு நான் சொல்ல என்ன இருக்கிறது? கோயிலுக்குப் போய் நல்ல வரனை மட்டும் பிரார்த்தனை செய்யாதே; நல்ல புத்திக்கும் பிரார்த்தனை செய்" என்றான்.

திருபுவனி சிணுங்கினாள்.

"இப்போது என் புத்திக்கு என்னவாம்?"

"அடடா! உன் புத்திக்கு இப்போது என்ன குறைச்சல் வந்துவிட்டது. இருக்கிற புத்தி மேலும் வளரப் பிரார்த்தனை செய் என்றுதான் குறிப்பிட்டேன்."

"அப்படிச் சொல்லுங்கள்" என்று கூறிய திரு புவனி, காத்திருந்த தோழிகளுடன் கோயிலுக்குப் புறப்பட்டுச் சென்றாள். அவர்கள் போகட்டும் என்று காத்திருந்த குன்றத்தூர்க்கிழார் மெல்ல மனைவியிடம் சென்று சமிக்ஞை செய்து அழைத்துக்கொண்டு வந்தார்.

சின்னவன் அருண்மொழி எங்கிருக்கிறான் என்று நோட்டம் விட்டார். அவன் மாடத்துத் தனியறையில் எதையாவது படித்துக் கொண்டிருப்பான் என்று முடிவு செய்து கொண்டார்.

# ஆறு

குன்றத்தூர்க் கிழார் மெல்ல மகனருகே வந்தமர்ந் தார். எதிரே அன்னை வேதவல்லியம்மை வந்து நின்ருள். இவர்களுடைய இப்படியான வருகையைக் கவனித்த நாயகனுக்கு மனத்தில் ஐயம் கேள்விக்குறி யாகப் படர்ந்தது.

மெதுவாகத் தந்தையை நோக்கினுன். சிலருடைய முகத்திலிருந்தே சிலவற்றைச் சூழ்நிலையையுணர்ந்து படித்துக் கொள்ள முடியும். அப்படித்தான் நாயகனும் மெல்லச் சூழ்நிலையைக் கவனித்தான். தம்பி அருண் மொழி மாடத்தின் எங்கோ ஓர் அறையில் இருந்தான். திருபுவனி சற்று முன்புதான் கோயிலுக்கு என்றுமில் லாமல் இன்றைக்கு பார்த்துப் புறப்பட்டிருக்கிருள். இந் தத் தனிமையைப் பயன்படுத்திக் கொண்டு ஏதோ, ஒரு முக்கிய செய்திபற்றிப் பேச வந்திருக்கிருர்கள். என்ன முக்கிய செய்தியாக அது இருக்க முடியும்?

தம்பியைப் பற்றிப் பேச ஒன்றுமில்லை; தன்னைப் பற்றிப் பேசலாம். என்ன பேசுவார்கள்? தன்னுடைய திருமணத்தைப் பற்றிப் பேசுவார்கள். இதனை திரு புவனியை வைத்துக் கொண்டே பேசலாமே! அப்படியா ஞல் இதில் அவளுடைய சம்பந்தமும் இருக்கவேண்டும்!

முன்னறிதலோடு சிந்திக்கிற மூளைகளிலிருந்துதான் உலகத்துக்குத் தேவையான சிந்தனைகள் பிறக்கின்றன. நாயகன் அப்படி யொன்றும் காவியப் புருஷஞக இல்லா விட்டாலும், பெரிய இடத்துத் தொடர்பால் கண்ட அனு பவ சிந்தனை மிகுதியாகவே இருந்தது. இல்லை யென்

ருல் அவன் அடிக்கடி தம்மிடம் சொல்லுவான்: "தம்பி! பணம் படைத்து விடுவாதாலேயே மனிதன் உயர்ந்துவிட முடியாது. தாசிகளிடம் பொருளிருப்ப தால் உயர்ந்து விடுகிருர்களா? இறைச்சி விற்று எவ் வளவுதான் செல்வந்தனுக உயர்ந்து விட்டாலும் அவன் மீது ரத்தவாடை வீசிக் கொண்டுதானிருக்கும். மனிதன் ஒன்று அறிவால் உயரவேண்டும்; இல்லையென்ருல் அறி வுள்ள பெரிய மனிதர்களுடைய தொடர்பால் உயர வேண்டும். இரண்டுமில்லாதவன் எதுவுமில்லாத வனே!"

அருண்மொழியால் பெரிய மனிதத் தொடர்பைப் பெற முடியாது; காலம் அவனுக்கு இடம் தரவில்லை. அறிவையாவது உயர்த்திக் கொள்ளலாமே என்றுதான் தமிழிலக்கியங்களை வீட்டிலிருந்தவாறே படித்து ஆரா யத் தொடங்கினுன்.

இத்தனைக்குத் தன்னை வளர்த்துக் கொண்ட நாயக னிடம் கடமையும், அறமும் மேலோங்கி இருந்தன வென்ருல் வியப்பதற்கொன்றுமில்லையல்லவா?

"நாயகா! உன்னிடம் ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேச நினைக்கிருள் உன் அன்னை" என்று பேச் சைத் தொடங்கினுர் குன்றத்தூர்க் கிழார்.

நாயகன் தனக்குள் சிரித்துக் கொண்டான். "ஏனப்பா! நீங்கள்தான் பேச நினைப்பதாகச் சொன்னுல் நான் மறுக்கவா போகிறேன்?"

"என்னைக் காட்டிலும் உனக்குத் தாய் மீதுதான் அதிக ஆசை!"

"அப்படிச் சொல்வதற்கில்லை. இரண்டு கண்களில் எது முக்கியம் என்று கூற முடியும்?"

"தந்தையைக் காட்டிலும் ஒரு முன்னூறு நாள் பாசம் தாயிடம் அதிகம் உண்டல்லவா?"

அயர்ந்து போனான் நாயகன். அவனுக்குத் தந்தையின் புலமைபற்றி நன்கு தெரியுமே!

"நல்லது; அம்மாவே என் திருமணம் செய்தி பற்றிப் பேசத் தொடங்கட்டுமே!" என்றான் நாயகன்.

இப்போது குன்றத்தூர்க் கிழார்க்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. எத்துணை முன்னறிதலுடன் நோக்கத்தைப் புரிந்துகொண்டு பேசிவிட்டான்! தந்தை பத்தடி பாய்ந்தால் மகன் பதினாறு அடி பாயவேண்டும். அப்போதுதான் அவன் அறிவான தந்தைக்கு அற்புதமாகப் பிறந்த மகன். எத்தனையோ அறிவான தந்தைக்கு முட்டாளான மகன் பிறப்பதுண்டு. அது மரபுக்குறை; அல்லது தாயின் நெஞ்சத் தூய்மையின் குற்றம். நாயகன் அப்படியல்லவே!

தந்தையுள்ளம் பெரிதும் மகிழ்ந்து கொண்டது.

"ஆமாண்டா கண்ணு! உன் திருமணம் விஷயமாகத்தான் பேச வேண்டும். நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டாள் தாய் வேதவல்லியம்மை.

"அம்மா! பெண் பார்த்தாய்விட்டபிறகு கேளுங்கள், முடிவு சொல்லுகிறேன்" என்றான் நாயகன்.

"பெண் பார்க்கவேண்டுமா! அவள்தான் நம் வீடு தேடி வந்துவிட்டாளே!"

நாயகன் மீண்டும் தனக்குள் சிரித்துக்கொண்டான். இந்தச் செய்தியை அப்பா தம் வாயால் கூறப் பயந்து தானே அம்மாவைத் துணைக்கு அழைத்து வந்து, அவளுக்கு முன்னூறு நாள் பெருமையும் சேர்த்து முன்னுரையாகக் கூறியிருக்கிறார்! இது நாயகனுக்குப் புரிந்து விட்டது.

நாயகன் கேட்டான்: "நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்களம்மா?"

"புரியவில்லையா? நம் திருபுவனியைத்தான்."

இப்போது கடகடவென்றே சிரித்தான் நாயகன். சிரிப்பில் வேதனை மிஞ்சியிருந்தது.

"ஏனடா நாயகா, சிரிக்கிறாய்?" என்றார் தந்தை.

"உங்களுடைய நிலையை எண்ணி."

"ஏன்? எங்கள் நிலைக்கு என்ன வந்துவிட்டது?"

"பரிதாபம்?"

"பரிதாபமா?"

"பின் என்ன? திருபுவனியை நான் மணக்க விரும்பவில்லை."

"அவளுக்கு என்ன குறை?"

"ஒரு குறையுமில்லை; எனக்குத்தான் குறை!"

"எனக்குப் புரிகிறதடா, நாயகா! உன் பதவிக்கு அவள் கொஞ்சமும் தகுதி வாய்ந்தவள் அல்ல என்பதைக் கூறத்தானே இப்படிப் பேசுகிருய்!"

"அப்பா! நான் பதவியை வைத்து எப்போதுமே குடும்பத்தில் பழகியது கிடையாது. அதோ அந்த வாசற் படிக்கு அப்பால் சேனை நாயகன்; இந்த மாளிகையில் நான் உங்கள் மகன்."

"எனக்குப் புரியாததை ஏதோ சொல்வதுபோலச் சொல்கிருயே! திருபுவனியை நீ மறுப்பதற்குக் காரணம்? அவளுடைய தகப்பன் சிறை சென்ற குற்றவாளி; தாயார் தற்கொலை செய்துகொண்ட பாவத்துக்குரியவள். இதனுல்தானே?"

"நீங்கள் நினைப்பதுபோல நான் எண்ணியிருந்தால், திருபுவனியை இங்கு அழைத்து வந்தீர்களே, அன்றே மறுத்திருப்பேன். அவள் என் தமக்கை மகள். மானம் தாளாமல் உயிர் நீத்த கவரிமானுக்குப் பிறந்தவள். தந்தை குற்றம் செய்தது தலைவிதி. அதற்காக யாரும் மகளை வெறுத்துவிட முடியுமா?"

"பின் நீ ஏன் வெறுக்கிருய்!"

"நான் வெறுப்பதாகச் சொல்லவில்லையே! விருப்ப மில்லை என்றுதான் சொல்லுகிறேன்."

"அதற்குக் காரணம் என்னவென்றுதான் கேட்கிறேன்."

"இப்படிக் கேட்பதே காரணமல்லாதது. வாழ்க்கை என்பது மனம் விரும்புவது. என் மனம் அவளை விரும்ப வில்லை."

"ஏன், அவளுக்கு அழகில்லையா?"

"எல்லாமே இருக்கின்றன. எனக்கு மனமில்லை."

இக்கட்டத்தில் தாய் வேதவல்லி கண்ணீருடன் குறுக்கிட்டாள்.

"கண்ணு! விருப்பம் இல்லை என்று கூறிவிட்டால் பிறகு அவளுக்கு வேறு யார், விருப்பமுடன் மணக்க முன் வரப் போகிறார்கள்?"

"ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"தெரிந்துதான் சொல்கிறேனடா, கண்ணு! திரு புவனியின் தாய் தந்தை உனக்கு தமக்கையும் மாமனும். மேலும் நீ தரும நியாயம் தெரிந்தவன். தந்தையின் தலை விதிக்கும் மகளுக்கும் என்ன நியாயம் என்று பேசுகிறாய். ஆனால் அடுத்தவனை மாப்பிள்ளையாகப் பார்த்தால் இவ் வாறெல்லாம் நினைப்பான் என்று நாம் எவ்வாறு எதிர் பார்க்கமுடியும்?"

"உங்களை யார் எதிர்பார்க்கச் சொன்னார்கள். நான் எப்போதோ பிள்ளையைப் பார்த்து முடிவு செய்து விட்டேன்."

"பிள்ளையைப் பார்த்து முடிவு செய்துவிட்டாயா?"

"ஆமாம், அம்மா! தம்பி அருண்மொழிதான்."

தாய் தந்தை இருவருமே பேயறைந்தவர்களாகக் கவனிக்கத் தொடங்கினர்.

"ஏனிப்படிப் பார்க்கிறீர்கள்?" என்ருன் நாயகன்.

"உன் முடிவுதான் அதிர்ச்சியைத் தந்துவிட்டது" என்ருர் குன்றத்தூர்க் கிழார்.

"இதில் அதிர்ச்சி என்ன இருக்கிறது? அப்பா! நீங்களும் அம்மாவும் ஒரு விஷயத்தைத் தீவிரமாகச் சிந்திக்க மறந்துவிட்டீர்கள். திருபுவனியின் தந்தை சிறை சென்ற குற்றவாளி; தாயார் தற்கொலை செய்து கொண்ட பாவத்துக்கு ஆளானவள்; இதனுல் திருபுவனிக்கு யார் பிள்ளை தருவார்கள் என்று சிந்தித்தீர்களே யொழிய, நம் வீட்டில் ஓர் அருமை மகனிருக்கிருன்; அவன் பெயர் அருண்மொழி; அவனுக்கு ஒரு கால் ஊனம்: இப்படியான செல்வக் குமாரனுக்கு எந்த நல்லிடத்துப் பெண் மருமகளாக வாய்ப்பாள்? யார் பெண் தர முன் வருவார்கள்? என்னதான் பெரிய குடும்பத்து மகனுக இருந்தாலும் பல்லவசேனை நாயகனுடைய தம்பியாக இருந்தாலும் நொண்டிக் கால் மாப்பிள்ளையை யார் மாப்பிள்ளையாக ஏற்பார்கள்? யாராவது சிந்தித்துப் பார்த்தீர்களா?"

பெற்றவர்களுக்கு இப்போது அதிர்ச்சி அதிகமானதேயொழிய குறையவில்லை. இதுபற்றிக் குன்றத்தூர்க்கிழார் சிந்திக்காமலில்லை. சிந்தித்துப் பயனில்லை என்றுதான் விட்டுவிட்டார். திருபுவனியின் குணங்கள் தாம் அவருக்கு நன்ருகத் தெரியுமே!

"ஏனப்பா? விடை கூறுங்கள்" என்ருன் நாயகன்.

"நாயகா, இதுபற்றி நான் சிந்திக்காமலில்லை. ஆனுல் திருபுவனியின் குணம் உனக்குத் தெரியாது. அவள்

உன்னைத்தான் விரும்புகிறாள். அருண்மொழியின்பால் அவளுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை.''

''நான் ஆணழகன்; அவன் நொண்டி... இதனால் தானேப்பா?''

குன்றத்தூர்க்கிழார் தலையசைத்தார்.

''நம் பெண்ணே தம்பியை வெறுத்தால், ஊர் பெண்களில் எவளாவது ஒருத்தி விரும்புவாள் என்பது என்ன நிச்சயம்? எனக்கு விருப்பமில்லை என்று அவளிடம் சொல்லிவிடுங்கள்.''

''அவள் கேட்கமாட்டாளே! அருண் மொழியை மணந்துகொள் என்று கூறினாலே எரிந்து விழுவாளே!''

''அப்படியென்றால் அவளும் எரிந்து சாம்பலாக வேண்டியதுதான்.''

''நீ என்னடா கண்ணா, இதயமில்லாமல் பேசுகிறாய்?''— தாய் அரற்றினாள்.

''நான் இதயத்தோடுதான் பேசுகிறேனம்மா! நீங்கள் ஒருமகனுடைய துயரம் தெரியாமல் பேசுகிறீர்கள். அம்மா! உலகத்தில் முதலில் அண்ணன் திருமணம்; பின்புதான் தம்பியின் திருமணம் என்பார்கள். எனக்கு முதலில் என் தம்பியின் திருமணம்; பிறகுதான் என் திருமணம்.'''

''கண்ணா...!''

"ஆம், அம்மா! என் தம்பிக்கு என்ன குறைச்சல்? அழகில்லையா? ஆண்மையில்லையா? ஒரு கால் ஊனம். அவ்வளவுதானே? அவனுக்கு குடிசையிலிருந்தாவது ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டுவர முடியும்? ஆனால் திருபுவனிக்குச் சொல்லி வையுங்கள். குப்பை மேட்டி லிருந்துகூட ஒரு மாப்பிள்ளையைக் கொண்டு வர முடியாது. ஏதோ நான் பரந்த மனத்துடனும் தமக்கை மகள் என்பதனாலும் அவள் என்ன செய்வாள் என்று கூறினேன். ஆனால் ஊருலகம் அப்படி நிச்சயம் கூறாது. தாய் தற்கொலை செய்து கொண்ட அவமானத்தையும், தந்தை சிறை சென்ற சிறுமையையும், சொத்துபத்தில்லா நிலையையும் வைத்து எவரும் திருபுவனியை மருமகளாக ஏற்கமாட்டார்கள். பொதுவாக நல்ல குடும்பத்தில் அவள் மருமகளாகப் போக முடியாது. இதனை அவ ளுக்குப் பிட்டுப் பிட்டுச் சொல்லுங்கள். கேட்டால் வாழ்வு; மறுத்தால் சாம்பல்தானே?"

சொற்களிலும் கண்களிலும் பொறி பறக்கக் கூறி முடித்துத் தலையைத் திருப்பி மோவாய்க் கட்டையில் கையூன்றிக் கொண்டான் நாயகன்.

அவன் சொல்வதும் நியாயந்தானே என்று பட்டது வேதவவல்லியம்மைக்கு! பிறகு கேட்டாள். "இதனை நான் அவளிடம் எப்படியடா சொல்வேன்!"

"என்னிடம் எப்படிச் சொன்னீர்களோ, அப்படித் தான்."

"அவள் சம்மதிக்க மறுப்பாளே!"

"அது உங்கள் சாமர்த்தியம். அம்மா! என் தம்பி மட்டும் இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிப்பான் என்று

நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? அவனைச் சம்மதிக்க நான் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்!''

''ஏன் சம்மதிப்பதற்கு என்னவாம்?''

''ஓ...அப்படிக் கேளுங்கள். உங்கள் திருபுவனி பற்றி ஊருலகத்துக்குக் குடும்ப செய்திதான் தெரியும். ஆனால் என் தம்பிக்கு உங்கள் பேத்தியின் குணச் செய்தியே தெரியுமே! அதனால்தான்.''

''திருபுவனி சம்மதிக்க மறுத்தால்?''

''திருப்பித்திருப்பி இதையே கேட்கிறீர்களேயம்மா! என் தம்பி மறுத்துவிட்டால் இந்தப் பெண்ணின் நிலை என்ன என்று யாராவது சிந்திக்கிறீர்களா?''

''தம்பியை நீ சமாதானப்படுத்திக் கொள்வாய் என்பது எங்களுக்குத் தெரியுமடா?'' என்றார் குன்றத்தூர்க் கிழார்.

''அப்படியே நீங்களும் உங்கள் பேத்தியைச் சமாதானத்துக்குக் கொண்டு வாருங்கள்'' என்றான் நாயகன்.

கொஞ்ச நேரம்வரை சிந்தித்த குன்றத்தூர்க் கிழார், ''நல்லது, இந்த ஏற்பாட்டைச் செய்ததும் திருமணம்தானே?'' என்றார்.

''ஆகா!''

''நன்றாக இருக்கிறதடா! நீ உனக்குள் சபதம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் பெரியவனிருக்க

இளையவனுக்குத் திருமணம் செய்தால், நீ கூறும் ஊருலகம் என்ன நினைக்கும்?''

''முதல் ஏற்பாடு செய்யுங்கள். என் திருமணத் தைப்பற்றிப் பிறகு முடிவு சொல்லுகிறேன்.''

''முடிவு சொல்வதாவது? பெண் பார்த்தாய் விட் டால், இரு திருமணங்களை ஒருங்கே கவனித்துவிட வேண்டியதுதான்.''

''அப்படியா! அப்படியே செய்வோம்.''

''அப்போது நாங்கள் உனக்குப் பெண் பார்க்கலாம் அல்லவா?''

''அந்தச் சிரமம் உங்களுக்கு வேண்டாம். அந்த நாயகியை நானே பார்த்தாய் விட்டது.''

மேலும் அதிர்ச்சி.

''நீயே பார்த்தாய் விட்டதா?''

''ஆமாம்; முதலில் இந்த ஏற்பாடு முடியட்டும். பிறகு அந்தச் செய்தியைச் சொல்லுகிறேன்'' என்று கூறிய நாயகன், காற்றுட உலவி வர வெளியே புறப் பட்டான். அவனுக்கும் அலுப்பாக இருந்தது.

பெற்றவர்களுக்குப் பெருங் குழப்பமாக இருந்தது. திருபுவனியைச் சம்மதிக்க வைப்பது என்பது ஒருபுற மிருக்க, நாயகன் வேறு, எவளோ ஒரு நாயகியைப் பார்த்து வைத்திருப்பதாகச் சொல்கிறானே!

“என்னங்க! பிள்ளை ஏதாவது காதல்...” தாய் இழுத்தாள்.

குன்றத்தூர்க் கிழார் சிரித்தார்.

“அடிப் பைத்தியக்காரி! நாயகன் என்னுடைய மகன்! இது விஷயத்தில் சந்தேகப்பட்டது உன்னுடைய அறியாமை. போய் வேலையைப் பார்! நாளை கேட்டுத் தெரிந்து கொண்டால் போகிறது.”

வேதவல்லியம்மை அடுக்களை நாடி நடந்தாள். குன்றத்துர்க் கிழாரும் மாடத்தை நோட்டம் விட்ட வண்ணம் தம்மறையை நாடி நடந்தார்.

மாடத்தில் இளையவன் அருண்மொழி இருக்கிருனு என்றுதான் அவர் நோட்டம் விட்டார். ஆனுல் அவன்— அருண்மொழி அதுவரையும் ஒரு மருங்கே மறைந்து நின்று நடந்த அத்தனையையும் கவனிக்கத்தான் செய்தான் அப்படிக் கவனித்த வகையில் அவனுக்கு ஏற்பட்ட உள்ளுணர்வுகளை என்னென்று கூறுவது! அண்ணன் சம்பந்தப்பட்டிருந்ததால் கூச்சலிடாமல் பொறுமையாகக் கவனிக்கலானுன். பெற்ருேர்கள் மட்டும் இது பற்றிப் பேசியிருந்து கேட்கிற வாய்ப்பு ஏற்பட்டிருந்தால், இந்நேரம் அந்தக் கதையே வேருகி இருக்கும்.

அண்ணன் நாயகனை நினைக்குந்தோறும் உள்ளத்தில் பெருமிதமான பக்தியே மேலோங்கியது அருண்மொழிக்கு! தன் பேரில்தான் அவருக்கு எத்துணை பாசம்! தனக்கல்லவா, முன்பு திருமணமாக வேண்டும் என்று சொல்கிருர்! நடக்கிற காரியமா இது? நடக்கவேண்டும் என்பதற்காகத்தானே அவர் அவ்வாறு கூறுவது?

போயும் போயும் திருபுவனியையா நாம் திரு மணம் செய்து கொள்வது? அண்ணனே இப்படி விரும்புகிருரே! எவ்வாறு மறுப்பது? தம்பியை வழிக்குக் கொண்டு வருகிற பொறுப்பு, என்னுடையது என்று எவ்வளவு நம்பிக்கையுடன் சொன்ஞர்! இறைவா! இந்த அறத்துன்பமான நிலையிலிருந்து எவ்வாறு மீள்வேன்?

மனத்தைப் போட்டுப் பிசைந்த வண்ணம் தன் அறை நாடிச் சென்ருன் அருண்மொழி!

**கோ**யிலுக்குச் சென்ற திருபுவனியும் திரும்பி விட்டாள்.

திருபுவனி திரும்பிவிட்டாள் என்பது தெரிய வந்தது. அப்போதுதான் நாயகனும் ஆழ்ந்த சிந்தனை யுடன் சாளரத்து வழியாகக் கவனித்துக் கொண்டிருந் தான். அதற்குள் குன்றத்தூர்க் கிழார் அங்கு வந்தார்.

"நாயகா! திருபுவனியிடம் பேச்சை ஆரம்பிக்க லாமா?" என்று கேட்டார்.

தந்தையின் இந்த அவசரத்தைக் கவனித்த நாயகன், "அப்பா! ஒருவாரம் போகட்டும். நான் சொல்கிறேன். பிறகு நீங்கள் ஆரம்பிக்கலாம்" என்ருன். குன்றத்தூர்க் கிழாரும் பேசாமல் போய்விட்டார்.

நாயகன் ஒரு காரணத்தை முன்னிட்டுத்தான் இவ் வாறு சொன்ஞன். எடுத்த எடுப்பில் திருபுவனியைக் கேட்கக் கூடாது. அவளுக்கு நாயகன் மீதுதான் ஆசை அளவு கடந்திருந்தது. அந்த ஆசையின்

காரணமாக வேதனையுடன் தம்பியை அவள் மறுத்து விடலாம் அல்லவா?

எனவே இந்த ஒரு வாரத்துக்கு நாயகிக்குக் கசப்பு ஏற்படுகிற வண்ணம் நடந்து காட்டவேண்டும்! 'ஓ...... மாமன் என்னை வெறுக்கிறார்; அவருக்கு என்மீது ஆசையில்லை; இதனால் திருமணமும் செய்துகொள்ளமாட்டார்' என்ற எண்ணம் உதயமாகவேண்டும். அதன் பிறகு இது பற்றியதில் பெற்றோர் நெருங்கி செய்தியை அறிவிக்கிறபோது திருபுவனி ஒப்புக்கொள்ள உடன்படுவாள்.

நல்ல சிந்தனைதான். ஆனால் இது எவ்வளவு தூரம் திருபுவனியின் மனத்தை மாற்றப் போகிறதோ? அவள் தான் முன்கூட்டியே அப்படி ஏதேனும் நடந்தால், தாய் சென்ற வழி என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிறாளே!

மாளிகைக்கு வந்த திரிபுவனி உருப்படியாக உண்ணவில்லை. ஏதோ உண்டோம் என்று பெயர் சொல்லிவிட்டுத் தன்னறைக்குச் சென்றுவிட்டாள். யாரிடமும் அவ்வளவாகப் பேசவில்லை. வேதவல்லியம்மைகூட எதற்காக இப்படிப் பேயறைந்தவள் போலக் காணப்படுகிறாள் என்று ஐயப்பட்டாள்.

அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள். ஒரு முறை வாய்விட்டுச் சத்தமிட்டு அழுதுவிடலாம் போலத் தோன்றியது. அப்படி அழுதால் தன் பலவீனத்தைத் தானே காட்டிக் கொடுத்தது போலாகும் என்றெண்ணி அடக்கிக் கொண்டாள். மனத்தில் அரக்கனொருவன் புகுந்துகொண்டு இரைச்சலிடுவது போலத் தோன்றியது.

உள்ளுக்குள் தன்னைத்தானே நொந்துகொண்டாள். எதற்காகக் கோயிலுக்குச் சென்றோமென்றாய்விட்டது. கோயிலுக்குச் சென்றால் குறை தீரும் என்பார்கள். நாம் குறையை அல்லவா பெற்று வந்துவிட்டோம்!

செல்லையனைச் சபியாகச் சபித்துக்கொண்டாள். படுபாவி இங்கு ஏன் வந்தான்? அவனுடைய கெட்ட எண்ணம் இப்போதல்லவா புரிபடுகிறது! ஐயோ! இந்தப் படுபாவி இங்கு வந்துதானா தன் சுய ரூபத்தைக் காட்ட வேண்டும்?

திருபுவனி மார்பகத்தைப் பிசைந்து கொண்டாள். அப்படி அவள் பிசைந்துகொண்ட பாங்கு, குழந்தையைப் பெற்று அது இறந்து பட்டதும், முலைப்பால் கட்டித் தவித்துப் பிசைந்து கொள்ளும் ஒருதாயின் வேதனை போலத் தெரிந்தது.

**செ**ல்லையன் மயிலையைச் சார்ந்தவன். மயிலைச் சாத்தப்பன் வீதியில்தான் அவனும் குடியிருந்தான். திருபுவனியின் வீட்டுக்கு அடுத்த வீடு. கொஞ்சம் வசதி மிக்கக் குடும்பத்துப் பிள்ளை. இனத்தாலும் ஒன்றுபட்டவன்.

குடிகாரத் தந்தையான சித்திராதித்தன், அடிக்கடிச் செல்லையன் தந்தையைச் சந்திக்கப் போவதுண்டு. எதற்காக? எல்லாம் கடன் கேட்கத்தான்! கடன் வாங்குவதும் சமயத்தில் கொடுப்பதுமாகத் தொடர்பு நீடித்தது. பின்னால் கடன் ஏறிப்போயும் தலைக்கு மீறியது. இவை யாவும் குடிகாரத் தந்தை சித்திராதித்தன் பற்றியவை. இந்த நிலையில் செல்லையன் அடிக்கடி திருபுவனியின் வீட்டுக்கு வருவான்; திருபுவனியின் தாயார் கமலுக்

கண்ணியிடம் நல்ல பெயர் பெற்றுக்கொண்டான். ஏதோ கள்ளங்கபடமில்லாமல் வந்து பழகுகிருன் என்று தான் தாய் கமலக்கண்ணி நினைத்தாள். திருபுவனியும் இயல்பாகப் பேசிச் சிரித்து விளையாடஞள். இது பெரும் பாலாஞேர்க்குப் புரிவதில்லை. காமம் என்பது கர்ப்பூரம் போன்றது. நெருப்பு அதனுடன் இயல்பாகப் பழகக் கூடிய ஒன்று என்று நினைப்பது எத்துணைக்கு மடமை!

செல்லையன் நெஞ்சில் நாளுக்கு நாள் தீப்பரவிக் கொண்டே வந்தது. ஒன்று அவளைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும்; மறுத்தால் ஒரு நாளைக்காவது பலாத்காரமாக திருபுவனியை அனுபவித்து விடுவது என்று முடிவு செய்து கொண்டான்.

அவன் எந்த வேளையில் முடிவு செய்தாஞே, மறு நாளே சித்திராதித்தன் சிறைப்பட வேண்டி நேர்ந்தது. அதன் பிறகுதான் அடுக்கடுக்காக நிகழ்ச்சிகள் தோன்றி சித்திராதித்தன் குடும்பமே கலகலத்து விட்டதே!

செல்லையன் காஞ்சிக்கு வந்து மூன்று தினங்களா கின்றன. சேஞதிபதியின் மாளிகை வரை சென்று கை வரிசையைக் காட்டுவதென்பது ஊமைக்கனவு. எனவே தொலைவிலிருந்த வண்ணமே மாளிகையை மொய்த்துக் கொண்டிருந்தான்.

விதி சாதகமாக விளையாடத் தொடங்கிவிட்டது. இல்லையென்ருல், குன்றத்தூர்க் கிழார் ஏற்பாட்டின் கீழ் திருபுவனி தோழிகளுடன் கோயிலுக்குப் புறப்பட் டிருப்பளா?

நல்ல சமயம் வாய்த்ததென்று எண்ணி மகிழ்ச்சி யுடன் பின் தொடர்ந்தான் செல்லையன்.

காஞ்சிக் காமாட்சியம்மன் கோயில் சரித்திரப் புகழ் பெற்றது. கரிகாலச் சோழன் காலத்தது. அந்தப் புகழ் மணக்கும் புவனம் பதினுன்கையும் காப்பவளான காமாட்சியைப் பரிபூரணமாகத் தரிசித்தாள் திருபுவனி. ஆனுலும் மயிலைக் கபாலீச்சுரர் கோயிலில் இருந்த பெருமையும் அமைதியும் அங்குக் காண முடியவில்லை. ஆனுலும் கற்பகாம்பிகையின் அருள் பிரகாசம் காமாட்சியிடமும் இருக்கக் கண்டு மனமுருகி வழிபட்டாள். இந்த அகம்பாவிப் பெண்ணு இப்படி ஆத்தாளிடம் அன்பு காட்டி வழிபடுகிருள் என்று கேட்கத் தோன்றும். அகம்பாவத்துக்கும் இறை வழிபாட்டுக்கும் சம்பந்தமே இல்லையே! அது புறவுலக மிடுக்கு; இது அக விளக்கின் பிணைப்பு. எனவே, திருபுவனியிடம் தேவி வழிபாடு ஒன்றி யிருந்தது; வியப்பதற்கும் ஒன்றுமில்லை.

அம்மையைத் தரிசித்துவிட்ட பிறகு, சுற்றியுள்ள தெய்வங்களைக் கண்டு வழிபடவும், பிரகாரத்தைச் சுற்றி வரவும் தோழிகள் அழைத்தனர். அப்போதுதான் அவளுடைய கண்களில் செல்லையன் பட்டுவிட்டான்.

செல்லையனைக் கண்ட திருபுவனி, மனத்தில் எந்த விதக் களங்கமுமில்லாமல், "செல்லையாவா! எப்போது வந்தாய்?" என்ருள். தன்னூராயிற்றே! துடிப்பு இருக்கத்தானே செய்யும்?

இதற்குள் நேரமாகும் என்று தோழிகள் வற்புறுத்தவே, "நீங்கள் கோயிலைச் சுற்றிப் பார்த்து வாருங்கள். எங்கள் ஊர் மனிதர் இவர். கொஞ்சம் பேசிவிட்டுப் பிறகு உங்களுடன் கலந்து கொள்கிறேன்!" என்ருள் திருபுவனி.

தோழியர்களும் அவ்வண்ணமே பிரகாரத்தைச் சுற்றிவரப் புறப்பட்டனர்.

கோயிலுக்குச் சற்றே தள்ளி மண்டபத்தின் புதரில் இருவரும் அமர்ந்தனர்.

“செல்லையா! எப்போது வந்தாய்? ஊரில் அனைவரும் நலந்தானே?” என்று விசாரித்தாள் திருபுவனி.

செல்லையனும் சிரித்துக் கொண்டே, “எல்லாரும் நலந்தான். நீதான் எங்களையெல்லாம் மறந்து இங்கு வந்துவிட்டாய்” என்ருன்.

“என்ன செய்யலாம் செல்லையா? என் விதி அப்படியாய் விட்டது. இனி எனக்குப் புகலிடம் என் பாட்டி வீடுதானே? ஆமாம்; நீ எப்போது காஞ்சிக்கு வந்தாய்?”

“வந்து மூன்று தினங்களாகின்றன. அங்கே மாளிகைக்கு வரலாம் என்ருல் மனம் அஞ்சியது.”

“ஆமாம், ஆமாம்; என் மாமன் பல்லவ சேனுதிபதி. அந்நியர் வந்தால் காரணத்தோடுதான் வரவேண்டும். ஆமாம்; நீ என்ன விஷயமாகக் காஞ்சிக்கு வந்தாய்?”

“உன் விஷயமாகத்தான்.”

“என் விஷயமாகவா?”

“திருபுவனி! உன்னைப் பிரிந்த நாள் முதற்கொண்டு எனக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருக்கிறதே, அதுவே போதாதா?”

“என் பிரிவால் உனக்கேன் பைத்தியம் பிடிக்க வேண்டும்?”

"நீ புரிந்து கொண்டது இவ்வளவுதானு?"

"நீ புரிந்து கொண்டதைத்தான் சொல்லேன்."

"திருபுவனி! நாம் எப்படி யெல்லாம் பழகியவர்கள்."

"ஆமாம்; பழகினேம். அதனுலென்ன?"

"அதனுலென்னவா? ஓர் ஆணும் பெண்ணும் எதற்காகப் பழகுவார்கள்?"

"எதற்காகப் பழகுவார்கள்?"

"காதலிக்க!"

"ஓ...இப்போது புரிகிறது. நான் அப்படிப் பழகவில்லையே?"

"திருபுவனி! மாமன் வீட்டுக்கு வந்து விட்டோம் என்ற எண்ணத்தில் நேற்றிருந்ததைப் பழகியதை மறந்துவிடாதே!"

"நான் ஒன்றையும் மறக்கவில்லை. தயவு செய்து போய்விடுங்கள். நான் பல்லவப் பெரு நாட்டின் சேனுதிபதியின் தமக்கை மகள் மட்டுமல்ல, சேனுதிபதியின் நாயகியாகப் போகிறவள்!"

"குற்றவாளியின் மகளை மணக்க சேனுதிபதிக்கு என்ன பைத்தியமா?"

"மூடு வாயை! நான் அவருடைய தமக்கை மகள்."

"திருபுவனி! நீ என்னை இப்படி ஏமாற்றுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"உன்னுடைய ஒருதலைக் காதலுக்காக அனுதாபப் படுகிறேன். போய்விடு. என் தோழியர்கள் வருகிற நேரமாயிற்று. அவர்கள் காதுகளில் விழுந்தால், பிறகு உன் உயிருக்கு ஆபத்து வந்தாலும் வரும்."

"உன்னையே இழக்கிறபோது இந்த உயிர் ஒன்று தானா பெரிது? ஆனாலும் ஒன்றைச் சொல்வேன். நீ எதிர்பார்க்கிற எந்தக் கனவும் நிறைவேறாது. உன்னுடைய நிலைக்கு எவனும் உன்னை மணக்க வர மாட்டான். பின்னால் நீ என்னைத்தான் நினைத்துப் பார்க்க நேரிடப் போகிறது. அதனை முன் கூட்டியே புத்தி சாலித்தனமாக முடிவு செய்து கொண்டால், பின்னால் உனக்கு என்று ஒரு வாழ்க்கை என் மூலம் அமையும். தவறினால் ஒரு குடிகார சோம்பேறியின் மகனைத்தான் நீ மணக்க நேரிடும். சிந்தித்து முடிவு சொல்."

"இப்போது எந்த முடிவையும் சொல்வதற்கில்லை. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் நான் உனக்குச் சொல்லி யனுப்புகிறேன். போய்விடு!"

செல்லையன் வெந்த மனத்துடன் புறப்பட்டான். தோழியர்கள் வந்தனர். திருபுவனியும் மாளிகைக்குத் திரும்பினாள்.

சிந்தனைகள் கொட்டமடிக்கத் தொடங்கின. செல்லையன் சொன்னது போல நடந்துவிடுமோ என்று அடிக்கடித் தன்னுள் கேட்டுக் கொண்டே படுக்கையில் புரண்டாள் திருபுவனி.

மாமன் நாயகன் நடந்து கொள்கிற விதமே நிறை வின்மையைக் கொடுக்கிறது. இந்த நிலையை ஒப்பிட்டுப்

பார்த்தால், அந்தப் பொல்லாத காமுகன் செல்லையன் சொன்னதுபோல நடந்துவிட்டால்...

மீண்டும் 'ஓ' வென்று கதறிவிடலாமா என்று தோன்றியது. எப்படியோ சமாளித்து அடக்கிக்கொண்டாள். பொழுது விடிந்ததும் இந்த எண்ணங்களுக்கு ஒரு முடிவு கண்டுவிட வேண்டும் என்கிற துணிவு அவளுக்கே பிறந்துவிட்டது.

படுக்கையில் புரண்ட வண்ணம் வெகுநேரம் விழித்திருந்தாள். பிறகு எப்போது கண்ணயர்ந்தாளோ, அது அவளுக்கே தெரியாது.

# ஏழு

நாயகனுடைய முடிவைக் கேட்டுப் பெரிதாக அதிர்ந்து போனாள், அன்னை வேதவல்லியம்மாள். அவள் மட்டுந்தானா அதிர்ந்து போனாள்? அதுவரை கதவு மறைவாக ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த திருபுவனியும் பேரதிர்ச்சிக்கு ஆளாகிப் போனாள். தன்னை மணக்க ஏன் மறுக்கிறார் என்கிற குழப்பத்துக்கு இப்போது முடிவு தெரிந்துவிட்டது. எங்கோ சந்தித்தவளை மணக்க மனம் இடம் தருகிறபோது இந்தத் திருபுவனியை மணக்க அவர்க்கு என்ன வந்துவிட்டது?

ஆமாம்; நொண்டியாய் இருக்கும் தம்பி அருண்மொழிக்கு யார் பெண் தரப்போகிறார்கள்? அதற்காகவே திருபுவனி பிறந்திருக்கிறாள் என்பது போலல்லவா அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார்! அவர் நினைக்கலாம். ஆனால் நான் சம்மதிக்க வேண்டாமா?

கண்களைக் கசக்கிக் கொண்டே தன்னறை நாடி நடந்தாள் திருபுவனி. எப்படியும் இதற்கும் ஒரு வழி கண்டே தீரவேண்டும். அதுவும் இன்றே தீரவேண்டும் என்று உறுதியாக முடிவு செய்துகொண்டாள்.

தாத்தா குன்றத்தூர்க் கிழாரிடம் முறையிட்டுப் பயனில்லை. பெரிய மகன் விஷயத்தில் அவர் தலையிட மாட்டார். பாட்டியார் வேதவல்லியம்மைதான் தன் பால் அன்புகொண்டு எதிர்த்துப் போராடுகிறவர். அவரிடம் மீண்டும் பேசிப் பார்த்து ஒரு முடிவு எடுக்க வேண்டியதுதான்.

கதவு திறக்கும் ஓசை கேட்டுத் திரும்பிப்பார்த்தாள். வேதவல்லியம்மைதான் முகமாற்றத்துடன் வந்து கொண்டிருந்தாள்.

"புவனி! உன்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டுமம்மா!" வேதவல்லியம்மை பேச்சைத் தொடங்கினாள்.

"எனக்கு எல்லாம் தெரியும்."

"தெரியுமா?"

"ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தேன்."

"ஒரு வேலை மிச்சமாய் விட்டது. உன் அபிப்பிராயம் என்னம்மா!"

"நீங்கள் என்ன அபிப்பிராயப் படுகிறீர்கள்."

"சின்னவனுக்கு என்ன? ஒரு கால் இல்லையே என்கிற குறைதானே? மற்றபடி ராஜாமாதிரியிருக்கிறான்."

"என் அபிப்பிராயத்தைச் சொல்லட்டுமா?"

"அதைக் கேட்கத்தானே வந்தேன்"

"நாளை காலை சொல்லுகிறேன்."

"நாளைய காலையிலா?"

"ஆம்! சிந்திக்க வேண்டாமா?"

"நன்றாகச் சிந்தித்துச் சொல். திருமணம் என்பது உன் சொந்த விஷயம். ஆனால் இன்னொன்றையும் கூடவே சிந்தித்துப்பார். நீ இப்போதைக்கு இருக்கும் நிலை. தந்தை கொலைகாரன், தாயார் தற்கொலை செய்து கொண்டவள். வேற்றிடத்தில் நீ சென்று நிம்மதியாய் வாழுவாய் என்பது என்ன நிச்சயம்? வாழ்க்கையே முடமாகிப் போய் விடுவதைவிட ஒரு கால் முடம் எவ்வளவோ தாழ்வில்லையல்லவா?"

வேதவல்லியம்மையின் கண்களில் நீர் தாரையிட்டு விட்டது. அதற்கு மேலும் அவ்வம்மை அங்கு நிற்க மனமில்லாமல் போய்விட்டார்கள்.

வெகுநேரம் சிந்தித்துப் பார்த்தாள் திருபுவனி. செல்லையன் என்கிற பயங்கரக் கழுமரம் வேறு தன்னை நோக்கி நீண்டு பயமுறுத்துவதும் நினைவு வந்தது.

பெரிய அத்தான் நாயகனிடம் வாதாடிப் புண்ணியமில்லை என்பது அவளுக்குத் திட்டவட்டமாகப் புரிந்தது. தனக்காகவே பிறந்தது போல நாயகி என்கிற பொருத்தமான பெயருடன் விளங்குகிறவளை எண்ணி

அவர் கனவு கண்டு கொண்டிருக்கிருர். ஒரே ஒரு வழி சின்ன அத்தான் அருண்மொழியை விட்டு வாதிடச் செய்ய வேண்டியதுதான். தம்பியின் பேச்சுக்கு மதிப்பு தருகிறவர் பெரிய அத்தான்.

பகல் உணவு முடிந்து படுக்கையில் புரண்டாள். முடிவு என்ருகுமோ என்கிற உளேச்சல் அவளே உறுத்தியது.

மாலே மறைந்து இரவு தலே தூக்கியது.

திருபுவனி மெல்ல மாடத்தை நோக்கிச் சென்ருள். அங்கே இதே நிணவுடன் அருண்மொழியும் முடிவு காணுமல் தடுமாற்றமுடன் அலேமோதிக் கொண்டிருந் தான். அவனுக்குப் பரிபூரணமாகத் தெரிந்துவிட் டது. திருபுவனி தன்னே எள்ளளவும் விரும்பவில்லே; அவளுடைய ஆசைகள் அனைத்தும் அண்ணுர் நாயகன் பாலிருக்கிறது. வீணுக அவளே மணந்து வாழ்வில் என்ன சுகம் காணப் போகிருேம்! பொருத்தமில்லாமல் வாழ்ந்து போராடுவதைவிட வாழ்வில் கால் மட்டுமல்ல, இனித்துக் கூடவேண்டிய காமமும் முடமாகியே இருந்துவிட்டுப் போகட்டுமே!

திருபுவனி வருவதைக் கண்டு திரும்பிப் பார்த்தான். அவனுக்கே வியப்பு! ஏனிவள் இப்படி வருகிருள்! அவ ளாகவே வருவதைக் கவனிக்கிறபோது ஒருவேளே தன்னே மணக்கச் சம்மதித்து விட்டாளா? வேறுவழி யில்லே. முடமாளுலும் இவனே மணந்து வாழ்க்கையைத் தியாகம் செய்துவிடலாம் என்கிற முடிவுக்கு வந்து விட்டாளா?

திருபுவனி அருகே வந்து நின்ருள். ஆனுலும் அருண்மொழி முகம் கொடுத்துப் பேசவில்லை. அவன் வெறுமனே எங்கோ கவனித்த வண்ணம் அமர்ந்திருந் தான்.

"சின்னத்தான்!"

திருபுவனிதான் அழைத்தாள். அந்த அழைப்பில் போலிக்கனவு குழைந்தது.

அண்ணுந்து கவனித்தான் அருண்மொழி. அது என்ன என்று கேட்பது போலிருந்தது.

"உங்களிடம் தனியாகப் பேச வேண்டும் என்று நினைத்தேன். அதனுல்தான் வந்தேன்."

அருண்மொழிக்கே வியப்பாக இருந்தது.

தனித்துப் பேசுவதாவது? இவளுக்கு ஏதோ திடீர் மனமாற்றம்தான் ஏற்பட்டிருக்க வேண்டும்!

"உட்கார் திருபுவனி!"

"பரவாயில்லை."

ஓகோ! அந்த அளவுக்கு ஒரு மயரியாதைகூட முளைத்து விட்டதே!

"நல்லது; என்ன விஷயமாகத் தனித்துப் பேச ஆசைப்பட்டாய்?"

"திருமண விஷயமாக!"

"புதிய முடிவு ஏதாகிலும்..."

"முடிவு பழையதுதான்; முயற்சி புதிதாக இருக் கட்டுமே என்றுதான்!"

"வேறு யாரையாவது திருமணம் செய்துகொள்ள முடிவு செய்து விட்டாயா?"

"சின்னத்தான்! நான் திருமணம் செய்துகொண்டால் பெரிய அத்தானை! தவறினால்..."

"தவறினால்...?"

"எமனை!"

"அவன் உன்னை மணக்கச் சம்மதித்து விட்டானா? அவனுடைய பெற்றோர் நீ மயிலையில் இருக்கிறபோதே பெண் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டார்களா?"

அருண்மொழி கலகல வென்று நகைத்தான்.

"என் பிழைப்பு உங்களுக்குச் சிரிப்பாக இருக்கிறது?"

"சிந்தனைக்குரியதாகவும் இருக்கிறது. நல்லது; உன்னுடைய புதிய முயற்சி பற்றிப் பேசலாம்."

"நான் உங்களை மணந்தால் நிம்மதியாக வாழ முடியும் என்று நினைக்கிறீர்களா?"

"நான் மட்டும் உன்னை மணந்து நிம்மதியாக வாழ முடியும் என்று எதிர்பார்க்கிறாயா?"

"இரண்டுமே இயலாது."

"பின்!"

"நான் பெரிய அத்தானைத்தான் மணந்தாக வேண்டும்"

"நீ கனவு காண்கிறாய்!"

"என் கனவை உங்களால் நனவாக்க முடியும்!"

"அதெப்படி?"

"நீங்கள் எனக்காக உங்கள் அண்ணாரிடம் வாதாடலாம் அல்லவா? உங்கள் பேச்சைத் தட்டவே மாட்டாரே!"

மீண்டும் கலகலவென்று நகைத்தான் அருண்மொழி.

"நன்ருக இருக்கிறது, திருபுவனி! உன்னை நான் என்னமோ என்று பார்த்தேன்!"

"உதவ மாட்டீர்களா?"

"உனக்கென்று எவனுவது பிறந்திருப்பான். அவன் கிடைக்கும் வரை காத்திருப்பதுதான் புத்திசாலித்தனம். ஏனென்ருல் அண்ணனுக்கென்று ஒரு புண்ணியவதி பிறந்துவிட்டார்கள்!"

"அந்த நாட்டுப்புறப் பெண்தானே!"

"அவர்கள்தான் அண்ணன் நாயகனுக்கேற்ற நாயகி; பெயரும் நாயகி!"

"முடிவாகி விட்டதா?"

"நாளும் குறிப்பிட்டாய் விட்டது. அதே மேடை உனக்கும் எனக்கும் கூட தீர்மானமாகி இருக்கிறது. ஆனுல் நான் மறுத்துவிட்டேன்."

"ஏன்!"

"உன்னை மணப்பதைவிட அந்த எமனுடைய மனைவியைச் சிறையெடுத்து வந்து வைப்பாட்டியாக்கிக் கொள்வேன்!"

திருபுவனிக்குச் சிரிப்பு வந்தது. ஆனாலும் அவளால் வாய் விட்டுச் சிரிக்க முடியவில்லை. அவள் வந்த வழி நோக்கிச் சூன்யமான உள்ளத்துடன் நடந்தாள்.

**மு**றைப்படி பெண் பார்த்துப் பரியம் போட்டுக் குறிப்பிட்ட நன்னாளில் நாயகனுக்கும் நாயகிக்கும் அமர்க்களமாக மங்கல மேளம் முழங்கத் திருமணம் நடந்தேறியது.

பல்லவ அரசர் சிம்மவர்மர் நேரில் வந்திருந்து வாழ்த்தியருளினார்!

ஆனால் திருபுவனி?

நாயகனுடைய திருமணத்தை முன்வைத்துச் சிறைச் சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட தந்தை சித்திராதித்தனோடு மயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்!

சித்திராதித்தன் வாழ்வில் திருந்துகிறானோ இல்லையோ, செல்லையனுக்கு அவன் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வைத்தாலும் வியப்பதற்கில்லை.

பகற்போதின் நாயகனான கதிரவன், இரவின் நாயகியான நிலாக்கன்னியை நோக்கிப் பயணமாகிக் கொண்டிருந்தான்!

சொர்க்கமென்பது மனித இதயமானால், திருமணங்கள் அங்குத்தான் நிச்சயிக்கப்படுகின்றன!